

ஞாயிறு இதழ்
19.01.2025 - ஞாயிற்றுக்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

விலை ரூபா 80

ஆண்டு: 01 இதழ் : 15 குரோதி வருடம் தை மாதம் 06 ஆம் நாள் - ஹிஜ்ரி 1446 ரஜப் 19 பக்கங்கள் - 12 + XII




## சிச்சுவான்: சீன கம்யூனிஸ்ட் கட்சி செயலாளருடன் ஜனாதிபதி சந்திப்பு

சீனாவிற்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கும் சிச்சுவான் மாகாண சீன கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் வேங்க் சியூஹுய் (Wang Xiaohui)க்கும் இடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை (17) நடைபெற்றது.

வரலாற்று மற்றும் கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாத்து, அபிவிருத்தியின் விடியலைக் கண்டுள்ள சிச்சுவான் மாகாணத்தின் செங்டு நகரம், சீனாவில் மகிழ்ச்சியான மக்களைக் கொண்ட நகரங்களில் ஒன்றாக முன்னணி இடத்தைப் பிடித்துள்ளது. 02 →

## மின்சார கட்டணம்! 20 வீதம் குறைப்பு

### மக்கள் கோரிக்கைக்கு இணங்கியது பொது பயன்பாடுகள் ஆணைக்குழு

(கனூஷியா புஷ்பகுமார்)

மின் கட்டணத்தை 20 வீதத்தால் குறைக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதன்படி, வெள்ளிக்கிழமை (17) நள்ளிரவு முதல் இது அமுல்படுத்தப்படும் எனவும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சார கட்டண திருத்தம் தொடர்பான இறுதி அறிக்கையை வெள்ளிக்கிழமை (17) இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிட்டது.

அதன்படி, வீட்டுப் பிரிவின் கீழ், 0-30 வரையிலான அலகுகளுக்கான கட்டணம் 6 ரூபாவிலிருந்து 4 ரூபாவாகவும், 02 →



Domestic Bill Calculator

| No. of Units | Previous Bill (Rs.) | Revised Bill (Rs.) | % Change |
|---|---|---|---|
| 150 | 5,460.00 | 4,170.00 | -23.6% |

| No. of Units | Previous Bill (Rs.) | Revised Bill (Rs.) | % Change |
|---|---|---|---|
| 30 | 280.00 | 195.00 | -30.4% |
| 60 | 700.00 | 500.00 | -28.6% |
| 90 | 1,840.00 | 1,480.00 | -19.6% |
| 120 | 3,340.00 | 2,680.00 | -19.8% |
| 150 | 5,460.00 | 4,170.00 | -23.6% |
| 180 | 6,720.00 | 5,160.[illegible] | [illegible] |
| 210 | 8,810.00 | 7,220.[illegible] | [illegible] |
| 240 | 10,760.00 | 8,780.[illegible] | [illegible] |
| 270 | 12,710.00 | 10,340.[illegible] | [illegible] |
| 300 | 14,660.00 | 11,900.[illegible] | [illegible] |



## ஜனாதிபதி அநுரவின் சீன பயணம் வெற்றிகரமாக நிறைவு



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, கடந்த 14ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை சீன மக்கள் குடியரசிற்கு மேற்கொண்டிருந்த உத்தியோகபூர்வ விஜயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார்.

சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங்கின் அழைப்பின் பேரில் மேற்கொள்ளப்பட்ட இவ்விஜயமானது, இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால பாரம்பரிய நட்பில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் 02 →

## பிரிட்டிஷ் தூதுவருடன் மனோ கணேசன் சந்திப்பு



(க.கிஷாந்தன்)

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஆண்ட்ஷரூ பேட்ரிக் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் ஆகியோருக்கும் இடையிலான 02 →

## சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் எவரும் இல்லை என்றால்... அவர்களை காணாமலாக்கியது யார்?

### அருட்தந்தை மா.சத்திவேல் கேள்வி

அரசியல் கைதிகள் என்று எவரும் சிறையில் இல்லை எனக் கூறுவார்களாயின் அவர்களை காணாமல் ஆக்கியது யார்? என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட் தந்தை மா.சத்திவேல் கேள்வி



யெழுப்பியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் நிபந்தனை இன்றி விடுதலை செய்யப்படல் வேண்டும் 02 →

## ஜம்இய்யத்துல் உலமாவுக்கும் பிரதமருக்குமிடையில் சந்திப்பு



செய்தி 2 ஆம் பக்கம்




←06




←12




←I




←III

## சிறுவனுடன் நீர்த்தேக்கத்தில் குதித்த தாய் : சிறுவன் சடலமாக மீட்பு

(க.கிஷாந்தன்)

குடும்ப தகவாறு காரணமாக தனது நான்கு வயது மகனுடன் தாயொருவர், தற்கொலை செய்துகொள்ளும் நோக்குடன் தலவாக்கலை, மேல்கொத்மலை நீர்த்தேக்கத்துக்குள் (16) ஆம் திகதி மாலை குதித்துள்ளார்.

இதன் போது காணாமல் போன 4 வயது சிறுவனின் சடலம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது. 02 →

## வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நிதி ஒதுக்கீடுகள் இல்லை : பொருளியல் பேராசிரியர்

(கனூஷியா புஷ்பகுமார்)



ஒதுக்கீட்டு சட்டமூலத்தை பார்க்கும்போது, தற்போதைய அரசாங்கம் தேர்தலுக்கு முன்பு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான அடித்தளத்தை அமைக்கத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார விஞ்ஞானம் மற்றும் புள்ளிவிபர ஆய்வுப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

பிரதான பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த பேராசிரியர், அவர்கள் தேர்தலுக்கு முன்னர் மக்களுக்கு வெவ்வேறான வாக்குறுதிகளை வழங்கியது மாத்திரமன்றி கொள்கை விளக்கவுரையிலும் வெவ்வேறான விடயங்கள் உள்ளடக்கப்பட்டன.

2025 பட்ஜெட்டில் குறித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான 02 →

## ‘கிளீன் ஶ்ரீ லங்கா’ திட்டம் அடுத்தவாரம் சபையில் இரண்டுநாள் விவாதம்



நாடாளுமன்றம் 2025 ஜனவரி 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் (வைத்திய கலாநிதி) ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நடைபெற்ற 02 →

## வீதி விபத்து: கண்ணுக்கு தெரியாத பயங்கரவாதம்



கண்ணுக்குத் தெரியாத பயங்கரவாதமாக வீதி விபத்துகள் இருப்பதுடன், தினமும் 9 பேர் வீதி விபத்துகளால் உயிரிழக்கின் றனர் என பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

‘புதிய அரசாங்கத்துடன் பொலிஸாரின் பங்கு’ என்ற தலைப்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே பொலிஸ்மா அதிபர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், தூய்மை இலங்கை திட்டத்துடன் இணைந்து காவல்துறையினர் மேற்கொண்ட போக்குவரத்து நடவடிக்கைகள் காரணமாக, வாகன விபத்துகளால் ஏற்படும் தினசரி 02 →

## ஓமான் சென்று தொடர்பு இழந்திருந்த மட்டு யசோமலர் திடீரென வீடு திரும்பினார்

(வெல்லாவெளி நிருபர்)



மட்டக்களப்பு முனைக்காடு கிராமத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் 2022ஆம் ஆண்டு ஓமான் நாட்டிற்கு வேலைக்குச் சென்று குடும்பத்தாரோடு தொடர்பில்லாமல் இருந்தார். இந்தப் பெண் திடீரென வீடு வந்து சேர்ந்ததாக குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஒரு வருடமாக எது வித தொடர்புகளும் இல்லாமல் இருப்பதாகவும், அவரை உரிய 02 →

## கோட்டாபய ராஜபக்ஷ சிஐடியில் வாக்குமூலம்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெள்ளிக்கிழமை (17) காலை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் காணி மோசடி தொடர்பில் வாக்குமூலம் ஒன்றை வழங்கியுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோரை (17) குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறு விடுக்கப்பட்ட அறிவிப்பைத் தொடர்ந்து இவர்கள் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

மனிதத்தின் குரலாக - உங்களில் ஒருவனாக: ஒருவன்

# ஜம்இய்யத்துல் உலமாவுக்கும் பிரதமருக்குமிடையில் சந்திப்பு

அரபுக் கல்லூரிகள் மற்றும் இஸ்லாம் பாட மௌலவி ஆசிரியர் நியமனத்தில் நிலவும் சிக்கல்கள் குறித்தும் கல்வி ரீதியாக முஸ்லிம்கள் எதிர்கொள்ளக்கூடிய சவால்கள் பற்றியும் பிரதமர் ஹறிணி அமரசூரியவுக்கு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் பொதுச் செயலாளர், உதவிப் பொதுச் செயலாளர், உப குழுக்களின் செயலாளர்கள் மற்றும் உறுப்பினர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

இச்சந்திப்பில், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் வரலாறு மற்றும் கடந்த காலப் பணிகள் குறித்த அறிமுகம் செய்யப்பட்டன.

அனைத்து இலங்கையர்களும் ஒற்றுமையுடனும் நல்லிணக்கத்துடனும் வாழ்வ தற்கான வழிகாட்டுதல்களை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா எப்போதும் வழங்கி வருபது தெளிவுபடுத்தப்பட்டது.

மேலும், ஆலிம்கள் இந்நாட்டிற்கு ஆற்றியுள்ள சேவைகள் தொடர்பான விளக்கங்கள் பிரதமருக்கு வழங்கப்பட்டன.

கல்வி ரீதியாக முஸ்லிம்கள் எதிர்கொள்ளக்கூடிய சவால்கள், அரபுக் கல்லூரிகள் எதிர்கொள்ளும் சவால்கள் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்தும் தெளிவாக சுட்டிக் காட்டப்பட்டன.

இதனையடுத்து பிரதமர் ஹறிணி அமரசூரிய, தனது அதிகாரத்தின் கீழ் எல்லோருக்கும் பொதுவான, சமமான முறையில் கல்வி கற்கக்கூடிய சூழல் உருவாக்கப்படும் என தெரிவித்தார்.

அதற்கு முஸ்லிம் சமுதாயத்தின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் தனித்துவங்கள், வேறுபாடுகள் இருந்த போதிலும் அனைவரும் நாட்டின் பிரஜைகள் என்ற அடிப்படையில் சகலரது உரிமைகளும் பேணிப் பாதுகாக்கப்படும்.

சூழல் நாட்டில் உருவாக்கப்பட வேண்டியதை வலியுறுத்திய பிரதமர் ஹறிணி , அதற்கும் முஸ்லிம் சமூகத்தின் ஒத்துழைப்பு அவசியம் என்று கருத்துத் தெரிவித்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி....

### சிச்சுவான்: சீன...

பொருளாதார அபிவிருத்தியில் முன்னணியில் இருக்கும் சிச்சுவான் மாகாணத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதாரம், வர்த்தகம், கலாசாரம், சுற்றுலாத்துறை மட்டுமன்றி அரசுகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் அவற்றை புதிய நிலைக்கு உயர்த்துவது குறித்து இந்த சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

எரிசக்தி உட்பட பல துறைகளில் சிச்சுவான் மாகாணம் அடைந்துள்ள சாதனைகளை இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளுமாறு மாகாண செயலாளருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். இலங்கை தற்போது பொருளாதார ரீதியாக ஸ்தீரமடைந்து வருவதாகவும், வெளிப்படையான ஆட்சியின் கீழ் முதலீட்டிற்கு மிகவும் சாதகமான சூழல் தற்போது நாட்டில் இருப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

இலங்கை தற்போது அரசியலில் ஒரு திருப்புமுனையில் இருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, வடக்கு, கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு மக்கள் ஒன்றிணைந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கி தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவந்துள்ளதாகவும் அந்த ஆணையின் ஊடாக மக்கள் தங்கள் மீது வைத்திருக்கும் எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்ற அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சீன சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை ஒரு சிறந்த தளம் என்று கூறிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, சிறந்த விருந்தோம்பலுடன் கூடிய இலங்கைக்கு வருகை தருமாறு சிச்சுவான் மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்

### ஜனாதிபதி அநுரவின்...

குறிக்கும் வகையிலும், இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்தும் வகையிலும் அமைந்திருந்தது.

15ஆம் திகதி சீன மக்கள் மண்டபத்தில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சம்பிரதாயபூர்வமான மரியாதையுடன் சீன ஜனாதிபதியால் வரவேற்கப்பட்டார்.

பொருளாதார மற்றும் வர்த்தக மேம்பாடு, முதலீடு, சுற்றுலா, டிஜிட்டல் மாற்றம் மற்றும் பல்தரப்பு மன்றங்களில் ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகள் குறித்து இரு தலைவர்களும் கலந்துரையாடினர். இறையாண்மை சமத்துவம் மற்றும் அமைதியான சகவாழ்வின் அடிப்படையில் இருதரப்பு உறவுகளை மேலும் ஒருங்கிணைப்பதற்கான தங்கள் உறுதிப்பாட்டை இரு தலைவர்களும் இதன்போது மீண்டும் உறுதிப்படுத்தினர்.

கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, ஜனாதிபதி திசாநாயக்காவை கௌரவிக்கும் வகையில் ஜனாதிபதி ஷி ஜின் பிங்கினால், அரசு விருந்தொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ஷி ஜின் பிங்கிற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

சீனப் பிரதமர் லீ சியாங், இலங்கை ஜனாதிபதியை வரவேற்று, அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு, வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு உள்ளிட்ட பரஸ்பர ஆர்வமுள்ள விடயங்கள் குறித்து உரையாடினார். ஜனாதிபதி திசாநாயக்க, சீன தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுவின் தலைவர் ஜாஓ லெர்ஜியையும் சந்தித்து ஒத்துழைப்புக்கான துறைகள் குறித்து ஆலோசித்தார்.

உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, இரு தரப்பினரும் 15 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பரிமாறிக் கொண்டனர்.

பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, முதலீடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு செயற்பாட்டுக்குழுவை நிறுவுதல், சீனாவிற்கு விவசாயப் பொருட்களுக்கான சந்தை அணுகல், ஊடகம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டில் ஒத்துழைப்பு ஆகிய இவ்வொப்பந்தங்களில், சீன அரசாங்கத்திடமிருந்தான 500 மில்லியன் சீன யுவான்கள் மானியமாக வழங்கப்படவுள்ளன.

3.7 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள ஏற்றுமதி சார்ந்த பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுவது தொடர்பாக சினோபெக் குழுமத்துடன் ஒரு கூட்டு அறிக்கையும் கைச்சாத்திடப்பட்டது.

சீன அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் (SOE) மற்றும் நிறுவனங்களின் உயர்மட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்ட "இலங்கையில் முதலீடு செய்யுங்கள்" வட்டமேசை மாநாட்டிலும் ஜனாதிபதி திசாநாயக்க உரையாற்றினார்.

### பிரிட்டிஷ் தூதுவருடன்

விசேட கலந்துரையாடலொன்று கொழும்பில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் இல்லத்தில் நடைபெற்றது.

இந்த சந்திப்பு இலங்கையின் சமூக-பொருளாதார தேசத்தைக் கட்டியெழுப்பும் செயல்பாட்டில் இங்கிலாந்தின் வகிபாகம் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், மலையக மக்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்கள், குறிப்பாக பெருந்தோட்ட மக்களின் உரிமைகள் மற்றும் நிர்வாக கட்டமைப்பில் உள்ள குறைப்பாடுகள் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

"எமது சமூகத்தின் மீட்சிக்கு பிரிட்டிஷ் அரசின் கடமையை நாங்கள் நல்லெண்ணத்துடன் நினைவூட்டினோம் என்று மனோ கணேசன் குறிப்பிட்டார்.

நில உரிமைகள், தேசிய நீரோட்டத்தில் ஒருங்கிணைப்பு மற்றும் அதிகாரப் பகிர்வு ஆகிய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பில் ஜனநாயக மக்கள் முன்னணியில் சர்வதேச விவகார மற்றும் தொடர்பாடல் உப தலைவர் பாரத் அருள்சாமியும் இச்சந்திப்பில் கலந்து கொண்டார்.

### சிறையில் தமிழ் அரசியல்...

என்பதும் பயங்கரவாத தடை சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதும் தமிழர்களின் மிக நீண்ட கால அரசியல் கோரிக்கையாகும்.

தமிழர் தாயக மண்ணான வவுனியாவில் ஜனாதிபதி தேர்தல் பிரசார மேடையில் நின்று தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க நாம் பதவிக்கு வந்தால் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம், இதற்கு தெற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என உறுதியளித்து சென்றதன் ஈரம் காயும் முன்னே அவர் அரசாங்கத்தின் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அரசியல் கைதிகள் என்று சிறைகளில் எவரும் இல்லை என குறிப்பிட்டுள்ளமை, அவர்களின் அரசியல் அநாகரித்தை அம்பலப்படுத்தி உள்ளதோடு வாக்களித்த தமிழர்களையும் ஏமாற்றி தமிழர்களின் அரசியலை அவமானப்படுத்தி உள்ளமையை வன்மையாக கண்டிக்கின்றோம்.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அரசியல் கைதிகள் உள்ளனர். அவர்களை விடுதலை செய்வோம் என்று கூறி பதவிக்கு வந்ததும் அரசியல் கைதிகள் என்று எவரும் சிறையில் இல்லை எனக்கூறுவார்களாயின் அவர்களை காணாமல் ஆக்கியது யார் ?

இதற்கு முன்னரும் மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருப்பவர்கள் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றே குறிப்பிட்டிருந்தார்.அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று குறிப்பிடப்படவில்லை.

இது அரசாங்கத்திற்குள் பிளவையே வெளிபடுத்துகின்றது? தமிழர்களின் அரசியல் சார்ந்த விடயங்களில் எந்த ஒரு துளி நகர்வையேனும் தேசிய மக்கள் சக்தி மேற்கொள்ளப் போவதில்லை என்பதும் இதன்மூலம் தெளிவாகின்றது.

கடந்த கால ஆட்சியாளர்களைப் போல் பேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் தமிழர்களின் அரசியலை பயங்கரவாதத்திற்குள் முடக்கி பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றுக் கொடுத்து சிங்கள பௌத்த பேரினவாதத்தை மகிழ்விக்கவே முன் நிற்கின்றது என்பது தெளிவாகின்றது.

தற்போது சிறைகளில் 10 பேருக்கும் குறைவான அரசியல் கைதிகளே உள்ளனர். இவர்களில் மரண தண்டனை கைதிகளும் உள்ளனர். இவர்களை பயங்கரவா தடை சட்டத்திற்கு வெளியே எடுத்து விடுதலை செய்யக்கூடாது என்பதில் பேரினவாத ஆட்சியாளர்கள் உறுதியாக உள்ளதோடு தண்டனை காலத்தையும் கடந்து சிறையில் வாடும் அவர்களின் வாழ்வை சிறைக்குள்ளேயே கொலை செய்வதற்கும் முயற்சிப்பதாகவே தோன்றுகின்றது.

கடந்த காலங்களில் அரசியல் கைதிகள் தங்கள் விடுதலையை வலியுறுத்தி சிறைக்குள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தனர். சாகும் வரையான உண்ணாவிரத போராட்டத்தையும் தொடர்ந்தனர். இவர்களின் விடுதலைக்காக தமிழர் தாயகத்திலும் கொழும்பிலும் சிங்கள மக்களின் ஆதரவோடு பல்வேறு வடிவங்களில் விடுதலைக்கான முயற்சிகள் மேற்கண்ட போதும் அது பலன் அளிக்கவில்லை.

நல்லாட்சி எனக்கூறப்படும் மைத்திரி–ரணில் ஆட்சிக்காலத்தில் அமைச்சுப் பதவிகளில் இருந்த தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களும், எதிர்க்கட்சியில் அமர்ந்து அரச சுகபோகங்களை அனுபவித்த தமிழ் தேசிய கூட்டமைப்பும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக ஆக்கப்பூர்வமான செயற்பாடுகள் எதிலும் ஈடுபடவில்லை என்பதை வேதனையோடு மீண்டும் வெளிப்படுத்துவதோடு, அரசியல் கைதிகள் விடயத்தில் இவர்களும் ஆட்சியாளர்களின் சிந்தனையிலேயே இருந்தனர் என்பதே உண்மை.

விடுதலைக்கான நீலி கண்ணீரையே வடித்தனர். தற்போது எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என ஊடகங்களுக்கு கூறுவது அரசியல் ஏமாற்று நாடகமே.

தமிழர் அரசியல் விடுதலைக்கான செயற்பாட்டினை போராளிகளும், மாவீரர்களும், அரசியல் கைதிகளும் உயிர்ப்புடன் வைத்திருந்தனர்.இன்றும் வைத்திருக்கின்றனர்(சோரம் போனவர்களைப் தவிர ஏனையோர்) என்பதை மறக்க முடியாது. இவர்களைத் தவிர்த்து அல்லது மறந்து விடுதலை அரசியல் செய்வது என்பது அரசியல் கொலைக்கு ஒப்பாகும்.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடகிழக்கு எங்கும் முன்னெடுக்கப்படும் கையெழுத்துப் போராட்டம் மேலும் வலுப்பெறல் வேண்டும். இது குறுகிய அரசியல் நோக்கத்திற்கு அப்பால் நிகழ் வேண்டும் என்பதே மக்கள் எதிர்பார்ப்பு.

### வீதி விபத்து:

உயிரிழப்புகள் குறைந்துள்ளதாக பதில் அமைச்சர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

'புதிய அரசாங்கத்துடன் காவல்துறையின் பங்கு' என்ற தலைப்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற சிறப்பு ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற அவர்,

போக்குவரத்து விபத்துகளால் தினமும் இறப்பவர்களின் எண்ணிக்கை, யுத்தத்தின் போது இறந்தவர்களின் எண்ணிக்கையை விட அதிகமாக உள்ளது.

இது கண்ணுக்குத் தெரியாத பயங்கரவாதம். வீதிச் சட்டங்களையும் ஒழுக்கத்தையும் பேணுவது மிகவும் முக்கியமானது.

அண்மைய நாட்களில் சாலை விபத்துகளால் தினமும் 9 பேர் இறக்கின்றனர். இந்த எண்ணிக்கை தற்போது 4 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. சில நாட்களில் இது 2 ஆகக் கூட குறைந்துள்ளது.

வீதி விபத்துகளால் ஒரு நாளைக்கு 10-15 பேர் நிரந்தரமாக ஊனமடைகின்றனர். போரின் போது ஒரு நாளைக்கு 4-5 பேரே உயிரிழந்திருந்தனர்.

பொலிஸாரால் தொடங்கப்பட்ட போக்குவரத்து நடவடிக்கைகள் காரணமாக, கடந்த டிசம்பர் 25 ஆம் திகதி கிறிஸ்துமஸ் தினத்தன்று எந்தவொரு போக்குவரத்து விபத்துகளும் பதிவாகவில்லை. இது ஒரு சிறந்த சந்தர்ப்பம்.

புதிய அரசாங்கத்தின் கொள்கைகளால் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு இனி அரசியல் பாதுகாப்பு கிடைக்காது. வெளிநாடுகளில் உள்ள குற்றவாளிகள் தொடர்பான சிவப்பு அறிவிப்புகளைப் பெற்று இலங்கைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தும் பொறுப்பு பொலிஸாருக்கு உள்ளது. கடந்த காலங்களில் குற்றங்களை அடக்குவதற்கு சரியான நடவடிக்கை எடுக்கத் தவறியதால் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குற்றங்களின் அதிகரிப்புக்கு வெளிநாட்டில் இருந்து வழிநடத்துபவர்களும் காரணமாகும்." என்றார்

### மின்சார...

31-60 வரையிலான அலகுகளுக்கான கட்டணம் 9 ரூபாவிலிருந்து 6 ரூபாவாகவும் குறைக்கப்படும்.

ஹோட்டல்களில் 31 வீதத்திலும், தொழில்துறைகளில் 30 வீதத்திலும், பொதுத்துறைக்கு 12 வீதத்திலும் மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

அரச நிறுவனங்களுக்காக 11 வீதமாகவும், வீதி விளக்குகளுக்காக 11 வீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளன.

அண்மைய தினங்களாகவே மின்சாரக் கட்டணத்தை குறைப்பதற்கு மின்சார சபை எதிர்ப்பு தெரிவித்து வந்தது.

இவ்வாறான பின்னணியில், மின்சாரக் கட்டணத்தை குறைக்க மின்சார சபை நடவடிக்கை மேற்கொள்ளவில்லையெனில், அதில் தலையிட்டு மின் கட்டண குறைப்பை அமுல்படுத்த முன்வருவதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

இது தொடர்பில் நாடாளுமன்றத்திலும் கேள்விகள் எழுப்பப்பட்டன.

இதேவேளை, மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பாக ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கிய பொது ஆலோசனை செயல்முறை கடந்த ஆண்டு டிசம்பர் 17ஆம் திகதி ஆரம்பித்து நிறைவடைந்திருந்தது.

அந்த அமர்வுகளின் போது சுமார் 400 நபர்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்ததாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

பொதுமக்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை பரிசீலித்தபோது, மின்சாரக் கட்டணத்தை சுமார் 20 வீதம் குறைக்க வேண்டும் என்பது தெரியவந்துள்ளது.

அதன் அடிப்படையிலேயே, மின் கட்டணத்தை 20 வீதத்தால் குறைக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது

### சிறுவனுடன் நீர்த்தேக்கத்தில்...

தினேஷ் ஹம்சின் என்ற சிறுவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குடும்ப தகராறு காரணமாக தனது நான்கு வயது மகனுடன் தாயொருவர், தற்கொலை செய்துகொள்ளும் நோக்குடன் தலவாக்கலை, மேல்கொத்மலை நீர்த்தேக்கத்துக்குள் (16) ஆம் திகதி மாலை குதித்துள்ளார்.

தலவாக்கலை பொலிஸாரும், மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தின் பாதுகாப்பு அதிகாரிகளும் இணைந்து முன்னெடுத்த தேடுதலின்போதே சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த தாய் மீட்கப்பட்டு லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிறுவன் காணாமல் போயிருந்த நிலையிலேயே வெள்ளிக்கிழ சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

41 வயதான குறித்த பெண்,கணவரை பிரிந்து பூண்டுலோயா பகுதியை சேர்ந்த மற்றுமொரு நபருடன் வாழ்ந்துள்ளார். அந்நபர் மற்றுமொரு திருமணம் செய்துகொள்வது தொடர்பில் எழுந்த பிரச்சினையாலேயே இப்பெண் தற்கொலை செய்துகொள்வதற்கு முற்பட்டுள்ளார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

மரண விசாரணைகளின் பின் சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து தலவாக்கலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### வாக்குறுதிகளை...

அடிப்படை அடித்தளத்தை இட வேண்டிய கட்டாயம் இருந்தது. எனினும், அவ்வாறான அடித்தளத்தை தயாரிப்பதற்கான தயார் நிலை ஒதுக்கீட்டு சட்டமூலத்தை பார்க்கும் போது எங்களுக்கு தெரியவில்லை.

உண்மையிலேயே, அரசாங்கத்திற்கு இந்த வரவு-செலவு திட்டத்தை சர்வதேச நாணய நிதியத்தின் வழிக்காட்டல்களுக்கு அமைவாக திட்டமிட வேண்டிய நிலை உள்ளது என்பது உண்மை.

சர்வதேச நாணய நிதியமும் ஒரு சில வழிக்காட்டல்களை வழங்கியுள்ளன. உண்மையிலேயே, எங்களுக்கு சர்வதேச நாணயநிதியம்வழங்கியவழிக்காட்டல்களைவிடமுன்னோக்கி செல்ல முடியும். எனினும், பின்னோக்கி பயணிக்க முடியாது. இந்தப் புரிதலுடன் பொருளாதார வல்லுநர்கள் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும். உண்மையில், கடந்த நிலைமைகளுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் பொருளாதாரம் ஒரு நல்ல அடித்தளத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

இப்போது அந்த நிலையான பொருளாதாரத்தை வளர்ச்சியடைய செய்ய வேண்டும்.

நாங்கள் உண்மையிலேயே எதிர்பார்ப்பது அதற்கான வளர்ச்சிக்கான பட்ஜெட்டைத்தான்.

அரசாங்கம் அதை நோக்கிச் செயல்பட வேண்டும் என்பது எனது கருத்து.

எனினும், அது அரசாங்கத்தின் தரப்பில் நடக்குமா என்பது எனக்குத் தெரியவில்லை." எனத் தெரிவித்தார்

### 'கிளீன் ஸ்ரீ லங்கா'...

நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலியே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஜனவரி 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான நாடாளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து, மு.ப. 10.00 மணி முதல் மு.ப. 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 11.00 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர், மு.ப. 11.30 முதல் பி.ப. 5.30 வரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் 'கிளீன் ஸ்ரீ லங்கா' திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் இடம்பெற்று, 22 ஆம் திகதி புதன்கிழமை இரண்டாவது நாள் விவாதத்துக்காக ஒத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

ஜனவரி 22 ஆம் திகதி புதன்கிழமை, மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான நாடாளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மு.ப. 10.00 மணி முதல் மு.ப. 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 11.00 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து, மு.ப. 11.30 முதல் பி.ப. 5.30 வரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் 'கிளீன் ஸ்ரீ லங்கா' திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் இரண்டாவது நாளாகவும் இடம்பெறும்.

ஜனவரி 23 வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான பாராளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து, மு.ப. 10.00 மணி முதல் மு.ப. 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 11.00 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஓமான் சென்று தொடர்பு

முறையில் மீட்டுத் தருமாறு அவரது குடும்பத்தினர் ஊடகங்கள் வாயிலாக வேண்டுகோள் விடுத்திருந்தனர். 11.01.2025 ஆம் திகதி திடீரென தங்களது வீட்டிற்கு வந்து சேர்ந்துள்ளார்.

இவர் மட்டக்களப்பு மாவட்டம் முனைக்காடு கிராமத்தைச் சேர்ந்த இராசலிங்கம் யசோமலர் என்பவராவார். கடந்த ஒரு வருடங்களாக எது வித தொடர்புகளும் இல்லாமல் இருப்பதாகவும் அவரை உரிய முறையில் மீட்டுத் தருமாறு அவரது குடும்பத்தினர் கடந்த 19.12.2024 அன்று ஊடகங்கள் வாயிலாக வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

ஓமான் நாட்டுக்குச் சென்ற குறித்த பெண், கடந்த 11.01.2025 ஆம் திகதி திடீரென தங்களது வீட்டிற்கு வந்து சேர்ந்துள்ளார். இவர் தொடர்பாக ஊடகங்கள் வாயிலாக அறிவித்து, ஒரு மாதத்திற்குள்ளேயே எமது அக்காவை மீட்டுத் தருவதற்கு பேருதவியாக இருந்து செயற்பட்ட ஊடகங்களுக்கு நாங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக குறித்த பெண்ணின் சகோதரிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் குறித்து உரிய குடும்பத்தினர் கடந்த வியாழக்கிழமை (16) மாலை அவரது வீட்டில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தனர். இதன்போது அவர்கள் மேலும் தெரிவிக்கையில்.

"தான் வெளிநாடு சென்று 2 வருடங்கள் ஆகின்றன. அதில் ஒருவருட காலத்திற்கான வேதனத்தை நான் தொழில் புரிந்த வீட்டின் உரிமையாளர் எமது குடும்பத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்தார். மற்றைய வருடத்திற்குரிய வேதனம் எதனையும் அவர்கள் எமது வீட்டிற்கு அனுப்பவில்லை, என்னை அடித்து துன்புறுத்தினார்கள். மொட்ட மாடியில் வெயிலில் முழங்காலில் நிற்குமாறும் பணித்தார்கள், கரண்டியை சூடாக்கி காலில் வைத்தார்கள். இவ்வாறு பல கொடுமைகளை நான் அங்கு அனுபவித்தேன்" இவ்வாறு கூறினார்.

# ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு இனிமேல் அரசியல் தஞ்சம் கிடையாது

## பதில் பொலிஸ் மா அதிபர்

புதிய அரசாங்கத்தின் கொள்கை விளக்கங்களில், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு இனிமேல் அரசியல் தஞ்சம் கிடைக்காதென்று பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய கூறுகிறார்.

"புதிய அரசின் வேலைத்திட்டத்தில் பொலிஸாரின் பங்கு" என்ற தலைப்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர், வெளிநாடுகளில் உள்ள குற்றவாளிகள் தொடர்பான சிவப்பு




அறிவிப்புகளைப் பெற்று இலங்கைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். மிக விரைவில் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தும் பொறுப்பு பொலிஸாருக்கு உள்ளது என்பதை வலியுறுத்திய பிரதி பொலிஸ் மா அதிபர், கடந்த காலங்களில் குற்றங்களை கட்டுப்படுத்துவதற்கு சரியான நடவடிக்கை எடுக்கத் தவறியதால் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதற்கிடையில், குற்றங்களின் சமீபத்திய அதிகரிப்பு குறித்து கருத்து தெரிவித்த அவர், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் வெளிநாட்டில் இருந்து கொண்டே குற்றங்களைச் செய்கிறார்கள்.

மேலும், நாம் காணும் மற்றொரு கசப்பான உண்மை என்னவென்றால், இந்தக் குற்றவாளிகள் சிறைக்குள் இருந்து கொண்டு குற்றங்களை ஒழுங்கமைக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகளில் நாங்கள் தொடர்ந்து சந்தித்து வருகிறோம், மேலும் அந்தக் குற்றங்களைக் குறைக்கவும் பாடுபடுகிறோம் என தெரிவித்தார்.

# பிரதமர் ஹரிணி-பெருந்தோட்ட மக்கள் குரல் அமைப்பு விசேட சந்திப்பு



பிரதமர் ஹரிணி அமரசூரியவிற்கும் பெருந்தோட்ட மக்கள் குரல் அமைப்பின் உறுப்பினர்களுக்கும் இடையே பிரதமர் அலுவலகத்தில் விசேட சந்திப்பொன்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நாட்டின் தெற்கு மற்றும் மேற்கு மாகாணங்களில் வாழும் ஒடுக்கப்பட்ட சமூகமாக கருதப்படும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நிலம், வீட்டுவசதி, கல்வி மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் இதன் போது விரிவாக விவாதிக்கப்பட்டன.

தெற்கு மற்றும் மேற்கு மாகாணங்களில் வாழும் மலையக மக்களின் அடிப்படைக் கோரிக்கைகள் அடங்கிய அறிக்கைக்கு பிரதமர் விசேட கவனம் செலுத்தியுள்ளார். மேலும் குழந்தைகளின் கல்வி மற்றும் தொழிற்கல்வி வசதிகள் தொடர்பாக நேரடியாகத் தலையிட்டு செயற்படுவதாகவும், உட்கட்டமைப்பு வசதிகள், நிலம் மற்றும் வீட்டுவசதி பிரச்சினைகள் தொடர்பான கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் தெரியப்படுத்தி அதற்கான தீர்வுகளை வழங்குவதாக பிரதமர் கூறினார்.

இந்த கலந்துரையாடலில் பெருந்தோட்ட மக்கள் குரல் அமைப்பின் நிர்வாக இயக்குநர் அந்தோணி இயேசுதாசன், திட்ட இயக்குநர் திருமதி. ரவினா ஹசந்தி, தேசிய திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. ராஜன் மற்றும் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கல்விக்கு வறுமை தடையாகக்கூடாது



மாணவர்களின் கல்விக்கு வறுமை ஒருபோதும் தடையாக அமைந்துவிடக்கூடாதென தெரிவித்த வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வாழ்க்கையில் கடினமாக உழைத்தால், எதையும் சாதிக்கலாமென்றும் தெரிவித்தார். நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் விளிம்பு நிலையிலுள்ள மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கல்வி வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானது. கல்வியில்லாதவர்கள் இரண்டு கண்களும் இல்லாமைக்குச் சமமானவர்கள். நான் யாழ். மாவட்டச் செயலாளராக இருந்த காலத்தில், பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் என்னைச் சந்திக்க வந்திருக்கின்றனர்.

பிள்ளைகள் கற்பதற்கு ஆர்வமாக இருந்தபோதும் அவர்களுக்குச் சீருடைகள், கற்றல் உபகரணங்கள் இல்லாமல் இருக்கின்றன. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் கல்வியைக் கைவிடக்கூடாது.

வறுமையில் இருப்பவர்களுக்கு உதவுவதற்கு எமக்கு எந்தவொரு சுற்றறிக்கைகளும் தடையாக இருக்கப்போவதில்லை. நாம் சரியானதைச் சரியாகச் செய்தால், எதற்கும் பயப்படத் தேவையில்லை.

யாழ்ப்பாண பிரதேச செயலாளர் சுதர்சன், ஏனைய பிரதேச செயலாளர்களிலிருந்து வித்தியாசமானவர். அவர் தற்துணிவு அதிகமுடையவர். இன்று உங்களுக்கான கற்றல் உபகரணங்களை அவர் பெற்றுத் தந்திருக்கின்றார். வறுமையைப் போக்க அவர் எடுக்கும் நடவடிக்கைகள் சிறப்பானவை என்றார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் தை மாதம் 06ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை

**மேஷம்** இன்று நம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி கிடைக்கும்.

**ரிஷபம்** இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது.

**மிதுனம்** இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நாள்.

**கடகம்** பொறுமை மற்றும் உறுதியை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

**சிம்மம்** இன்று மிதமான பலன்களே கிடைக்கும்.

**கன்னி** இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது.

**துலாம்** இன்று உங்கள் முயற்சிகளில் நல்ல பலன்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்** இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

**தனுசு** நன்மை மற்றும் தீமை இரண்டும் கலந்த பலன்கள் காணப்படும்.

**மகரம்** இன்று அதிக சிந்தனையுடன் காணப்படுவீர்கள்.

**கும்பம்** உங்கள் இலக்குகளை அடைவதற்கு சிறந்த நாள்.

**மீனம்** இன்றைய நாள் சுறுசுறுப்பாக இருக்கும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று காலை 05:35 வரை திரிதியை பின்பு சதுர்த்தி.

**நட்சத்திரம்:** இன்று பிற்பகல் 02:24 வரை மகம் பின்பு பூரம்.

**யோகம்:** மரண,சித்த.

**சந்திராஷ்டமம்:** உத்திராடம், திருவோணம்.

**சூலம்:** மேற்கு.

**இராகு காலம்:** 10:30 AM முதல் 12:00 PM வரை.

**குளிகை:** 07:30 AM முதல் 09:00 AM வரை.

**எமகண்டம்:** 03:00 PM முதல் 09:00 AM வரை.

# பேராதனை பல்கலையில் மாணவர் ஒன்று கூடல்கள் இடைநிறுத்தம்!

(எம்.ஏ. அமீனுல்லா)

பேராதனை பல்கலைக்கழக, முகாமைத்துவ மற்றும் பொறியியல் பீடங்களின் இரு மாணவர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் மற்ற பீடங்களுக்கும் பரவும் அபாயம் காரணமாக. ஒரு வார காலத்திற்கு, பொது மாணவர் சங்கம் மற்றும் பீடங்களுக்கான மாணவர் சங்கங்கள், மாணவர்கள் ஒன்று கூடுவது, கூட்டங்கள் நடத்துவது, மாணவர்களிடம் பேசுவது, உலாவுவது போன்ற நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் மூலம் துணைவேந்தருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 12ம் திகதி பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பிரியாவிடை விருந்தின் போது முகாமைத்துவ மற்றும் பொறியியல் பீட மாணவ இரு குழுக்களுக்கிடையில் மோதல் இடம்பெற்றதுடன், காயமடைந்த இரு மாணவர்கள் பேராதனை போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பின்னர் ஒரு மாணவர் கண்டி தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாக பேராதனை பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த மோதல் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ள போதிலும், மாணவர்கள் குழுவொன்று திரண்டு மீண்டும் மோதலுக்கு தயாராகியுள்ளதாக நிர்வாகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இருதரப்பு மாணவர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள குழப்பமான சூழலின் பின்னணியில், மாணவர்கள் ஒன்றுகூடல் தொடர்பான சந்திப்புகள் ஏனைய பீடங்களுக்கும் பரவும் அபாயத்தைக் கருத்தில் கொண்டு, அதன் மூலம் மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்து, சட்ட மீறல்களைத் தடுக்கவும் மற்றும் பல்கலைக்கழகத்தில் ஒழுங்கு மற்றும் பல பீடங்களின் எதிர்வரும் பரீட்சைகளுக்கு இடையூறு ஏற்படுவதை தடுக்கும் நோக்கில் உரிய தீர்மானம் எடுக்கப்பட்டதாக துணைவேந்தர் டெரன்ஸ் மதுஜித் தெரிவித்தார்.

# தேசிய பொங்கல் விழாவுக்கு யாழ் வந்தவர்களுக்கு வரவேற்பு



தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயிலில் சனிக்கிழமை நடைபெறும் தேசிய பொங்கல் விழாவில் கலந்துகொள்வதற்காக கொழும்பிலிருந்து கலை கலாசார பண்பாடுகளை பிரதிநிதித்துவம் செய்யும் விசேட குழுவொன்று யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளது.

கொழும்பிலிருந்து கடுகதி புகையிரதத்தில் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்தடைந்த குறித்த பிரதிநிதிகளை யாழ் புகையிரத நிலையத்தில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட செயலர் உள்ளிட்ட பிரதிநிதிகள் வரவேற்றனர்.

தேசிய தைப்பொங்கல் நிகழ்வுகள் இம்முறை யாழ்ப்பாணம் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் நடைபெற்று கலை நிகழ்வுகள் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறித்த தேசிய தைப்பொங்கல் நிகழ்வு புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி தலைமையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புஸ்ஸலாவயில் சிறுத்தையின் சடலம் மீட்பு



(க.கிஷாந்தன்)

புஸ்ஸலாவ பிரிவிற்குட்பட்ட தோட்டத்தில் நயப்பனை மேற்பிரிவில் சுமார் மூன்று அடி நீளமான சிறுத்தையின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக புஸ்ஸலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வியாழக்கிழமையன்று இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இறந்த நிலையில் சிறுத்தை கிடப்பதை பொது மக்கள் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியதைத் தொடர்ந்து மேற்படி சிறுத்தை மீட்கப்பட்டுள்ளது.

மிக நீண்ட காலமாக நயப்பனை தோட்டத்தில் சிறுத்தைகளின் நடமாட்டம் காணப்பட்ட நிலையில் வியாழக்கிழமை காலை இந்த சிறுத்தை விலங்குகளை வேட்டையாடுவதற்காக போடப்பட்டிருந்த கம்பி வலையில் சிக்கி சிறுத்தையின் கழுத்து நெறிப்பட்டு உயிரிழந்துள்ளது.

தற்போது வீடுகளுக்கு அருகில் இந்த சிறுத்தைகளின் நடமாட்டம் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த சிறுத்தையின் உடல் கம்பளையில் உள்ள வனஜிவராசி திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக புஸ்ஸலாவ பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்கு சுற்றாடல் அமைச்சர் தம்மிக்க விஜயம்

தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்கு திடீர் விஜயமொன்றை சுற்றாடல் அமைச்சர் தம்மிக்க படபாண்டி வெள்ளிக்கிழமை (17) விஜயமொன்றை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின் நோக்கம், இலங்கைக்கே உரித்தான விலங்கினங்களின் பாதுகாப்பு செயல்முறைகள் பற்றி ஆராயப்பட்டன. மேலும், விலங்கினங்களின் பாதுகாப்பு செயல்முறை தொடர்பான சிக்கல்களுக்கான தீர்வினைப்பெறல். உயிரியல் மற்றும் நிலையான தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்பப்



பணிகளை மேற்கொள்வதற்கான முறைமைபற்றியும் கலந்துரையாடப்பட்டன. சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் செயலாளர் கே.ஆர். உடுவலவும் கலந்துகொண்டார்.

# அறுகம்பே தாக்குதல் மூன்று சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

அறுகம்பே பகுதியில் பயங்கரவாத தாக்குதல் நடத்தப்பட உள்ளதாக சமீபத்தில் கிடைத்த தகவல் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த சந்தேக நபர்களில் மாலைதீவு நாட்டவரும் இருப்பதாக தெரிவிக்கப் படுகிது. இந்த சந்தேக நபர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு, விசாரணைக்குப் பிறகு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார்கள் என்று பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு நீதிமன்றத்திற்குத் தெரிவித்தது.

இந்த சந்தேக நபர்களுக்கு எதிராக எடுக்க வேண்டிய சட்ட நடவடிக்கை குறித்து பொலிஸார் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரியுள்ளனர், மேலும் சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கும் வரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன, சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114664152 / editorial@oruvan.com

## இயல்பு நிலையை அச்சுறுத்தும் அரசின் பாதுகாப்பு பலவீனம்

மன்னார் நீதவான் நீதிமன்றத்துக்கு முன்பாக வியாழக்கிழமை காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்ததுடன், மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

வழக்கொன்றுக்காக நீதிமன்றத்திற்கு வருகை தந்தவர்களை இலக்கு வைத்து இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

மன்னார் நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த சவேரியன் அருள், செல்வக்குமார் யூட் ஆகியோரே இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் இடம் பெற இருந்த வழக்கு விசாரணைகளுக்காக வருகை தந்த போதே மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் பல்வேறு கேள்விகளையும் சந்தேகங்களையும் எழுப்புகின்றது. நீதிமன்ற வளாகம் ஒன்றுக்கு முன்னால், மிகவும் துணிகரமாக இந்தத் துப்பாக்கி சூட்டு சம்பவம் நடத்தப்பட்டு இருக்கிறது. மன்னார், நொச்சிக் குளத்தில் 2022 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கொலை சம்பவத்தின் பழிக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக இருக்கலாமென பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் நடந்ததன் பின்பு, காரணத்தை கண்டறிவதும், முதல் கட்ட விசாரணையில் சந்தேகங்களை வெளியிடுவதும் பொலிஸாரின் பணியாக இருக்கின்றது. இலங்கையில் எந்தப் பகுதியில் துப்பாக்கி சூடு நடந்தாலும் இதுதான் இவர்களது நடவடிக்கையாக பார்க்க முடிகின்றது.

மன்னாரில் நடந்திருக்கின்ற இந்த இரட்டை கொலைகளுக்கு பாதுகாப்பு குறைபாடு காரணம் என்பதை தெட்டத் தெளிவாக நாம் கூறுகின்றோம்.

நீதித்துறை என்பது இந்த நாட்டின் பலம் பொருந்திய கட்டமைப்பு. அரசியலமைப்பு ரீதியாக இது வரையறை செய்யப்பட்டு இருக்கிறது. நீதியை நிலைநாட்டுகின்ற நீதிமன்ற வளாகத்துக்கு முன்னாலேயே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு, சிவிலியன்கள் கொல்லப்படுகிறார்கள் என்றால், நமது பாதுகாப்பு கட்டமைப்பை கேள்விக்குறியாக்கி இருக்கிறது.

மன்னாரில் மாத்திரம் இந்த சம்பவம் நடந்திருக்கிறது என்று நாம் இங்கு சொல்லவில்லை. கொழும்பு - புதுக்கடையில், உச்சநீதிமன்ற கட்டிடத் தொகுதிகள் அமைந்திருக்கின்ற வளாகப் பிரதேசத்திலும் இப்படியான துணிகரங்கள் நடத்தப்பட்டு இருக்கின்றன. உயர் பாதுகாப்பு வலயங்களிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின் கடமை. பிரதேசத்தின் செயல்பாடுகளை அறிந்து - ஆராய்ந்து இடத்துக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு, பொலிஸ் தலைமையிடம் தான் இருக்கிறது.

அப்பாவி உயிர்கள் பறிக்கப்பட்டதன் பின்பு, பொலிஸ் குழுக்களை அமைப்பதும், தீவிர விசாரணைகளை நடத்துவதும், துருவித் துருவித் தேடி புலனாய்வு அறிக்கைகளை விடுவதும், "வரும் முன் காப்போம் "என்ற யதார்த்தத்தை பின்பற்றும் நடவடிக்கையாக தெரியவில்லை. வன்முறை கலாசாரங்கள் தொடர்கின்ற ஒரு நாட்டில், பொதுமக்களை பாதுகாக்கின்ற பொலிஸாரின் நடவடிக்கைகள், மிகவும் துல்லியமாக மேற்கொள்ளப்பட வேண்டும். தொடருகின்ற சம்பவங்களை பார்க்கின்ற பொழுது, அவ்வாறான ஒரு ஆக்கபூர்வ நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை.

அவ்வாறான ஒரு நிலை எடுக்கப்பட்டிருந்தால் வன்முறை கலாசாரம் ஓரளவு கட்டுப்பாட்டில் வந்திருக்கும். பொலிஸ் துறைக்கு புலனாய்வு இருக்கின்றது. இராணுவத்துக்கு புலனாய்வு இருக்கின்றது. கடற்படையினருக்கும் புலனாய்வு பிரிவு இருக்கின்றது. புலனாய்வு பணிகள் முறையாக முன்னெடுக்கப்பட்டிருந்தால், சம்பவம் நடப்பதற்கு முன்பே தடுக்க முடியும்.

நாட்டினுடைய பாதுகாப்பு நிலை கவலை அளிக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்காவுக்கு கடிதம் அனுப்பி இருக்கிறார். "கடந்த 15 நாட்களுக்குள் ஐந்துக்கும் மேற்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் பதிவாகி இருக்கின்றன. இவைகளில், ஐந்து பேர் உயிரிழந்திருக்கின்றார்கள்' மேலும் ஐந்து பேர் படுகாயம் அடைந்திருக்கிறார்கள்." சஜித் பிரேமதாச தனது கடிதத்தில் இவ்வாறு கூறுகின்றார்.

இவ்வாறான வருந்தத்தக்க சம்பவங்கள் தொடருமானால், நாட்டின் சட்டத்தின் ஆட்சி செயலிழந்து, இயல்பு நிலையை பாதிக்கப்படும்.

சர்வதேச தரத்தில் கட்டமைக்கப்பட்ட பொலிஸ் மற்றும் பாதுகாப்பு படைகளை கொண்டிருக்கின்ற பலம் பொருந்திய நாடு இலங்கை. ஆனால், வன்முறை கும்பலாக இருக்கின்ற பாதாள குழுக்களை கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதன் அர்த்தம் புரியவில்லை. பொலிஸாருக்கு ஆளணி பற்றாக்குறை இருக்குமாக இருந்தால், முப்படைகளையும் தேவைக்கு ஏற்ப சிவில் கடமைகளில் ஈடுபடுத்துவதில் தப்பில்லை.

நாட்டிலே நடந்த உள்நாட்டு யுத்தம் ஒன்றை முடிப்பதில் காட்டிய ஆர்வமும், துணிவு மிக்க செயல்பாடுகளும், பாதாள குழுக்களை அடக்குவதில் முனைப்பு காட்டப்படாதது ஏன்...? கொலை அச்சுறுத்தல்களும் பயமுறுத்தல்களும் இதற்கு தடையாக இருக்கலாம். உயிர் அச்சத்தினால், பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுகின்ற துடிப்பும் துணிவும் உள்ள அதிகாரிகள் சற்று பின் வாங்குகிறார்கள். அல்லது கண்டும் காணாமலும் ஒதுங்கி விடுகின்றார்கள். இது உயிரைப் பாதுகாக்க முனையும் இயல்பான நடவடிக்கை.

நாட்டிலேயே 30 வருட காலம் நடந்த சிவில் யுத்தத்தின் போது இருந்த அச்சுறுத்தலை விட, மோசமான ஒரு அச்சுறுத்தல் நிலை, இப்பொழுது தொடர்கின்றது. புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இதில் பாரா முகமாக இருந்து விட முடியாது. ஆட்சிப் பொறுப்பை கையில் எடுத்து நூறு நாட்களையும் இந்த அரசு தாண்டி விட்டது. ஆனால், பாதாள குழுக்களின் கொலை கலாச்சாரம் இன்னும் மட்டுப்படுத்தப்படவில்லை. பாதுகாப்பு குறைபாடுகளை உற்று நோக்கி, உடனடியாக துணிகரமான செயல்திட்டங்களில் இறங்கினால் மட்டுமே சாதகமான நிலையை உருவாக்க முடியும்.

பாதாள குழுக்கள் ஏ.கே 47, T-56, பிஸ்டல்... போன்ற நவீன ஆயுதங்களை சர்வ சாதாரணமாக பயன்படுத்துகிறார்கள். இவர்களுடைய செயல்பாடுகள், வல்லமை படைத்த பாதுகாப்பு தரப்புக்கு பாரிய சவாலாக இருக்கிறது என்பது தெட்டத் தெளிவாகிறது. ஆகவே மீண்டும் ஒரு விடயத்தை வலியுறுத்துகின்றோம். மாற்றம் என்பது, அரசியலில் மாத்திரமல்ல,, பாதுகாப்பிலும் ஏற்பட வேண்டும். மன்னார் இரட்டை கொலை சம்பவம், இந்த அரசுக்கு ஒரு படிப்பினையாக அமையட்டும்.

# விட்டுக்கொடுப்பு இல்லாத பேச்சு

## பரந்த கூட்டணி உருவாக்கப்படுமா?





இலங்கையில் பழைமையான அரசியல் கட்சியாக அடையாளப்படுத்தப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி சஜித் பிரேமதாசவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கடந்த 2020ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

அதிக காலங்களாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை தொடர்பில் ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகளுக்கு தீர்வாக இவ்வாறு கட்சியிலிருந்து குறிப்பிட்ட தொகையிலானோர் பிரிந்து சென்று ஐக்கிய மக்கள் சக்தி எனும் கட்சி உருவானது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கை கோர்திருந்த ஏனைய சில கட்சிகளும் இந்த பிரிவின் போது ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தனர்.

சஜித் பிரேமதாச முதல் தடவையாக 2019ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் முன்னிலையாகிறார். அதில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி அதிகளவானோருடன் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியை ஸ்தாபித்ததுடன் 2020 நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாக தெரிவானது.

ஐக்கிய மக்கள் சக்தி பிரதான எதிர்க்கட்சியாக செயற்பட்டு வந்தாலும் நாடு பொருளாதார நெருக்கடியின் பின்னர் இடம்பெற்ற ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் அரச அதிகாரத்தை பெற தவறியது.

2024 நாடாளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி இணைந்து போட்டியிட வேண்டும் என இரு தரப்பிலும் யோசனை முன்வைக்கப்பட்டு வந்தாலும் குறித்த யோசனை தோல்வியடைந்து இரு கட்சிகளும் தனித் தனியே போட்டியிட்டன.

இவ்வாறு தனித் தனியே போட்டியிட்டு தோல்வியடைந்த காரணத்தினால் தற்போது இரு கட்சிகளும் ஒன்றிணைய யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருவதாக அறியக் கிடைக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அதற்கான அழைப்பொன்றையும் விடுத்திருந்தார்.

கோட்டாபய ராஜபக்ச ஆட்சியில் நாடு வங்குரோத்து நிலையை அடைந்தவுடன் நாட்டை பொறுப்பேற்க பலருக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும் அதனை துணிந்து ஏற்று, மீட்க ரணில் விக்கிரமசிங்க முன்வந்தார். வரிசை யுகத்தை மாற்றியமைத்து, மக்களுக்கு நிம்மதியாக மூச்சு விட ஒரு நாடு மீட்டுக் கொடுக்கப்பட்டது.

எனினும், பொருளாதார நெருக்கடியின் பின்னர் நடைபெற்று நிறைவடைந்த இரு தேர்தல்களிலும் ரணிலுக்கும், ரணில் தலைமையிலான குழுவுக்கும் மக்கள் போதிய ஆதரவை வழங்கவில்லை. மாறாக, அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பாரிய மக்கள் பலத்தை பெற்று ஆட்சியமைத்தது.

இதேவேளை, மக்கள் சபை எனப் போற்றப்படும் இலங்கை நாடாளுமன்றத்தின் நான்காவது பலம் பொருந்திய எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவு செய்யப்பட்டது. எனினும், ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணி வெறுமனே ஐந்து ஆசனங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

இவ்வாறான பின்னணியிலேயே, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையுமாறு ஐக்கிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி சஜித் தலைமையிலேயே செயற்படும் என்ற நிலைப்பாட்டில் உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி இணைவது தொடர்பில் இந்த வாரம் கலந்துரையாடல்கள் ஆரம்பமாகவுள்ளதாக கூறப்படுகிறது.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தொலைபேசி சின்னத்தில் மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யானை சின்னத்தில் எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிட தீர்மானித்திருந்தனர்.

எனினும், தற்போது இவ்விரு சின்னங்களும் இணைந்து ஒரு பொதுச் சின்னத்தில் போட்டியிடுவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பாரிய மக்கள் பலத்துடன் ஆட்சியமைத்திருந்தாலும் கூட நாடாளுமன்றத்தில் பிரதமருக்கான அந்தஸ்து எதிர்க்கட்சிக்கும் உண்டு.

> இதேவேளை, மக்கள் சபை எனப் போற்றப்படும் இலங்கை நாடாளுமன்றத்தின் நான்காவது பலம் பொருந்திய எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவு செய்யப்பட்டது. எனினும், ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணி வெறுமனே ஐந்து ஆசனங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

தேசிய மக்கள் சக்தியின் இந்த பாரிய வெற்றியானது வரலாற்றில் பதிக்கப்பட்டது மாத்திரமன்றி பழைய அரசியல் கட்சிகளின் அடையாளத்தை நீக்கி விட்டதாகவும் பார்க்கப்படுகிறது. உண்மையும் கூட அதுதான்.

பல வருடங்களாக ஊழலால் ஆட்சியமைத்து பெருத்துப்போன அரசியல்வாதிகளின் அடையாளம் மறைக்கப்பட்டு வருகிறது.

அது ஒரு புறம் இருக்க, தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல், பல அரசியல் பரிசோதனைகளை மேற்கொண்டும் வருகிறது. என்னதான் தேசிய மக்கள் சக்திக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை காணப்பட்டாலும் அரசாங்கத்தை எதிர்க்க பலமான ஒரு எதிர்க்கட்சி என்பது அவசியமாக பார்க்கப்படுகிறது.

தேசிய மக்கள் சக்தியின் தற்போதைய இந்த போக்கானது ரணிலுக்கு மற்றுமொரு வாய்ப்பை வழங்கும் என்ற கருத்துக்களும் இல்லாமலில்லை.

ஆக, தொடர் தோல்விகளை சந்தித்த பழைய அரசியல் தலைமைகள் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக ஒன்றிணைந்து கூட்டணியமைக்க தீர்மானித்துள்ளன.

இது ஒரு நல்ல தீர்மானமாக பார்க்கப்பட்டாலும் கூட இதனை நடைமுறைப்படுத்துவதில் கட்சித் தலைமைகள் சிக்கல்களை சந்திக்கின்றனர்.

தலைமைப் பதவி யாருக்கு? யாரின் கீழ் யார் வருவது? என்ற கேள்விகளுக்கான பதில்களே இன்னமும் இந்த இரு கட்சிகளும் ஒன்றிணையால் இருக்க காரணமாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அடைந்த பாரிய தோல்வியின் பின்னர், ரணில் விக்கிரமசிங்க இனி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் நீடிக்கப் போவதில்லை எனக் கூறியிருந்தாலும் கூட அவருடைய செயற்பாடுகள் அதற்கு பொருத்தமானதாக காணப்படவில்லை.

தொடர் தோல்வியின் பின்னரும் இரு கட்சித் தலைமைகளும் இன்னமும் தலைமைப் பதவிப் பித்தில் திழைத்துள்ளமை தெளிவாகிறது.

அதனால் தான், தலைமைப் பதவியை பற்றி சிந்திக்காது இரு கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என ரணிலும், ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் தான் ஏனைய கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என சஜித்தும் அடம்பிடித்து வருகின்றனர்.

எவ்வாறாயினும், ரணில்– சஜித் இணைவார்களா? என்ற கேள்விக்கு பதவி, அதிகாரம் இவை இரண்டையும் பொருட்படுத்தாது நாட்டு மக்களின் நலன் கருதி இரு தலைவர்களும் செயற்படின் சிறந்த பதில் கிடைக்கும் என்பதே உண்மை. ■



கனுஷியா புஷ்பகுமார்

இலங்கையில் பல பில்லியன் டொலர்களை முதலீடு செய்ய சீனாவில் ஒப்பந்தம் கைச்சாத்து! – செய்தி



# பொங்குதமிழ் பிரகடனத்தின் 24ஆவது ஆண்டு எழுச்சிநாள்



(பு.கஜிந்தன்)

பொங்குதமிழ் பிரகடனத்தின் 24ஆவது ஆண்டு எழுச்சிநாள் நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பொங்குதமிழ்ப் பிரகடன பொது நினைவுத் தூபி முன்பாக நடைபெற்ற பொங்குதமிழ் பிரகடன உரையினை தொடர்ந்து பொங்குதமிழ் துபிக்கு மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

இதில் மாணவர்கள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

2001 அன்று தமிழ் மக்களின் அபிலாஷைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித்தாயகம், தமிழ்த்தேசியம் என்பன அங்கீகரிக்கப்படவேண்டும் என பொங்கு தமிழ் பிரகடனம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பண்பாட்டு, பாரம்பரிய பழக்க வழக்கங்கள் அவசியமானதே





எங்கள் பண்பாடுகளும், பழக்க வழக்கங்களும் மாறிக்கொண்டும் மருவிக் கொண்டும் செல்லும் இந்தக் காலத்தில் இவ்வாறான பாரம்பரிய பொங்கல் நிகழ்வுகள் தேவையானதே. இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண பொங்கல் விழா மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவிலில் வெள்ளிக்கிழமை (17) நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

1996ஆம் ஆண்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலராகப் பணியாற்றியமையும் அதன்போது இந்தப் பகுதிகளுக்கு வரமுடியாத நிலைமை இருந்தமையையும் சுட்டிக்காட்டினார். 28 ஆண்டுகளின் பின்னர் இங்கு வந்து பாரம்பரிய முறையில் இடம்பெறும் பொங்கல் நிகழ்வில் பங்கேற்பது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருவதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார். அதேவேளை பொங்கல் நிகழ்வுக்காக வயலும், கோயிலும் சூழ்ந்த அமைதியான இடத்தை தெரிவு செய்து நிகழ்வை ஒழுங்கமைத்த அனைவரையும் ஆளுநர் பாராட்டினார்.

விவசாயிகளுக்கு இன்று காலநிலை மாற்றம் சவாலாகி வருவதாகக் குறிப்பிட்ட ஆளுநர், விவசாயிகளின் முயற்சி ஒருபோதும் வீணாகாது என்றும் அவர்களுக்கு அதற்குரிய பலன் நிச்சயம் கிடைத்தேதீரும் எனவும் தெரிவித்தார்.

விவசாயத்தை வருமானம் அதிகம் தரக்கூடிய துறையாக மாற்றவேண்டும் எனக் குறிப்பிட்ட ஆளுநர், இன்றைய இளையோருக்கு விவசாயத்தின் மீதான நாட்டம் குறைந்து வருவதாகத் தெரிவித்தார். அரசாங்க வேலையே வேண்டும் என இளையோர் கோரி நிற்பதாகக் குறிப்பிட்ட ஆளுநர், ஓய்வூதியம் மற்றும் பணிச்சுமை குறைவான வேலை என எதை அவர்கள் தெரிவு செய்கின்றார்களோ தெரியவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

தாம் நிர்வாக சேவைக்கு நுழைந்த காலத்தில் தொலைத்தொடர்பு வசதிகளோ ஏனைய வசதிகளோ இல்லை என்றும் மிகக் கஷ்டமான காலத்திலும் மனநிறைவான, சந்தோசமான பணியையாற்றியதாகவும் குறிப்பிட்ட ஆளுநர் இன்று பல வகையான வசதிகள் இருந்தும் மக்களுக்கு சிறப்பான சேவை கிடைக்கவில்லை எனவும் வேதனை வெளியிட்டார். அரசாங்க வேலை கிடைத்தவுடன் தமது வீட்டுக்குப் பக்கத்தில் பணியிடம் கேட்கும் போக்கே இன்று அதிகமாகக் காணப்படுகிறது. அந்த நிலைமையில் மாற்றம் தேவை எனச் சுட்டிக்காட்டினார். குடும்பம் முக்கியமானது எனத் தெரிவித்த ஆளுநர், அரச பணியைப் பெற்றுக் கொண்டால் அதையும் சிறப்பாக செய்யவேண்டும் என்றார்.

# அநுர அரசின் கைக்கூலிகளாக இனவாதிகள் இறக்கப்பட்டுள்ளனரா?



அநுர அரசின் ஆட்சியில் இனவாதத்திற்கு இடமில்லை என பல தடவைகள் பிரதமர் ஹரிணி கூறியுள்ளார். ஆனால் மேர்வின் சில்வா, சீல தேரர், சுமண ரத்தின தேரர் போன்றோர் இனவாதத்தை தாம் நினைத்தவாறு அள்ளி வீசுகின்றனர். அவர்களை கண்டிக்காமல் அரசாங்கம் வேடிக்கை பார்க்கிறது என்றால் அநுர அரசின் கைக்கூலிகளாக இந்த இனவாதிகள் இறக்கப்பட்டுள்ளனரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

மேர்வின் சில்வா இந்த நாடு சிங்கள பௌத்த நாடு மற்றும் ஒரே நாடு ஒரே ஆட்சி என்ற இனவாதத்தை கையில் எடுத்தது மாத்திர மல்ல பண்டுகாபய மன்னன் காலத்தில் சிங்கள தேரவாத பௌத்தம் பரவியதாகவும் வரலாற்றுத் திரிபு ஒன்றை கட்டவிழ்த்து விட்டுள்ளார் மகாவம்சம் கூறும் வரலாற்று செய்தியின் ஊடாக உண்மையை மறைக்கும் மேர்வின் சில்வா ஒரு மனநோய் பிடித்தவரா? அல்லது அரச பின்புலத்தின் இனவாதியா? இத்தகையஇனவாதிகளுக்கு அநுர அரசின் நடவடிக்கை என்ன?

அநுராதபுர இராசதானி காலத்தில் மூத்த சிவனின் மகன் தீசன் காலத்தில் இந்தியாவில் இருந்து அசோகசக்கரவர்த்தியின் மகன் மகிந்ததேரரால் கொண்டு வரப்பட்டதே தேரவாத பௌத்தம் இது பிற் காலத்தில் இலங்கையில் தமிழ்த் தேரவாத பௌத்தமாக பரவியதை பல வரலாற்று ஆதாரங்கள் வெளிப்படுத்தி உள்ளன உதாரணமாக சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் உள்ள சமாதிகள் தமிழ்ப் பௌத்தருடையது என பல தொல்பொருட் சான்றுகள் கூறுகின்றன இந்த உண்மையை மேர்வின் சில்வா போன்ற இனவாதிகள் பொய்யாக மாற்றி இலங்கைத் தீவை சிங்கள பௌத்த நாடாக இனவாதப் போக்கில் சித்தரிக்கின்றனர்.

# வருடாந்த விளையாட்டு விழா - பரிசளிப்பு நிகழ்வு



(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழா பரிசளிப்பு நிகழ்வானது யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன் தலைமையில் (16) பி.ப 02.30 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் பா.முகுந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அரசாங்க அதிபர் தமதுரையில், பிரதேச செயலகங்களுக்கிடையிலான போட்டியில் 35 வகையான போட்டிகள் நடைபெற்றமை சிறப்பான விடயம் எனவும், முதற்தடவையாக நீச்சல் போட்டிக்கான தெரிவும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது எனவும் குறிப்பிட்டதுடன், இப் போட்டிகளில் 200 வரையான வீர வீராங்கனைகள் பரிசில்கள் சான்று தழ்கள் பெறுவது பாராட்டத்தக்கது எனத் தெரிவித்தார்.

# வவுனியா பிரதேச செயலக பொங்கல் விழா







(கி.வசந்தன்)

வவுனியா பிரதேச செயலகத்தில் பொங்கல் விழாவானது பிரதேச செயலக வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள ஒன்பது கிளைகளிற்கிடையில் பொங்கல் விழாவை முன்னிட்டு போட்டி நிகழ்வும் இடம்பெற்றிருந்ததுடன், தமிழர் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் முகமான நடனங்களும் இடம்பெற்றன.

மேலும் ஒவ்வொரு கிளையினராலும் தமிழர் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையில் பல்வேறு விடயங்கள் காட்சிப்படுத்திருப்பதையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

வவுனியா பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் சரத் சந்திர பிரதம விருந்தி னராக கலந்து கொண்டதுடன், தமிழ்மணி அகளங்கன் மற்றும் அதிகாரிகள் அலுவலர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# சுண்டிக்குளம் கடற்கரை பகுதியில் மர்ம பொருள்

(பு.கஜிந்தன்)



கிளிநொச்சி – சுண்டிக்குளம் கடற்கரை பகுதியில் இனம் தெரியாத மர்ம பொருள் ஒன்று கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்த மர்மப் பொருளானது வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டது. குறித்த மர்மப் பொருளில் சிங்களம் தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் நீதிமன்ற கொலைச் சம்பவம் பொலிஸார் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் நீதிமன்றத்திற்கு முன்னால் (16) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன்,மேலும் இருவர் படுகாயமடைந்துள்ள இச்சம்பவத்திற்கு மன்னார் பொலிஸார் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

மன்னார் நீதிமன்றத்திற்கு முன் நடைபெற்ற துப்பாக்கி பிரயோகம் உண்மையிலேயே கண்டிக்கத்தக்க ஒரு விடயமாகவும், காட்டு மிராண்டித்தனமான ஒரு விடயமாகும்.

இந்த மிலேச்சத்தனமான செயலுக்கு மன்னாரில் உள்ள பொலிஸார் முழுப்பொறுப்பையும் எடுக்க வேண்டும்.

நொச்சிகுளம் மக்கள் தொடர்ந்து பழிவாங்கப்படுகிறார்கள். இன்றும் தொடர்ச்சியாக அந்த நொச்சிகுளம் கிராமத்தின் மக்கள் படிப்படியாக படுகொலை செய்யப்படுகின்ற சூழல் காணப்படுகிறது .

இந்த விடயத்தை கடந்த அரசாங்கத்தில் மக்கள் பாதுகாப்பு தொடர்பாடல் அமைச்சரோடு நான் நேரடியாக பேசியிருந்தேன். முன்னர் ஏ.கே 47 பாவிக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது எந்த வகையான துப்பாக்கி பாவிக்கப்பட்டுள்ளது என்பது தெரியவரவில்லை. இந்த துப்பாக்கி பிரயோகம் நொச்சிகுளம் மக்களை பார்த்து தான் பிரயோகிக்கப்படுகிறது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

மன்னார் பொலிசாருடைய மெத்தனப் போக்கும் இதில் அடங்கியிருக்கிறது. அந்த கிராமத்து மக்கள் அச்சத்தோடு வாழும் சூழலிலே மீண்டும் மன்னார் நீதிமன்றத்திற்கு முன் இந்த படுகொலைகள் நடைபெற்றிருக்கிறது. ஆகவே இது கண்டிக்கத்தக்கது.

இவ் விடயம் சம்பந்தமாக ஜனாதிபதியின் கவனத்திற்கும், பாராளுமன்ற கவனத்திற்கும் முக்கியமான விடயமாக கொண்டு வரவுள்ளேன்.

ஏனென்றால் இது தொடர்ச்சியாக நடைபெறுகிற விடயமாக இருக்கிறது.போன உயிர்களை மீளப் பெற முடியாது. துப்பாக்கி பிரயோகத்தால் உயிர் நீத்த குடும்பங்கள் பல அந்த கிராம மக்கள் அச்சத்தோடு வாழுகின்ற நிலமை தொடர்கின்றது.

ஆகவே இதன் முழுப்பொறுப்பையும் பொலிசார் எடுக்க வேண்டும். இந்த சம்பவத்திற்கு காரணம் பொலிசாருடைய கவனயீனம், அசமந்தப்போக்கு என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். முப்படைகள் அங்கே பாதுகாப்பு நடவடிக்கையில் இருக்கும் நிலையில் போன்று காட்டிக்கொண்டு இவ்வாறான விடயங்கள் நடைபெறுவது கேள்விக்குறியாகவே இருக்கிறது. அந்த வகையில் இவ்வாறான சம்பவங்கள் நிறுத்தப்பட வேண்டிய விடயங்களாகும்.



சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்ட வேண்டும். இதற்கான குழு அடங்கிய புலனாய்வு துறை நடவடிக்கைகளை பொலிசார் உடனடியாக ஆரம்பித்து செயலில் இறங்க வேண்டும். மன்னாரில் உள்ள பொலிசாரை மட்டும் வைத்து இதற்குரிய நடவடிக்கைகளை செய்து கொள்வது முடியாத காரியமாகும். எனவே கொழும்பில் இருந்து விசேட குழு அடங்கிய பொலிசார் வரவழைக்கப்பட்ட வேண்டும்.

# இலங்கையில் அதிகரிக்கும் இறப்பு வீதம்; பிறப்பில் வீழ்ச்சி

# இது எதிர்காலத்திற்கான எச்சரிக்கையா ?...





ஏ.எச்.ஏ. ஹுஸைன்

இலங்கையில் வருடாந்த இறப்பு வீதம் அதிகரித்திருக்கின்ற அதேவேளை, பிறப்பு வீதம் கணிசமாகக் குறைந்திருப்பதாக துறைசார்ந்தவர்களால் வெளியிடப்பட்டிருக்கின்ற அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

நாட்டில் குழந்தை பிறப்பு வீதம் குறிப்பிடத்தக்க அளவு குறைவடைந்துள்ளதாக கொழும்பு சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம்பற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது கடந்த காலங்களில் வருடாந்தம் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 3 இலட்சத்து 60 ஆயிரமாகக் காணப்பட்டது. எனினும், இந்த எண்ணிக்கை தற்போது 2 இலட்சத்து 40 ஆயிரமாகக் குறைவடைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

நாட்டில், கடந்த காலங்களில், நிலவிய பொருளாதார நெருக்கடியினால் ஏராளமான இளையோர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளமை குழந்தை பிறப்பு வீதத்தின் வீழ்ச்சிக்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் சிலர் தங்களது பொருளாதாரம் வலுப்பெறும்வரை திருமணத்தைக் காலம் தாழ்த்தி வருகின்றனர்.

குறைந்தளவான குழந்தை பிறப்பு வீதம் நாட்டின் எதிர்கால மனித வளத்திற்குச் சவாலாக அமையும் என விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

மகப்பேற்று மருத்துவர்கள் விடுத்துள்ள மற்றொரு பிறப்பு இறப்பு பற்றிய அறிக்கையில் மேலும் சில விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

2017ஆம் ஆண்டு இலங்கையில் 325,000 பேர் பிறந்துள்ளனர். ஆனால் இந்த எண்ணிக்கை 2023ஆம் ஆண்டில் 247,000 ஆகக் குறைவடைந்துள்ளது.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக தம்பதிகள் குழந்தை பெற்றுக் கொள்வதை தாமதமாக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. திருமணமான பல தம்பதிகள் இலங்கையை விட்டு வெளியேறியுள்ளனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் திருமணம் செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 12.5 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

இதற்கிடையே, ஆண்டு இறப்புகள் 2017இல் 146,000இல் இருந்து 2023இல் 181,000 ஆக அதிகரித்திருந்ததாக மகப்பேற்று வைத்தியர் பேராசிரியர் சனத் லெனரோல் தெரிவித்துள்ளார்.

குழந்தைகளின் பிறப்பு வீதம் குறைந்து, ஆட்களின் இறப்பு வீதம் அதிகரித்து வருவது எவ்வாறு பாதிக்கும்? அதனால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் என்ன?

இந்த நூற்றாண்டின் இறுதியில் உலக மக்கள் தொகை குறையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாக, சீனாவின் தற்போதைய 140 கோடி மக்கள் தொகை கிட்டத்தட்ட பாதியாகக் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

உலக மக்கள்தொகை தினம் ஜுலை 11 அன்று வருகிறது, மேலும் சமூக-பொருளாதார அரசியல் விவகாரங்களில் மக்கள்தொகை கூடிக் குறைவது ஒரு முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இலங்கையில் பிறப்பு வீதம் வேகமாக வீழ்ச்சியடைந்து 30 சத வீதமாகக் குறைந்துள்ளது.

நாட்டில்பிறப்பு விகிதங்கள் குறைந்து வருவதற்கு பொருளாதார சிக்கல்களே முதன்மையான காரணமாகும் என்று நிபுணத்துவ மருத்துவர்களும் துறைசார்ந்த ஆய்வாளர்களும் தெரிவிக்கின்றனர்.

பல குடும்பங்கள் இரண்டாவது குழந்தையைப் பெற்றுக் கொள்ளத் தேவை இல்லை என்று விரும்புகின்றனர். குழந்தை பெற்றுக் கொள்ள விரும்பாதவர்களைப் பொறுத்தவரை, குழந்தைகளைப் பெறுவது அவர்களின் விருப்புப் பட்டியலில் முன்னுரிமையில் இல்லை.

மேலும், பல புதுமணத் தம்பதிகள் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளும் எண்ணத்தைத் தள்ளிப்போட்டுவிட்டு, அதிகம் சம்பாதிப்பதில் முன்னுரிமை கொடுத்து, குடும்ப வாழ்வைத் தொடங்குவதைத் தாமதப்படுத்துகின்றனர்.

நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்த பலர் இலங்கைக்குத் திரும்புவதைக் கருத்தில் கொள்ளவில்லை. இலங்கைத் தம்பதிகள் பலர் வெளிநாடுகளுக்கு புலம்பெயருவதை நோக்கமாக கொண்டுள்ளனர். இதுவரை இலங்கையில் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்த இளைஞர்களும் தற்போது வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர்.

சிறுபான்மை இனங்களை எடுத்துக் கொண்டால் அவர்களது பிறப்பு வீதத்தைப் பாதித்த பல காரணிகள் உள்ளன.

தமிழ் சமூகத்தைப் பொறுத்தவரையில், தமிழர் உரிமைப் போராட்டத்தின் விளைவாக படையினரால் அநேகமான இளைஞர் யுவதிகள் கொல்லப்பட்டமை, கடத்தப்பட்டமை, காணாமல் போனமை, அரசியல் கைதிகளாக விசாரணையின்றி வெளியில் விடப்படாமல் நீண்ட காலமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை, புலம்பெயர்ந்தமை, விதவை மறுவாழ்விற்கு ஊக்குவிக்கப்படாமை போன்றவை பிறப்பு வீதம் குறைவடைந்தமைக்கான காரணங்களாக உள்ளன என்று சமூக பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முஸ்லிம் சமூகத்தை எடுத்துக்கொண்டால் அந்த சமூகத்திலுள்ள பலர் எல்ரீரீ இயக்கம் உட்பட ஏனைய தமிழர் உரிமைப் போராட்ட ஆயுததாரிகளால் கொல்லப்பட்டமை, இனச் சுத்திகரிப்புச் செய்யப்பட்டு அவர்களது வாழ்விடங்களை விட்டு விரட்டியக்கப்பட்டதால் குறுகிய அகதி முகாம்களில் நீண்ட கால அகதி வாழ்க்கை, ஈஸ்டர் குண்டு வெடிப்பைக் காரணம் காட்டி பலர் சிறையிலடைக்கப்பட்டுள்ளமை, முஸ்லிம்கள் அளவுக்கதிகமாக இனப்பெருக்கம் செய்வதாகப் பரப்பப்படும் இனவாத வெறுப்பு அச்சுறுத்தல், நிருவாக ரீதியான ஒடுக்குமுறைகள் பாகுபாடு என்பனவற்றாலும் அந்த சமூகத்தின் பிறப்பு வீதம் குறைவடைந்துள்ளதாக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.



குடும்பக் கட்டுப்பாடு திட்டம்

பொதுவில் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களை எடுத்துக் கொண்டால், நாட்டில் மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற யுத்தம் அதனால் ஏராளமான மூவின சமூகங்களையும் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டமை, அகதி வாழ்க்கை, இடம்பெயர்வு, சிறை வாழ்க்கை, கடத்தப்பட்டமை, காணாமலாக்கப்பட்டமை, கொல்லப்பட்டமை போன்றவையும் இயற்கை இடர்களான சுனாமி, கொரோனா உயிர்க் கொல்லி வைரஸ் தொற்றினால் ஏற்பட்ட மரணங்கள் போன்றவை மூவின சமூகங்களினதும் பிறப்பு வீதம் குறைந்து இறப்பு வீதம் அதிகரித்தமைக்கான காரணங்களாக உள்வாங்க முடியும்.

மலையகத்தில குடும்பக் கட்டுப்பாடு திணிக்கப்பட்டதாக அங்குள்ள சமூக அமைப்புக்கள் கருதுகின்றன. மலையகத்தின் தேயிலை, இறப்பர் தோட்டங்களில் இரண்டு பிள்ளைகளைப் பெற்ற பெண்கள் நிரந்தர குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தமை, அங்கு மக்கள்தொகை வளர்ச்சி குறைவதற்கு ஒரு முக்கிய காரணம் என்றும் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் இயக்குநர் பெரியசாமி முத்துலிங்கம் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் சுட்டிக்காட்டியிருந்தார்.

சுகாதார அமைச்சின் 2023ஆம் ஆண்டுக்குரிய செயல்திறன் முன்னேற்ற அறிக்கையில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுள்ள குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.

அதில், பொருளாதார நெருக்கடி மற்றும் காலதாமதமான வழக்கமான கொள்முதல் காரணமாக, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கான கருத்தடை சாதனங்களில் பற்றாக்குறை ஏற்பட்டது. எனினும், பயனுள்ள தேசிய குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு அமைவாக தேவையான அனைத்து அத்தியாவசிய குடும்பக் கட்டுப்பாட்டுச் சேவைகளுக்கான கருத்தடைப் பொருட்களும் அரசு நிதியில் வாங்கப்பட்டு 2022ஆம் ஆண்டிலும் 2023ஆம் ஆண்டின் முதல் மற்றும் இரண்டாம் காலாண்டிலும் அனைத்து மாவட்டங்களுக்கும் விநியோகிக் கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த ஐந்தாண்டு செயல்திறன் போக்கு

| செயல்திறன் குறிகாட்டிகள் | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|
| 1. கருத்தடை பரவல் வீதம் (எந்த முறையும்) % | 67 | 66.9 | 66 | 66.5 | 68.5 |
| 2. கருத்தடை பரவல் வீதம் (நவீன முறைகள்)% | 57.9 | 57.9 | 57 | 57.7 | 59.4 |
| 3. கருத்தடை தேவையை பூர்த்தி செய்யாத தம்பதிகள்% வீதம் | 6 | 5.8 | 5.7 | 5.6 | 5.5 |
| 4. நவீன கருத்தடை முறைகளால் தேவை பூர்த்தி செய்யப்பட்ட (%)வீதம் | 79.3 | 79.6 | 79.5 | 80.0 | 80.3 |

* ஆதாரம்: eRHMIS – FHB

மேலும், கொவிட் மற்றும் நாட்டின் பொருளாதார நெருக்கடியின் சவால்களுக்கு மத்தியில் 2021ஆம் ஆண்டில் 57.7% சதவீதமாக இருந்த நவீன கருத்தடை பரவல் விகிதம் 2022இல் 59.4 சதவீதமாக அதிகரிக்கும் வகையில் மாவட்டங்களுக்கு கருத்தடைப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்ததாக அந்த அறிக்கையில் மேலும் விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

2024ஆம் அரையாண்டு அரசிறை நிலைப்பாட்டு அறிக்கையில் செப்பமற்ற பிறப்பு வீதம் செப்பமற்ற இறப்பு வீதம் என்று குறிப்பிடப்பட்டு விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மேலும், தேசிய கணக்காய்வு அலுவலக செயலாற்றல் கணக்காய்வுப் பிரிவு வெளியிட்டுள்ள 2013ஆம் ஆண்டு தொடக்கம் 2017ஆம் ஆண்டு வரையிலுமான ஆய்வு அறிக்கையில் 93 பாடசாலைகள் மாணவர்கள் இல்லாமை, நாட்டு நிலவரம் மற்றும் வேறு காரணங்களுக்காத் தற்காலிகமாக மூடப்பட்டிருந்ததோடு 2018ஆம் ஆண்டினுள் மட்டும் 101 பாடசாலைகள் மூடப்பட்டிருந்ததாக கல்வி அமைச்சின் புள்ளி விவரவியல் தகவல் அடிப்படையில் அவதானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தரம் 1இல் மாணவர்கள் இணைவதில் காணப்படுகின்ற வீழ்ச்சி நிலையானது, கிளிநொச்சி மாவட்டத்தின் பிறப்பு வீதத்தின் வீழ்ச்சியைக் காட்டுவதாக, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன்குயின்ரஸ் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் கடந்த 2018 ஏப்ரல் 02ஆம் திகதி நடைபெற்றபோது குறிப்பிட்டிருந்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, சமீப காலங்களில் கருவுறுதலிலும் ஆயுட்கால விகிதங்களிலும் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 1970களின் முற்பகுதியில், பெண்கள் சராசரியாக தலா 4,5 குழந்தைகளைப் பெற்றனர் இருப்பினும், 2015ஆம் ஆண்டில், உலகின் மொத்த கருவுறுதல் ஒரு பெண்ணுக்கு 2 குழந்தைகள் என்றளவில் குறைந்து விட்டது.

உலகளவில் பிறப்பு விகிதங்கள் குறைவதற்கு, எளிய கருத்தடை முறைகள், பெண்களுக்கு அதிக அளவில் கல்வி, வேலைவாய்ப்பு கிடைப்பது, வாழ்க்கைச் செலவினம் அதிகரிப்பு ஆகியவை சில காரணங்களாகக் கூறப்படுகிறது.

2080ஆம் ஆண்டில், 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் 18 வயதிற்கு உட்பட்டவர்களை விட அதிகமாக இருப்பார்கள்.

இந்த நடைமுறை தொடருமானால், பல வருடங்களுக்குப் பிறகு, தென் கொரியா, சீனா, ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகளுக்கு ஏற்பட்ட மனித வளம் இல்லாத சிரமங்களை இலங்கையும் சந்திக்க நேரிடும்.

சிலர் குறைந்த பிறப்பு விகிதத்தை வளர்ந்த நாடுகளின் சிறப்பியல்பு என்று கருதுகிறார்கள்.

மக்கள் தொகைப் பெருக்கம்தான் வறுமைக்குக் காரணம் என்று உணர்ந்த அரசுகள். மக்கள் தொகைப் பெருக்கத்தை வெகுவாக கட்டுப்படுத்தின. ஆனால், அதன் விளைவுகள் வேறு மாதிரி ஏற்பட்டு வருகிறது. முதியோர்கள் அதிகமாகவும், இளையோர்கள் இல்லாத நிலையும் ஏற்படத் தொடங்கியுள்ளது.

அதனால், அந்த நிலைப்பாட்டை எடுத்த சில நாடுகள் இப்போது விளைவுகள் பாரதூரமாவதை அறிந்து இயல்பாகச் சிந்திக்கத் தொடங்கி விட்டன. ஒரு காலத்தில் எவை எல்லாம் சரி என்று நினைத்தார்களோ இன்று அவை தவறென்று தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளார்கள்.

உலகின் மிகப்பெரிய மக்கள் தொகையைக் கொண்ட சீனா, ஒரு குழந்தை மட்டுமே பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற உத்தரவை கடுமையாக அமுல்படுத்தியது. அதனால், மக்கள்தொகை பெரிய அளவில் சரிந்தது. இதனால் கடந்த 2016 ஆம் ஆண்டு அந்தக் கொள்கையை அதிரடியாக இரத்துச் செய்து, 2 குழந்தைகள் பெற்றுக் கொள்ள அனுமதித்தது. அதன்பிறகும் எதிர்பார்த்த முன்னேற்றம் இல்லாததால் 3 குழந்தைகள் பெற்றுக் கொள்ளலாம் என்று கடந்த கொரோனா பாதிப்பின் பின்னர் 2021 ஆம் ஆண்டு அறிவித்தது.

ஏற்கனவே சீனாவில் குழந்தை பிறப்பு குறைந்து விட்டதால், சீனா முழுவதும் உள்ள மழலையர் பள்ளிகள் பல மூடப்பட்டு வருகின்றன. அந்த பள்ளிகள், முதியோர் இல்லங்களாக மாற்றப்படும் நிலையும் ஏற்பட்டு வருகிறது.

சீனாவில் முதியோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 140 கோடி மக்கள் தொகையில், 30 கோடிப் பேர் 60 வயதைத் தாண்டியவர்கள் என்று சீன அரசின் புள்ளி விவரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தம்பதிகளை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு 13 சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கிறது. குழந்தை பெற்றுக்கொள்ள விரும்பும் பெற்றோருக்கு குழந்தைப்பேறு மானியம், வீட்டு வசதி, கல்வி, வேலைவாய்ப்பு, வருமானவரிச் சலுகைகள், அடிப்படை மருத்துவ காப்பீட்டுத் திட்டம், இடம்பெயர் தொழிலாளர்களுக்குப் பேறுகாலக் காப்பீடு, பேறுகால விடுமுறை, இதுபோன்ற குழந்தைப் பராமரிப்பு விடுமுறை தொடர்பான கொள்கைகளைச் சரியாக அமுல்படுத்த வேண்டும் என்றும் சீன அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

மேலும், திருமணம் ஆகாத பெண்கள், ஊதியத்துடன் மகப்பேறு விடுப்பை எடுத்துக் கொண்டு செயற்கைக் கருவுறல் மூலம் குழந்தை பெற்றுக் கொள்ளலாம். அதேபோல் தனிப்பெண்கள் வாடகைத் தாய் மூலமும் குழந்தைகளைப் பெற்றுக் கொடுக்கலாம். அவர்களுக்கும் ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுமுறை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளிலும் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்காக இவ்வாறான உதவி ஊக்கங்கள் அந்நாட்டு அரசுகளால் வழங்கப்படுகின்றன.

திருமணமாகாத பெண்களும் குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என்ற சீன அரசின் கொள்கைமாற்றத்தால், செயற்கைக் கருவூட்டல் மையங்களின் தேவை அதிகரித்துள்ளதாக ஆசியா-பசுபிக் தொழில் மேம்பாட்டு நிலையம் அறிவித்துள்ளது.

எனவே, இந்த நிலைமைகளை இனமதவாதமற்று நடுநிலையோடு, நின்று, நிதானித்து, உற்றுக் கவனித்து எதிர்கால சந்ததியினரின் ஒட்டுமொத்த நலனுக்காக இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்,

மேலும் இது தேர்தல் காலத்தில் மட்டும் கவனம் செலுத்தும் இனவாதம் மதவாதம் சார்ந்த ஒன்றாக இருக்கக் கூடாது. ஒட்டு மொத்த மனித குலத்தின் நன்மைக்காக இந்த விடயங்கள் சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டும்.



# மறுபரிசீலனையில்...

## அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டம்



- அகல்யா டேவிட்

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசா்லைத் திட்டத்தின்கீழ் மூன்றில் ஒரு பகுதியாக மட்டுமே முடிக்கப்பட்டுள்ள பாடசாலைகளை மறுபரிசீலனை செய்து வருவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் இந்தத் திட்டம், ஒவ்வொரு மாணவரும் 3 கிலோமீற்றர் வட்டாரத்தில் தரமான பாடசாலைகளை அணுகக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கத்துடன் முன்னாள் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தலைமையில் 2016ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**பல பள்ளிகள் சுமார் 80 - 90 வீதம் முடிக்கப்பட்ட நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன. அவை முழுமையாக முடிக்கப்படாதவை என்றும், இந்த திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட பள்ளிகள் தற்போதும் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன என்றும் பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹறினி அமரசூரியா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.**

மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்கும் நோக்கத்தில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. எனினும், பல பாடசாலைகளில் இந்நடவடிக்கைகள் முடிவுறாமல் இருக்கின்றது. தற்போது மீதமுள்ள பணிகளை முடிக்க மறுபரிசீலனை செய்யப்படுவதாகவும், பல பள்ளிகள் சுமார் 80-90 வீதம் முடிக்கப்பட்ட நிலையில் நிறுத்தப் பட்டுள்ளன.

அவை முழுமையாக முடிக்கப் படாதவை என்றும், இந்த திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட பள்ளிகள் தற்போதும் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன என்றும் பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹறினி அமரசூரிய இம்மாதம் 07ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் கீழ் முதன்முதலில் ஆரம்பப் பாடசாலைகள் மேம்படுத்தப்பட்டு பின்னர் அவற்றை முழுமையான இரண்டாம் நிலை பாடசாலைகளாக இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

“அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை” என்ற திட்டத்தின் கீழ் 200 முழுமையான பாடசாலைகளை நாடளாவிய ரீதியில் கட்டி முடிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த திட்டத்தின் கீழ் மூன்று மாடி வகுப்பறைக் கட்டடங்கள், ஆரம்பக் கல்வி வள மையங்கள், தொழில்துறை கல்வியியற் கல்லூரிகள், நிர்வாக கட்டிடங்கள், ஆய்வுகூடங்கள், மண்டபங் கள், பல் மருத்துவ மையங்கள், இசை கலைப் பிரிவுகள், தொலைதூர பகுதிகளில் அதிபர் ஆசிரியர்களுக்கான குடியிருப்புகள், மாணவர் விடுதிகள், தொழில்நுட்ப அலகுகள், பல்நோக்கு கட்டிடங்கள், சிற்றுண்டிச்சாலைகள் போன்றவைகள் அடங்கும்.

இந்தத் திட்டம் 2020ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இதற்காக அரசாங்கத்தால் முதல் கட்டத்தில் ரூ. 3,938 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. மொத்த செலவின மதிப்பு ரூ. 65,000 மில்லியனாகக் மதிப்பிடப்பட்டிருந்தது. 10,165 பள்ளிகளில் 9,063 பாடசாலைகளைச் சுற்றி 18,000 திட்டங்கள் செயல்படுத் தப்பட்டன.

ஆனால், திட்டத்தின் நடைமுறையில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டன. மதிப்பீடு நிதியமாற்றக் குறைவுகள் காரணமாக வேலைகள் நிறுத்தப்பட்டன.

பல பாடசாலைகள் பூரணமாக முடிக்கப்படாமல் இருக்கின்றன. இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதுடன், கிராமப்புறங்களில் மாணவர்களின் வருகை குறைந்து, பள்ளிவிடுப்பு அதிகரித்துள்ளது.

அரசாங்கத்தின் புதிய முயற்சியான மறுபரிசீலனை செயல்பாடு, இந்தக் குறைகளைத் தீர்க்கும் முயற்சியாக பார்க்கப்படுகின்றது. முழுமையடைந்த நிலையை அடைந்த பாடசாலைகளுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், தேவைப்படும் பகுதிகளில் கல்விச் சேவைகள் விரைவில் வழங்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நிதிப்பற்றாக்குறையும் திட்ட முகாமைத்துவக் குறைகளும் முக்கிய பிரச்சினைகளாக உள்ளன. இந்த மறுபரிசீலனையானது சிக்கல்களை வெளிப்படுத்தி, எதிர்காலத் திட்டங்களில் மேம்படுத்தல்களைக் கொண்டு வர உதவியாக அமையும்.

### சமத்துவமும் அணுகுமுறையும்

நகரப்புறங்களில் தரமான கல்வி அதிகமாக வழங்கப்பட்டாலும், கிராமப்புறங்களில் கல்விக்கான வசதி வாய்ப்புக்கள் குறைவாக வழங்கப்பட்டமை இத் திட்டத்தின் பெரிய விமர்சனமாக உருவாகியது.

திட்டத்தின் “மூன்றில் ஒரு பள்ளி முழுமையானது” எனும் கோட்பாடு, இடங்களை நியாயமாக பகிர்வதற்கான புதிய வழிகளை உருவாக்கும்.

இருப்பினும், முழுமை அடையாத பாடசாலைகள் முழுமையாக மறக்கப்படுவதற்கான ஆபத்தும் இதில் இருக்கிறது. இது குறைந்த நிலப்பகுதிகளில் உள்ள சமூகங்களுக்கு நீண்டகாலத்தில் சிக்கல்களை ஏற்படுத் தக்கூடும்.

### தீர்வுகளின் தேடலில்

இந்தத் திட்டத்தை அரசாங்கம் மறுபரிசீலனை செய்வது ஒரு முக்கிய முன்னேற்றமாகும். முன்னரே இடை நிறுத்தப்பட்ட வேலைகளை முடிப்பதன் மூலம் சமூகங்களுக்கு உதவ முடியும். கல்வி ஒரு அடிப்படை உரிமையாகும், மேலும் கல்விச் சேவைகளை சமமாகப் பகிர்ந்தளிக்க இந்தத் திட்டங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இப்போது இந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்யும் அரசாங்கம், எதிர்காலத் திட்டங்களில் புதிய பாடங்களைக் கற்றுக்கொண்டு, அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வி வழங்கும் இலக்கை உண்மையாக்கும் என்றும் நம்பப்படுகின்றது.

இந்த ஆக்கபூர்வமான திட்டம் கல்வி அணுகலை மேம்படுத்துவதையும், கூடுதலாக உள் கட்டமைப்பை நவீனப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டம் கல்வி முறைமைக்கு மாற்றத்தை ஏற்படுத்தும் திறனை கொண்டுள்ள போதிலும், செயல்படுத்துதலில் உள்ள அதன் தாக்கம் தொடர்பான சவால்களும் உள்ளன.

இந்தத் திட்டத்தின் மிக முக்கியமான சாதகமான விளைவுகளில் ஒன்றானது கல்வி அணுகலை அதிகரிப்பதாகும். குறிப்பாக கிராமப்புறங்களிலும் குறைநிலையில் உள்ள பகுதிகளிலும் புதிய பள்ளிகளை அமைப்பதன் மூலம், மாணவர்கள் நீண்ட தூரங்களுக்குப் பயணிக்க வேண்டிய அவசியம் குறைக்கப்படுகிறது. அருகிலுள்ள பள்ளிகளால் மாணவர்கள் அவர்களின் குடும்பங்கள் பொருளாதார உடல் சுமைகளைக் குறைத்து கல்வியை நெருக்கமாக அணுக முடிகிறது.

மேலும், மூன்று மாடி வகுப்பறைகள், ஆய்வகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் போன்ற அமைப்புகள் மாணவர்களின் கற்றலுக்குரிய சூழலை மேம்படுத்துகின்றன.

தொழில்நுட்பக் கல்லூரிகள், கலைக் களஞ்சியங்கள் மூலம் திறன் மேம்பாட் டுக்கும் தொழில் முனைவு உருவாக்கத் திற்கும் அளிக்கப்படும் முக்கிய கவனம் மற்றொரு முன்னேற்றமாகும்.

இது, மாணவர்களுக்கு திறனடிப்படையிலான கற்றலுக்கான வாய்ப்புகளை வழங்குவதுடன், பல்லின வாழ்க்கைப் பாதைகளைத் தேடுவதற்கான வாய்ப்பையும் உருவாக்குகிறது.

இருப்பினும், நிருவாகக் குறைவுகள், ஆவணங்கள் துறைகளின் ஒத்துழைப்பு இழப்பு போன்றவை செயல்படுத்துவதில் தாமதங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

**இந்தத் திட்டம் 2020ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இதற்காக அரசாங்கத்தால் முதல் கட்டத்தில் ரூ. 3,938 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. மொத்த செலவின மதிப்பு ரூ. 65,000 மில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்தது.**

மிக வேகமாக கட்டுமானங்களை மேற்கொள்ளும் போது, நிலைத்தன்மை, பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் எழலாம். மேலும், திட்டத்தின் மொத்த செலவு ரூ. 65,000 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால், நிதி மேலாண்மையில் சிக்கல்கள் அல்லது வெகுமதிகள் நேரலாம்.

பரிமாண முறைகள், நிலைத்த மரபுகளை சரியாக பின்பற்றாமல் புதிய கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டால், சுற்றுச்சூழல் பாதிப்புகள் உருவாகும் அபாயம் உள்ளது.

அது தற்போதுள்ள பாடசாலைகளின் பராமரிப்புத் தேவைகளைப் புறக்கணிக் கக் கூடும். திட்டத்தின் நீண்டகால தொலை நோக்குப் பராமரிப்பு முடிவுகள் தெளிவாக இல்லாவிட்டால், இது திட்டத்தின் வெற்றியைப் பாதிக்கலாம்.

இந்த விளைவுகளை சமநிலைப் படுத்த, தெளிவான கண்காணிப்பு முறைமைகள், சமூகப் பங்களிப்பு, நிலைத்த நடைமுறைகளை முன்னிலைப் படுத்துவது ஆகியவை அவசியம்.

உள்ளூர் பங்குதாரர்களின் பங்களிப்பைப் பெறுவதன் மூலம், திட்டம் பிராந்தியத் தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கப்படும். மேலும், நிதிகள் சமமாக ஒதுக்கப்பட வேண்டும்,

முடிவாக, அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலைத் திட்டம் இலங்கையின் கல்வி முறைமையை நவீனப்படுத்தி, கல்வி அணுகலை மேம்படுத்தும் திறனைக் கொண்டுள்ளது.

ஆனால், திட்டத்திற்கான சவால்களை சமாளித்தல் மிக முக்கியம். நீடித்த வளர்ச்சி, தரமான கல்வியை ஊக்குவிக்கும் விதமாக திட்டத்தை செயல்படுத்தினால், இது திறன் வாய்ந்ததும் கல்வியறிவு கொண்டதுமான சந்ததியை உருவாக்கும் அடித்தளமாக அமைவது உறுதியாகும்.









# நிதி மோசடிகள்; அறிக்கை சமர்ப்பிக்குமாறு வேண்டுகோள்

(நூருல் ஹுதா உமர்)

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டத்தில் ஒலுவில் - 01, அல்- ஹிரா நகர், ஆலிம் நகர் போன்ற பிரதேசங்களின் 16 கிரவல் வீதி செப்பனிட்ட விடயத்தில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிரினால் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆதம்பாவாவிடம் இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.



அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒருங்கிணைப்புக்குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா தலைமையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் (16) பிரதேச செயலாளர் பி.ரி.எம் இர்பான் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்றது.

இதன்போதே அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. அஷ்ரப் தாஹிரினால் அட்டாளைச்சேனை பிரதேச வீதிகள், வடிகான்கள் அபிவிருத்திகள் சம்பந்தமான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

மேற்படி வீதி அபிவிருத்திகள் தொடர்பான பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபையில் எதுவித அனுமதிகளும் பெறப்படவில்லை என தெரிய வந்ததுடன் கிரவல் வீதிகளுக்கு மேலால் மீண்டும் கிரவல்களை போட்டு மக்கள் வரிப்பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதென நாடாளுமன்ற உறுப்பினர் கண்டித்துப் பேசினார்.நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை, திணைக்களங்களின் தலைவர்கள் உட்பட உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## அட்டாளைச்சேனை சந்தை சதுக்கத்தில்

# தொலைத் தொடர்பு கோபுரத்தை உடன் அகற்ற நடவடிக்கை

(எஸ்.எம்.அறூஸ்)



அட்டாளைச்சேனை சந்தை சதுக்கத்தில் முன்னாள் பதில் செயலாளர் பாயிஸின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட 5G தனியார் தொலைத் தொடர்புக் கோபுரத்தின் அடித்தளத்தை உடன் அகற்றுவதற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அம்பாரை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான ஏ.ஆதம்பாவா தலைமையில் வியாழக்கிழமை அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவரும், சிரேஸ்ட ஊடகவியலாளருமான எஸ்.எம்.அறூஸ் அவர்கள் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவிற்கு சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட 5G தனியார் கோபுரத்தின் அடித்தளத்தை அகற்றுமாறு பிரேரனை முன்வைத்திருந்தார். அப்பிரேரணை அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டு அடித்தளத்தை பிரதேச சபை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டபோதும் அன்றைய பதில் செயலாளர் அதற்குரிய நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை.

எனினும், அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த ஒரு வருடத்திற்குப் பிறகு முதல் தடவையாக புதிய தலைவரின் கீழ் நேற்று கூடிய போது இவ்விடயம் விரிவாக ஆராயப்பட்டது.

சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட தனியார் தொலைத் தொடர்புக் கோபுரத்தின் அடித்தளம் அகற்றப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இதற்கு அட்டாளைச்சேனை பிரதேச சபையின் புதிய செயலாளராகக் கடமையாற்றும் எல்.எம்.இர்பான் சம்மதம் தெரிவித்தார். இந்நிலையில் கூட்டத்தில் எழுந்து நின்று சிரேஸ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ் கருத்துத் தெரிவித்தார்.

## இலஞ்சம், ஊழல்,அதிகார துஷ்பிரயோகம்

# கட்டுப்படுத்தக் கூடியதாக கிளீன் ஸ்ரீலங்கா இருக்கவேண்டும்

(வெல்லாவெளி நிருபர்)



கிளீன் ஸ்ரீலங்கா என்பது சிறிய விடயங்களில் கவனம் செலுத்தாமல் இலஞ்சம் ஊழல் அதிகார துஷ்பிரயோகம், ஆட்கடத்தல், கொலைகள், மனித குலத்திற்கு எதிரான செயற்பாடுகள் என்பவற்றை கட்டுப்படுத்தக்கூடிய வகையில் இந்த கிளின் சிறிலங்கா திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகுமென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்...

கடந்த ஆட்சியில் இடம்பெற்ற பல செயற்பாடுகளை இந்த கிளீன் ஸ்ரீலங்கா தண்டிப்பதாக இருக்க வேண்டும். இந்த கிளின் ஸ்ரீலங்கா திட்டத்தில் நடை முறைப்படுத்தும் உறுப்பினர்களில் தமிழர்கள் உள்வாங்கப்படவில்லை என்பது ஒரு வேதனையான விடயம். இவ்வாறான குறைபாடுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. கடந்த காலத்தில் இடம்பெற்ற இனவாதம் மதவாதம் அற்ற செயற்பாடுகள் இந்த திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். 75 ஆண்டுகள் புரையோடி போன இந்த விடயங்களை உடனடியாக தீர்ப்பது என்பது சாத்தியமற்ற விடயம். இருப்பினும் அரசாங்கம் பக்கச்சார்பின்றி தமது செயற்பாடுகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

புதிய அரசாங்கத்தை மக்கள் ஓரளவு நம்புகின்றார்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட குறைபாடுகளை தவிர்த்து செயல்பட்டால் இவர்களை தமிழ் மக்கள் நம்புவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யானையின் மரணம் தொடர்பில் விசாரணை!



(பாறுக் ஷிஹான்)

காட்டு யானையொன்று பிரதான வீதி ஓரத்தில் உயிரிழந்தமை தொடர்பாக விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பொத்துவில் விக்டர் ஏத்தம் பிரதேச வீதி ஓரத்தில் காட்டு யானையொன்று வெள்ளிக்கிழமை காலை உயிரிழந்திருந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தது. இவ்விடயம் தொடர்பில் காரணத்தை அறிவதற்காக பிரேத பரிசோதனை நடைபெறுவதுடன் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. மேலும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் பொத்துவில் பொலிஸாரும் இணைந்து இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அண்மைக்காலமாக இப்பகுதிகளில் நூற்றுக்கணக்கான யானைகள் வருகை தந்த வண்ணம் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தின் ரீ சேட்கள் விநியோகம்



சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தின் உத்தியோகபூர்வ ரீ சேட்களை அமைப்பின் ஆலோசகர்களுக்கு வழங்கி வைக்கும் வேலைத் திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அமைப்பின் உதவித் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான றபீக் பிர்தௌஸ் தலைமையில் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வின்போது அமைப்பின் ஆலோசகரான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பணிப்பாளரும், பிறை எப்.எம் வானொலி சேவையின் பிரதானியுமான பசீர் அப்துல் கையூமுக்கான ரீ சேட்களை வழங்கி வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வின்போது சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தின் நிருவாகிகளான செயலாளர் எஸ்.அஷ்ரஃப்கான், உதவித் தலைவர் ஏ.எல்.எம்.சினாஸ், தேசிய அமைப்பாளர் எம்.ஏ.றமீஸ், தவிசாளர் ஏ.எல். றியாஸ், நிருவாக சபை உறுப்பினர் றாஸிக் நபாயிஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் தைப்பொங்கல் நிகழ்வு

(ஏ.எச் ஹஸ்பர்)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு தைப் பொங்கல் நிகழ்வு தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் வெள்ளிக்கிழமை (17) இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெயகௌரி ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற குறித்த தைப் பொங்கல் நிகழ்வில் விசேட பூஜை வழிபாட்டுடன் பொங்கல் பானையில் பொங்கல் வைத்து பகிர்ந்தளிக்கப்பட்டது.

பூஜை வழிபாட்டினை பாரதிபுரம் முத்துமாரியம்மன் பிரதம குருக்கள் க.பரப்பிரமஜோதி நிகழ்த்தினார். சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் நோக்கில் தைப் பொங்கல் கொண்டாடப்படுகிறது.

குறித்த நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் உட்பட சக உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.



# திருக்கோவில் விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு பட்ஜெட்டில் தீர்வு!





(திருக்கோவில் எஸ். கார்த்திகேசு)

திருக்கோவில் பிரதேச விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் கூட்டமானது திருக்கோவில் பிரதேச செயலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக் கூட்டமானது திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் ஒருங்கமைப்பில் அம்பாறை மாவட்ட தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரனின் தலைமையில் திருக்கோவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது திருக்கோவில் பிரதேச விவசாயிகள் நீண்ட காலமாக எதிர் கொண்டு வரும் பல்வேறுபட்ட விவசாயம் தொடர்பான பிரச்சினைகளை இவ்வாண்டு சமர்ப்பிக்கப்படவுள்ள அரசின் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளீர்ப்பு செய்து அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் விவசாயிகளின் பிரச்சினைகள் ஆராயப்பட்டன. அந்தவகையில் கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தம்பிலுவில் நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் தம்பிலுவில் கமநல சேவைகள் மத்தியநிலையம் ஆகிய பிரிவுக்குட்பட்ட விவசாய குளங்கள், விவசாயப் பாதைகள் மதகுகள், கால்வாய்கள் போன்றவற்றின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எட்டப்பட்டன.

இக்கூட்டத்தில் அம்பாறை மாவட்ட தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா, தம்பிலுவில் நீர்ப்பாசனப் எந்திரி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கிராம சேவை நிருவாக அதிகாரி மற்றும் அரச துறைசார் உத்தியோகத்தர்கள் திருக்கோவில் பிரதேச விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

# நூலக நிறுவனத்தின் 20வது ஆண்டு நிறைவும் தைப்பொங்கல் விழாவும்



நூலக நிறுவனம் இலங்கை தமிழ் பேசும் சமூகங்களின் ஆவணமாக்கல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் தனது பயணத்தில் 20 ஆண்டுகளை நிறைவு செய்து 21 ஆவது அகவையில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு பொங்கல் நிகழ்வும், 21 ஆவது ஆண்டு ஆரம்ப நிகழ்வும் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு நூலக நிறுவன அலுவலகங்களில் சிறப்பாக நடைபெற்றன.

இரண்டு இடங்களிலும் ஏக காலத்தில் நடைபெற்ற இந்நிகழ்வு ணழழஅ தளத்தின் மூலம் ஒருங்கிணைவு செய்யப்பட்டு நிகழ்நிலையாகவும் ஆர்வலர்கள் இணைந்திருக்கக் கூடியதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நூலக நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அலுவலர் ரஞ்சுதமலர் நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுகளின் மட்டக்களப்பு அரங்குக்கு சிறப்பு விருந்தினர்களாக மட்டக்களப்பு மாநகர முன்னாள் மேயர் தியாகராஜா சரவணபவன், தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பிரதிப் பதிவாளரும் நூலக நிறுவனத்தின் முன்னாள் ஆளுகைச் சபை உறுப்பினருமான சஞ்சீவி சிவகுமார், கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நிலாந்தினி செந்தூரன், போரதீவுப்பற்று உதவிப் பிரதேச செயலாளர் விவேகானந்தராசா துலாஞ்சனன், ஆயுர்வேத வைத்தியர் லாவண்யா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நூலக நிறுவனத்தின் தலைவர் இரத்தின ஐயர் பத்மநாபஐயர் ஆசியுரை நிகழ்த்தினார். நூலக நிறுவனத்தின் அறிமுகம், வளர்ச்சிப் போக்கு மற்றும் செயற்பாடுகள் பற்றிய தெளிவுபடுத்தல் உரையினை நிறுவனத்தின் ஆளுகைச் சபை உறுப்பினர் தில்லைநாதன் கோபிநாத் நிகழ்த்தினார்.

நூலக நிறுவனத்திற்கும் கல்வியியலாளர்களுக்குமான ஒருங்கிணைப்பு எனும் தலைப்பில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி, பேராசிரியர். எஸ். ரகுராம் உரையாற்றினார்.

பிராந்திய ஆவணப்படுத்தலும் அதன் முக்கியத்துவமும் குறித்து சஞ்சீவி சிவகுமார் உரையாற்றினார். நூலக நிறுவனத்தில் முன்னோர் ஆவணகத்தின் முக்கியத்துவமும் பற்றிய உரையை இ. மயூரநாதன் (ஆளுகை சபை உறுப்பினர்) நிகழ்த்தினார். ஆய்வும் நூலக நிறுவனத்தின் பங்களிப்பும் எனும் தலைப்பில் நிலாந்தினி செந்தூரன் (வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்) உரையாற்றினார்.

# நிமிஷாவை மரண தண்டனையிலிருந்து காப்பாற்ற முடியுமா?

## மூன்று பிரிவினரால் ஆளப்படும் ஏமன் நாட்டில் நீதி கிடைக்குமா?



ஏமன் நாட்டின் தலைநகர் சனாவில் உள்ள மத்திய சிறையில், தனக்கு உறுதி செய்யப்பட்ட மரண தண்டனை நிறைவேற்றப்படுமா அல்லது மன்னிப்பு வழங்கப்படுமா எனத் தெரியாத நிலையில் தவித்து வருகிறார் நிமிஷா பிரியா.

கேரளாவைச் சேர்ந்த செவிலியரான நிமிஷா, 2017இல் ஏமனில் அந்நாட்டு குடிமகன் தலால் அப்தோ மஹ்தி என்பவரை கொலை செய்த குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

நிச்சயம் தனது மகளை மீட்டுவிடலாம் என்ற நம்பிக்கையில், கடந்த 8 மாதங்களுக்கும் மேலாக சனாவில் தங்கியுள்ளார் நிமிஷாவின் தாய் பிரேமா குமாரி. ஷரிஆ சட்டத்தின்படி, பாதிக்கப்பட்ட மஹ்தியின் குடும்பம் “மன்னிப்பு” வழங்கினால் நிமிஷாவின் மரண தண்டனை இரத்து செய்யப்படலாம்.

உள்நாட்டுப் போரால் பிளவுபட்டுள்ள ஏமனில், எந்த அரசு நிமிஷாவின் வழக்கை கையாள்கிறது? ஏமனின் அரசியலில் நீண்ட காலமாக ஆதிக்கம் செலுத்தும் சவுதி அரேபியா அல்லது ஈரான் தலையிட்டால் வழக்கின் போக்கு மாறுமா?

### நிமிஷாவின் மரண தண்டனையை உறுதி செய்தது யார்?

நிமிஷா பிரியா தற்போது ஏமனில் சனா நகரில் உள்ள மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். உள்நாட்டுப் போரால் பிளவுபட்டுள்ள ஏமன் நாடு தற்போது 3 பிரிவினரால் ஆளப்படுகிறது.

சனா உள்ளிட்ட ஏமனின் ஒரு பகுதி ஹௌதி கிளர்ச்சிக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஹௌதிக்களின் அரசியல் பிரிவு தலைவராக உள்ள மெஹ்தி அல் மஷாத், அந்த கிளர்ச்சிக்குழு அமைத்துள்ள ஏமன் குடியரசின் (சனா) ஜனாதிபதியாக செயல்படுகிறார்.

சவுதி அரேபியா ஆதரவுடன் செயல்படும், ஐ.நா. அங்கீகாரம் பெற்ற அரசு ஏமனின் மற்றொரு பகுதியை கட்டுப்படுத்துகிறது. இந்த அரசின் தலைவராக, ஜனாதிபதி ரஷாத் அல் அலிமி செயல்படுகிறார்.மேற்கண்ட இரண்டும் அல்லாத, ஐக்கிய அரபு அமீரக ஆதரவு பெற்ற சதர்ன் டிரான் ஸிஷனல் கவுன்சில் ஏடன் துறைமுகம் உள்ளிட்ட ஏமனின் பகுதிகளை கட்டுப்படுத்துகிறது.

நிமிஷாவின் வழக்கில் அனைத்து முடிவுகளையும் எடுப்பது, ஹௌதி கிளர்ச்சிக் குழுவின் அரசியல் பிரிவே. ஆனால், ஹௌதி கிளர்ச்சிக் குழுவை இந்திய அரசு இதுவரை அங்கீகரிக்கவில்லை.

ஜனாதிபதி ரஷாத் அல் அலிமி தலைமையிலான சவுதி அரேபியா ஆதரவுடன் செயல்படும் அரசையே இந்தியா அங்கீகரித்துள்ளது.

நவம்பர் 2023இல் நிமிஷாவுக்கு உறுதி செய்யப்பட்ட தண்டனையை நிறைவேற்ற ஏமன் ஹௌதிக்களின் அரசியல் பிரிவு தலைவர் மெஹ்தி அல் மஷாத் கடந்த ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் ஒப்புதல் அளித்தார். சில ஊடகங்களில், இந்த ஒப்புதலை அளித்தது ஜனாதிபதி ரஷாத் அல் அலிமி தலைமையிலான அரசு என்ற செய்தி வெளியிடப்பட்டது.

இதையடுத்து, டில்லியில் இருக்கும் ஏமன் நாட்டு தூதரகம், “ஏமன் நாட்டில் மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ள கேரள செவிலியர் நிமிஷா பிரியா, ஹௌதி கிளர்ச்சிக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள சனாவின் சிறையில் உள்ளார்.”

“இந்த வழக்கு முழுவதையும் கையாள்வது ஹௌதி கிளர்ச்சிக் குழுவே. ஜனாதிபதி ரஷாத் அல் அலிமி நிர்வாகத்துக்கும் இதற்கும் தொடர்பில்லை.” என்று விளக்கமளித்ததாக பிடிஐ செய்தி தெரிவித்தது.

### இந்திய அரசு செய்யக்கூடியது என்ன?

“நிமிஷாவின் வழக்கில் தன்னால் முடிந்த அனைத்தையும் இந்திய அரசு செய்யும். ஆனால், ஹௌதி கிளர்ச்சிக் குழுவுடன் நேரடி தூதரகத் தொடர்பு



இல்லாதது, மத்திய கிழக்கு நாடுகளின் கடுமையான தண்டனைச் சட்டங்கள் போன்றவற்றையும் நாம் கருத்தில்கொள்ள வேண்டும்,” என்கிறார் லோஜலா கல்லூரியின் பேராசிரியரும் சர்வதேச விவகாரங்கள் நிபுணருமான கிளாட்ஸன் சேவியர்.

இதற்கு உதாரணமாக, இலங்கையைச் சேர்ந்த ரிஸானா நஃபீக் என்ற பெண்ணுக்கு சவுதி அரே பியாவில் வழங்கப்பட்ட தண்டனையை சுட்டிக்காட்டுகிறார் கிளாட்ஸன் சேவியர்.

கடந்த 2005ஆம் ஆண்டு ஒரு பணிப்பெண்ணாக சவுதி அரேபியாவுக்கு வேலைக்குச் சென்றார் ரிஸானா. பணியின்போது, அவரது பராமரிப்பில் இருந்த ஒரு 4 மாத குழந்தையை கொலை செய்தார் என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

ஆனால், ரிஸானா அதை மறுத்தார். பால் புட்டியில் குழந்தைக்கு பால் புகட்டும்போது, மூச்சுத் திணறி குழந்தை இறந்துவிட்டதாக அவர் தெரிவித்தார் என்றும், இந்த சம்பவம் நடந்தபோது ரிஸானாவுக்கு வெறும் 17 வயது தான் என்றும் அம்னெஸ்டி இன்டெர்நேஷனல் அமைப்பின் அறிக்கை கூறுகிறது.

ரிஸானா 2005ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார், 2007ஆம் ஆண்டு அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. 2010ஆம் ஆண்டு சவுதியின் உச்சநீதிமன்றம் அதை உறுதி செய்தது.

“மத்திய கிழக்கு நாடுகளின் சட்டங்கள் கடுமையானவை. அங்கு வேலைக்கு செல்பவர்கள் அதை நன்கு அறிந்து தான் செல்வார்கள். அப்படியிருக்க தனது நாட்டு குடிமகன் ஒருவரது கொலை தொடர்பான வழக்கு எனும்போது, அதை அந்த நாட்டு அரசுகள் இன்னும் கடுமையாகவே கையாளும்.”

“இதில் பிற நாட்டு அரசுகளின் தலையீடுகளுக்கு வரம்புகள் இருக்கும். இறுதி முடிவு என்பது பாதிக்கப்பட்ட குடும்பத்தின் கையில் இருக்கும். கொலைக் குற்றம் போன்ற கடுமையான குற்றங்களில் அவர்கள் மன்னிப்பு வழங்கினால் மட்டுமே விடுதலை கிடைக்கும்.” என்கிறார் கிளாட்ஸன் சேவியர்.

ஷரிஆ சட்டம் அமுலில் இருக்கும் இந்த மத்திய கிழக்கு நாடுகளில், பாதிக்கப்பட்ட குடும்பங்களிடம் “குருதிப் பணம்” எனும் இழப்பீடு கொடுத்து, மன்னிப்பு பெற்றால், குற்றவாளியின் தண்டனை குறைக்கப்படலாம் அல்லது முழு விடுதலையும் பெறலாம். கொலை, காயப்படுத்துதல் அல்லது சொத்துகளைச் சேதப்படுத்துதல் போன்ற பல்வேறு வகையான குற்றங்களுக்கு இது பொருந்தும்.

ரிஸானாவின் வழக்கில் தண்டனையை சவுதி உச்சநீதிமன்றம் உறுதி செய்த பிறகு, அவருக்கு மன்னிப்பு வழங்க பாதிக்கப்பட்ட குடும்பம் மறுத்துவிட்டது.

ரிஸானாவைக் காப்பாற்ற அப்போதைய இலங்கை அரசு பல முயற்சிகள் எடுத்தது. ஆனால் அவை பலனளிக்கவில்லை.கடந்த 2013ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் ரிஸானாவுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அதை அம்னெஸ்டி இன்டெர்நேஷனல் உட்பட மனித உரிமை குழுக்கள் வன்மையாக கண்டித்தன.

“இந்திய அரசு தனது இராஜ்ஜிய தொடர்புகள் மூலம் தேவையான உதவிகளைச் செய்கிறது. ஆனால், ஏமன் நாட்டு குடிமகனின் கொலை தொடர்பான வழக்கு என்பதால், இதில், நமது அரசுக்கும் சில வரம்புகள் உள்ளன” என்கிறார் பேராசிரியர் கிளாட்ஸன் சேவியர்.

இதுதொடர்பாக சமூக அறிவியல் ஆய்வாளர் மற்றும் பேராசிரியர் பெர்னார்ட் டி சாமி ”இந்த வழக்கில் முழுக் கட்டுப்பாடும், ஹௌதி கிளர்ச்சிக் குழுவின் கையில் உள்ளது. எனவே, சவுதி அரேபியா அரசோ அல்லது அதன் ஆதரவு பெற்ற ஜனாதிபதி ரஷாத் அல் அலிமி அரசோ இதில் ஆர்வம் காட்டாது” என்கிறார்.

ஏமனின் அரசியலில், குறிப்பாக ஹௌதி கிளர்ச்சிக் குழுவின் மீது அதிக ஆதிக்கம் செலுத்தும் ஈரான் போன்ற ஒரு நாடு, இந்த விவகாரத்தில் உதவ வாய்ப்பிருப்பதாக அவர் கூறுகிறார்.

“இதற்கு முன்னும் பல சமயங்களில் தனது இராஜ்ஜிய தொடர்புகளைப் பயன்படுத்தி பல்வேறு நாடுகளில் இருந்து இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளனர். அப்படியிருக்க, இந்த வழக்கில் கூடுதலாக அவகாசம் கிடைத்தால், நிமிஷா மீட்கப்பட வாய்ப்பு உள்ளது” என்று கூறும் பெர்னார்ட் டி சாமி, அதற்கு பாதிக்கப்பட்ட குடும்பத்தின் மன்னிப்பு முக்கியம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

“இஸ்லாமியர்களின் புனித மாதமான “ரமலான்” மாதம் நெருங்கிவருகிறது. அந்த மாதத்தில் பல வழக்குகளில் மன்னிப்பு வழங்கப்படும். எனவே, அதைக் கருத்தில்கொண்டு பாதிக்கப்பட்ட குடும்பம் மன்னிப்பு வழங்க வாய்ப்புள்ளது” என்று கூறினார் பேராசிரியர் பெர்னார்ட் டி சாமி.



# பெருந்தோட்டத் துறையின் ஒளிமயமான எதிர்காலம்

## முதலாளிமார் சம்மேளனத்தின் தலைவர் சுனில் பொஹோலியத்த

கிட்டத்தட்ட 170 வருடங்களாக காலத்திற்கு காலம் பல்வேறு சோதனைகளை எதிர் கொண்ட இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழில்துறை தொடர்ச்சியான சவால் களுக்கு மத்தியிலும் வலுவாக முன்னோக் கிச் செல்ல முடிகிறது.

இந்த காலகட்டத்தில், தொழில்துறையின் உரிமையாளர் தன்மையானது 124 ஆண்டு கால பிரிட்டிஷ் காலனித்துவ உரிமையிலி ருந்து சுதந்திரத்திற்குப் பிந்தைய சகாப் தத்திற்கு (1948 - 1975) 27 ஆண்டுகள் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு வழிவகுத்தது.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் தேசியவாத உணர்வுகள் நில உரிமைக ளின் முடிவுகளில் மாற்றங்களுக்கு வழிவகுத்தது. இது அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் (1975 - 1992) 17 வருடங்கள் கீழ் பொது உடைமைக்கு வழிவகுத்தது.

இறுதியாக, அரச நிர்வாகத்தின் தோல்வி யால், 1992இல் இத்தொழில் தனியார் மயமாக்கப்பட்டு, தற்போதைய நிர்வாகத் தின் கீழ் வந்தது.

இந்த தனித்துவமான வேறுபாடுகளுக்கு மத்தியில் தேயிலை, இறப்பர் மற்றும் இதர ஏற்றுமதி பயிர்களின் தரத்தில் இலங்கை ஈடு இணையற்று சிறந்து விளங்குகிறது.

நீண்ட காலமாக இலங்கையின் மரபுரி மையாக இருந்து வந்த இத்தொழில் இன்று மிகவும் நெருக்கடியான கட்டத்தை எட்டி யுள்ளது.

கடந்த காலங்களில் இலங்கையில் பெருந்தோட்டத் தொழில்துறையானது உலகளாவிய ரீதியில் பெரும் சவால்களுக்கு முகம் கொடுக்காமல் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தது. ஆனால் இன்று உலக சந்தையில் உள்ள பல போட்டியாளர்கள் மற்றும் உள்ளூர் தொழில்கள் நமது தொழில்துறைக்கு சவாலாக உள்ளன.

### பெருந்தோட்டத் தொழில் எதிர்கொள்ளும் சவால்கள்

மேற்குறிப்பிட்ட சவால்கள் காரணமாக பெருந்தோட்டக் கைத்தொழிலை வெற்றிக ரமாக நடத்துவது மிகவும் சிக்கலான பணியாக மாறியுள்ளதுடன் கடந்த கால நிர்வாக நிறுவனங்களில் இருந்த சில பிரச்சினைகளை சரி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. மேலும் தனியார் மற்றும் அரசதுறை நிர்வாகங்களுக்கு இடையே நிலவும் பிரச்சினைகள் காரண மாக மேலும் நெருக்கடிக்கு உள்ளாகியுள் ளது.

தற்போது பெருந்தோட்டக் கைத்தொழில் உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் பல் வேறு துறைகளில் போட்டியை எதிர்நோக்கி யுள்ளது.

குறிப்பாக நாட்டில் தொழிலாளர்களைப் பெறுவதில் இருந்து ஆசியா மற்றும் ஆபிரிக்கா முழுவதும் பாரிய அளவிலான தேயிலை உற்பத்தி அதிகரிப்பு உள்ளிட்ட பல காரணிகளால், நீண்ட காலமாக உலகில் தனது ஆதிக்கத்தை செலுத்தி வந்த இலங்கையின் பெருந்தோட்ட தொழில்துறை தற்போது சவாலை எதிர்நோக்கியுள்ளது.

பெருந்தோட்டக் கைத்தொழிலை ஏனைய தொழில் துறைகளுடன் ஒப்பிடும் போது இங்கு குறிப்பிடத்தக்க சில வேறு பாடுகள் காணப்படுகின்றன. பெருந்தோட்டக் கைத்தொழில் தனது மூலப்பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் அதே வேளை, ஏனைய கைத்தொழில்கள் தமக்குத் தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்கின்றன. தோட்டத் தொழிலில் தேவையான உள்ளீடுகள் மட்டுமே இறக்குமதி செய்யப்படுகின்றன. இதன் மூலம், தேசிய பொருளாதாரத்தில் பெருந்தோட்டக் கைத்தொழில் துறையின் பங்களிப்பு சிறப்பிக்கப்படுகிறது.

சம்பளப் பிரச்சினைகள், உற்பத்தித் திறன் வீழ்ச்சி அவசர மற்றும் மூலோபாய முடிவுகளை எடுப்பது போன்ற சூழ்நிலை களில் எடுக்கப்பட்ட தவறான முடிவுகளினால் இன்று பெருந்தோட்ட மக்கள் மற்றும் முழு நாட்டிலும் உள்ளவர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை நோக்கித் திரும்பு கின்றனர்.

பெருந்தோட்டத் தொழிலை நேரடியாகப் பாதிக்கும் காலநிலை மாற்றங்கள் உலகளாவிய ரீதியில் ஏற்படுவதுடன் இலங்கையின் விவசாயத் துறையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. தோட்டப்பயிர்கள் குறிப்பிட்ட சுற்றுச்சூழல் மற்றும் தட்பவெப்ப நிலைகளைக் கொண்டி ருப்பதால், உலகளாவிய காலநிலை மாற்றம் ஒரு நிலையான தொழிற்துறையை பராமரிப்பதற்கு ஒரு சவாலாக உள்ளது.

மேலும் புரிந்துணர்வின்மை மற்றும் பொருளாதார ரீதியாக தவறான முடிவுகள், அத்தியாவசிய வேளாண் இரசாயனங்களை தடை செய்தல், சரியான பொருளாதார மதிப்பீடு இல்லாமல் இயற்கை விவசாயத்திற்கு மாறுதல் மற்றும் பிற பாதகமான விளைவுகளும் தொழில்துறையை பாதித்தன. தேவையான இரசாயனங்கள் மற்றும் போதிய உரங்கள் இன்றி விவசாயம் பேண முடியாத நிலையில் மேற்படி முடிவுகள் தோட்டத்தின் பொருளாதாரத்தையும் கடுமையாகப் பாதித்துள்ளது என்றே கூறலாம்.

மற்றொரு பெரிய பின்னடைவு முள் தேங்காய் செய்கைக்கு (ஃபாம்ஒயில்) தடை விதிக்கப்பட்டுள்ளது. குறைந்த பயிரிடப்பட்ட பகுதிகளில் மழையின் அளவு அதிகரித்து இறப்பரை விட முள்தேங்காய் செய்கைக்கு ஏற்ற சூழல் இருந்ததால் செய்கை தடை செய்யப்பட்டது. இந்த மாற்றத்தை உணர்ந்து, தனியார் துறை யினர் 2000ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் முள்தேங்காய் பயிரிடத் தொடங்கினர். இது எதிர்காலத்தில் வணிக ரீதியாக முக்கியத்துவம் பெறுகிறது. முதற்கட்டமாக 20,000 ஹெக்டேயர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டாலும், 11,000 ஹெக்டேயரில் பயிரிடப்பட்டதை அடுத்து, செய்கையை அரசு நிறுத்தியது. இதனால், கனமழையால், இறப்பர் தோட்டம் தாக்குப் பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டது. அரசு விதித்த தடையால் முள்தேங்காய் செய்கை யின் விரிவாக்கமும் தொடர முடியவில்லை.

இலங்கை பெருந்தோட்டக் கைத்தொழிலின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்காக உள்ளூர் தோட்ட நிறுவனங்களில் முதலீடு மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை முறையாக தீர்த்து வைப்பதன் மூலம் பெருந்தோட்டத்துறையின் எதிர்காலத்திற்கு மட்டுமன்றி சவாலான காலக்கட்டத்தில் இலங்கையின் பொருளாதாரத்திற்கு வலுவான பங்களிப்பை வழங்குவதற்கான அதன் வளர்ச்சியையும் ஆற்றலையும் வலுப்படுத்துவது மிகவும் முக்கியமானதா கும். இதன் விளைவாக உள்ளூர் பெருந் தோட்டக் கம்பனிகள் உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளவும் தற் போதைய தேவைகளைப் பூர்த்தி செய்ய வும் பல செயலூக்கமான நடவடிக் கைகளை எடுத்துள்ளன.

# கலாபூஷணம் காதரை நினைந்து விருதளித்தது மருதமுனை

**ஜெஸ்மி எம்.மூஸா**

மருதமுனை ஊடகப் பேரவையின் ஏற்பாட்டில் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் பீ.எம்.எம்.ஏ.காதரின் ஓரண்டு நினைவுகள் பற்றிய ”நினைந்து பேசுதல்” ஓராண்டு நினைவலைகள் நிகழ்வு மருதமுனை அல்–மனார் மத்திய கல்லூரி அஷ்ரஃப் ஆராதனை மண்டபத்தில் (13) நடந்தேறியது.

பேரவையின் தலைவர் எம்.எல்.எம். ஜமால்டீன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின் கருப்பொருள் உரையினை ஊடகவியலாளரும் இலக்கிய விமர்சகருமான ஜெஸ்மி எம்.மூஸா நிகழ்த்தினார்

விடிவெள்ளி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம்.பீ.எம்.பைறூஸ் ”விடிவெள்ளிப் பயணத்தில் பீ.ம்.எம்.ஏ” என்ற தலைப்பிலும் தென்கிழக்குப்பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் எம்.அப்துல் றஸாக் ”நான் கண்ட கலாபூஷணம் காதர்” என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினர்.









காதரின் எழுத்துப் பணியினை எதிர்கால சந்ததியினருக்கு அடையாளப்படுத்தும் நோக்கில் மருதமுனை மக்கள் சார்பில் பேரவையின் பரிந்துரைக்கமைய ”வாழும் ஊடக ஆளுமை” விருது காதரின் குடும்பத்தவர்கள் சார்பில் காதரின் புதல்வி மருதமுனை பொது நூலகத்தின் நூலகர் ஹரீஸா சமீமிடம் கையளிக்கப்பட்டது பத்திரிகைகளின் ஆசிரியர்களால் அனுப்பி வைக்கப்பட்ட இரங்கல் உரைகள் நிகழ்வின் போது வாசித்தளிக்கப்பட்டன.

தினகரன்,தினகரன் வார மஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவரின் ”மொழியாற்றலும் ஊடகத் திறனும் கொண்ட இனிய நண்பர் காதர்” என்ற உரையினை தென்கிழக்குப் பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர் கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ் அரங்கில் முன்வைத்தார். ”அமரர் பீ.எம்.எம்.ஏ.காதர் ஐயாவின் நினைவுகளோடு” செய்தியினை வீரகேசரியின் செய்தியாசிரியர் ஜே.ஜி.ஸ்டீபன் வழங்கியிருந்தார். அதனை வியூகம் முகநூல் தொலைக்காட்சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.ஜனூஸ் சமர்ப்பித்தார். தினகரன் கட்டுரையாசிரியர் எஸ். பாண்டியனின் ”ஊடகத்துறை மீது தீராக்காதல் கொண்ட இனிய நண்பர் காதர்” ஆசியினை ஊடகப் பேரவையின் பிரதித் தலைவரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அறிவிப்பாளரும் அதிபருமான ஏ.முகம்மட் அன்சார் வாசித்தளித்தார். ”காதரின் ஆக்கங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியவை” தலைப்பில் ஒருவன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் தினகரனின் முன்னாள் ஆசிரியர்களில் ஒருவருமான க.குணராசாவின் அனுதாப செய்தியினை பேரவையின் பொருளாளரும் பிறை எப்.எம்.அறிவிப்பாளரும் கலாசார உத்தியோகத்தருமான ஏ.எல்.எம்.ஷினாஸ் வாசித்தார்.





”காதரும் குடும்ப உறவும்” தலைப்பினில் ஊடகவியலாளர் ஏ.எல்.எம்.ஷினாஸ்ும் ”பீ.எம்.எம்.ஏயும் விருதுகளும்” தலைப்பில் பேரவையின் உப செயலாளரும் ஊடகவியலாளருமான றாஸிக் நபாயிஸ்ும் “இஸ்லாமிய ஒழுக்கவியலுடன் எழுதிய காதர்” தலைப்பினில் மருதமுனை உலமா சபையின் தலைவர் விரிவுரையாளர் எப்.எப்.அன்சார் மௌலானாவும் உரையாற்றினர்.

கலாநிதி எம்.றியாஸ், சிரேஷ்ட ஒலி–ஒளிபரப்பாளரும் பேரவையின் பிரதித் தலைவருமான இஸ்மாயில் பீ. மஆரிப் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கவிஞரும் ஓய்வுநிலை நிருவாக உத்தியோகத்தருமான மருதமுனை ஹஸனின் கவிதையுடன் காதரின் புதல்வி ஹரீஸா சமீமின் ஏற்புரையும் நிகழ்வின் விஷேட அம்சங்களாயின.

அறிவிப்பாளர் ஷினாஸ் நிகழ்வினை தொகுத்தளித்தார்.வியூகம்,ரீ.எம். நியூஸ், ஏ.டீ.நியூஸ் ஆகிய முகநூல் தொலைக்காட்சிகள் நிகழ்வினை நேரஞ்சல் செய்தன. அம்பாறை மாவட்ட ஊடக சங்கங்களின் தலைவர்கள்,கல்வியியலாளர்கள், வர்த்தகர்கள்,காதரின் குடும்ப உறவினர்கள், கலைஞர்கள் எனப் பெருமளவிலானோர் நிகழ்வில் பங்கேற்றனர்.

# ‘எத்திசையும் தமிழணங்கே...’ சென்னையில் நடந்த கோலாகல அயலக தமிழர் தின விழா

**சசிகுமார் சென்னை**

தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு. நாசரால் ஏற்பாடு செய்திருந்த அயலகத் தமிழர் தினம் “எத்திசையும் தமிழணங்கே” என்ற தலைப்பில் ஜனவரி 11, 12ஆம் திகதிகளில் நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

12-01-2025 காலை 10 மணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கலந்து கொண்டு சிறப்பித்து அயலக தமிழர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார். 11-01-2025 நடைபெற்ற தொடக்க விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கண்காட்சியினை தொடக்கி சிறப்புரையாற்றினார்.

12 ஆம் திகதிகளில் மாலை தமிழ் சங்கங்களில் சங்கமம் நிகழ்வில் சா.மு. நாசர் அவர்கள் கலைஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளை 2024இல் வெளியிட்ட பீ.மரியதாஸ் எழுதிய மலையகம் இங்கிருந்து எங்கே?, சி.வி.வேலுப்பிள்ளையின் எல்லைப்புறம், விஸ்மாஜினி, சிவபாக்கியம் குமாரவேல் எழுதிய லெச்சுமி தந்த மலையக வாய்மொழி இலக்கியம், பதுளை வ.ஞானப்பண்டிதன் அவர்களின் கதிர்காமத் திருமுருகன், பேராசான் மு.நித்தியானந்தன் எழுதிய இந்திய இலக்கியம்: கைலாசமூர்த்தியும் அனந்தமூர்த்தியும் ஆகிய ஆறு நூல்களும் அமைச்சர் சா.மு. நாசர் வெளியிட்டு வைத்ததோடு வெளியீட்டாளர் எச்.எச்.விக்கிரமசிங்க அவர்களுக்கும் காயத்ரி விக்கிரமசிங்க அவர்களுக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவித்து சிறப்பு செய்தார். தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் எம். எம். அப்துல்லா, அரசு செயலாளர், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை திருமதி. ரீட்டா ஹரிஷ் தக்கர், தமிழ்நாடு சிவசேனா மாநில தலைவர் சசிகுமார் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இந்த ஆறு மலையக நூல்களை அயலக தமிழர் தின விழாவில் வெளியீடுவதற்கான சகல ஏற்பாடுகளையும் அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் பா.கிருஷ்ணமூர்த்தி I.O.F.S அவர்களின் வழிநடத்தலில் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.





## கலை ஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளையின் 06 நூல்கள் வெளியீடு




கலைஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளை கடந்த வருடம் 2024இல் வெளியிட்ட ஆறு நூல்களையும் அயலகத் தமிழர் மாநாட்டில் வெளியிட்டு வைத்தது நூல்களை எழுதிய மலையக எழுத்தாளர்களுக்கு கிடைத்த மாபெரும் கௌரவமாகும். தமிழகத்திலிருந்து இலங்கையை நோக்கிப் புலம்பெயர்ந்த இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களின் வழிவந்தவர் பதுளை கலைஒளி முத்தையாபிள்ளை (1926-1991) அவர்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பிறந்த முத்தையாபிள்ளை அவர்கள், புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியில் கல்வி கற்று, இலங்கையில் தோட்ட நிர்வாகியாகப் பணியாற்றியவர். மலையக மக்களுக்காக அவர் ஆசிரியராக இருந்து வெளியிட்ட “கலைஒளி” என்ற மாதப்பத்திரிகை வாயிலாக அவர் வாழ்நாள் முழுதும் கலைஒளி முத்தையாபிள்ளை என்றே அழைக்கப்பட்டார்.

அவரது மூத்த புதல்வர் முத்தையாபிள்ளை நித்தியானந்தன் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் பொருளியல் விரிவுரையாளராகப் பணியாற்றி, தற்போது லண்டனில் வாழ்கிறார். மு. நித்தியானந்தன் அவர்களும் எச்.எச்.விக்கிரமசிங்க அவர்களும் இணைந்து “கலைஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளை“ அமைப்பினை நிறுவி, மலையக இலக்கியம் சார்ந்த நூல்களை வெளியிட்டு வருகின்றனர். இவர்கள் வெளியிட்ட நான்கு நூல்களுக்கு இலங்கை சாகித்ய மண்டலப் பரிசில்கள் கிடைத்துள்ளன.

பதுளை வ.ஞானபண்டிதன் அவர்கள் 1940 இல் வெளியிட்ட “கதிர்காமத் திருமுருகன்” என்ற அரிய நூலைத் தேடி, 82 ஆண்டுகளின் பின், அந்த நூலின் மறுபதிப்பைக் கொண்டு வந்துள்ளனர். கதிர்காமம் என்ற தமிழர் திருத்தலத்தினை எவ்வாறு சிங்களவர்கள் கைப்பற்றினர் என்ற வரலாற்றைப் பேசும் நூல் இது. பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் முனைவர் செல்லத்துரை சுதர்சன் இந்த நூலுக்கு நீண்ட ஆராய்ச்சி முன்னுரை எழுதி கனம் சேர்த்திருக்கிறார்.

தமிழகத்திலிருந்து புது வாழ்வு தேடி இலங்கைக்குச் சென்ற இந்தியத் தமிழர்கள் மத்தியில் நிலவிய சோகம் ததும்பும் நாட்டார் பாடல்களை 80 ஆண்டுகளுக்கு முன்னர் சிவபாக்கியம் குமாரவேல் அம்மையார் பதிவு செய்திருந்திருக்கிறார். அந்த அரிய பெரும் ஆவணத்தை “லெச்சுமி தந்த மலையக வாய்மொழி இலக்கியம்” என்ற தலைப்பில் அழகிய பதிப்பாக அந்த நூலை வெளிக்கொண்டு வந்துள்ளனர் கலைஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளை அமைப்பினர்.

லண்டனிலிருந்து பேராசான் மு.நித்தியானந்தன் அவர்கள் எழுதிய “இந்திய இலக்கியம்: கைலாசபதியும் அனந்தமூர்த்தியும்” என்ற ஆராய்ச்சி நூலையும் வெளியிட்டுள்ளனர். கன்னடத்தின் தலையாய எழுத்தாளரும் பத்மபூஷன் விருது பெற்றவருமான ஆங்கிலப் பேராசிரியர் யு.ஆர். அனந்தமூர்த்தி அவர்கள் பர்மிங்காம் (Birmingham) பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆராய்ச்சிக்காகப் பயின்றுகொண்டிருந்த வேளையில், அதே காலப்பகுதியில் “தமிழில் வீரயுகக்கவிதை“ பற்றிய முனைவர் பட்ட ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த பேராசிரியர் க.கைலாசபதியும் இணைந்து, அப்போது லீட்ஸ் (டுநநனள) பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த காமன்வெல்த் இலக்கிய மாநாடு பற்றி வுைஅநள டுவைநசயசல ளூரீடநஅநவெ என்ற பத்திரிகைக்கு எழுதிய கடிதங்களைத் தேடி, 60 ஆண்டுகளின் பின்னர் முதல் முறையாக இந்தக் கடிதங்கள் எழுப்பியுள்ள இலக்கிய சர்ச்சையை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார் பேராசான் மு.நித்தியானந்தன்.

கன்னட இலக்கிய உலகிலும் யு.ஆர். அனந்தமூர்த்தியின் இந்த இலக்கியப் பங்களிப்பு அறியப்படாத நிலையில் இந்த நூல் மிக முக்கியம் பெறுகிறது. இலங்கை சுதந்திரம் அடைந்தபோது இலங்கைப் பாராளுமன்றத்தை அலங்கரித்த மலையகப் பாராளுமன்ற அங்கத்தவரான சி.வி.வேலுப்பிள்ளை அவர்கள் மலையகத்தின் மூத்த ஆங்கிலக் கவிஞராவர். கவி ரவீந்திரநாத் தாகூர் 1934 இல் இலங்கைக்கு விஜயம் செய்தபோது, அவரிடம் சமர்ப்பிப்பதற்காகவே எழுதப்பட்ட “விஸ்மாஜினி” (Vismadgenee) என்ற ஆங்கிலக் கவிதை நூலை 90 ஆண்டுகளுக்குப்பின் மறுபதிப்புச் செய்திருப்பதுடன், அதன் தமிழாக்கத்தையும் தமிழில் தந்திருக்கிறார் மு.நித்தியானந்தன்.

லண்டனையும் இலங்கையையும் இந்தியாவையும் இணைத்து வெளியாகியுள்ள இந்த மணியான ஆறு நூல்களையும் இந்த அரங்கில் வெளியிட்டு வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். கலைஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளை அமைப்பினர் தங்கள் வெளியீட்டுப் பணியினைத் தொடர்ந்து மேற்கொண்டு தமிழ் இலக்கிய உலகிற்கு அணி சேர்க்க வேண்டுமென்று நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி வாழ்த்துகளை தெரிவித்தார்.

உலக வலம்

# லொஸ் ஏஞ்சல்ஸில் காட்டு தீ அணைக்கும் பணிகள் முன்னேற்றம்



லொஸ் ஏஞ்சல்சில் காட்டுத் தீயை அணைக்கும் பணிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என தீயணைப்பு துறையினர் தெரிவித்தனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள லொஸ் ஏஞ்சல் ஸில் கடந்த 7ஆம் திகதி காட்டுத் தீ ஏற்பட்டது. லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏற்பட்ட காட்டுத் தீயை கட்டுக்குள் கொண்டு வர வீரர்கள் தீவிரம் காட்டி வருகின்றனர். தண்ணீர் பற்றாக்குறையால் ஹெலிகொப்டர்கள் வாயிலாக கடல் நீரில் தண்ணீர் இறைக்கப்பட்டு தீயை அணைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஒன்பது நாட்களுக்கும் மேலாக தீ எரிவதால் இதுவரை மொத்தம் 40,000 இற்கும் அதிகமான ஏக்கர் பரப்பு எரிந்து நாசமாக்கியுள்ளது. 12,000 இற்கும் அதிகமான கட்டமைப்புகள் தீயால் அழிக்கப்பட்டுள்ளன. காட்டுத்தீயினால் இதுவரை 25 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில், காற்றின் வேகம் தற்போது கொஞ்சம் தணிந்துள்ளது. இதனால் தீயை அணைக்கப் போராடி வரும் தீயணைப்பு வீரர்களின் பணிகளில் சற்று ஆறுதலைக் கொடுத்துள்ளது. தீ அணைக்கும் பணிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என தீயணைப்பு துறையினர் தெரிவித்தனர்.

# அரசியலிலிருந்து விலகும் ட்ரூடோ!



கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, அனைத்து தரப்பிலும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கனடாவில் அடுத்து நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்றும், அரசியலில் இருந்து விலகுவதாகவும் அறிவித்துள்ளார்.

ஒரு தசாப்தத்திற்கு முன்பு, இளம், ஆற்றல் மிக்க தலைவராகக் கொண்டாடப்பட்ட ட்ரூடோவின் வாழ்க்கையின் ஆச்சரியமான முடிவு இதுவாகும்.

"எனது சொந்த முடிவுகளின் அடிப்படையில், நான் வரவிருக்கும் தேர்தலில் போட்டியிட மாட்டேன்" என்று ட்ரூடோவின் கருத்துக்களை மேற்கொள்ளிட்டு குளோபல் நியூஸ் புதன்கிழமை (15) செய்தி வெளியிட்டுள்ளது. அதேநேரம், அரசியலில் இருந்து விலகிய பிறகு என்ன செய்வேன் என்று யோசிக்க தனக்கு அதிக நேரம் இல்லை என்றும் ட்ரூடோ கனேடிய செய்திச் சேவையிடம் தெரிவித்துள்ளார்.

கடும் அழுத்தங்களுக்கு மத்தியில் கனடாவின் லிபரல் கட்சி தலைவரை தேர்ந்தெடுத்ததையடுத்து, கனடா பிரதமர் பதவியில் இருந்து விலகுவதாக ட்ரூடோ அண்மையில் அறிவித்திருந்தார். ட்ரூடோ பிரதமர் பதவியில் இருந்து விலகிய பின்னரும், தேர்தல் நடைபெறும் வரை சில மாதங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பார்.

தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்ற அவரது முடிவிற்குப் பிறகு, புதிய நாடாளுமன்றத்தில் அமைச்சராக இருப்பதை நிறுத்திக் கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கனடாவில் ட்ரூடோவும் அவருக்குக் கீழ் உள்ள லிபரல் கட்சியும் மிகவும் செல்வாக்கற்றதாகிவிட்டதால், அவரது அரசியல் ஓட்டத்தின் சம்பிரதாயமற்ற பதவி விலகல் ஏற்பட்டிருக்கிறது.

# பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான ஒப்பந்தம் முடிவு: இஸ்ரேல் பிரதமர்



காஸா பகுதியில் ஹமாஸ் பிடியில் உள்ள பணயக்கைதிகளை திருப்பி அனுப்புவதற்கான ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

காஸாவில் போர்நிறுத்தம் மற்றும் பலஸ்தீன பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தையில் கடைசி நிமிடத் தடைகள் ஏற்பட்டதாக நெதன்யாகுவின் அலுவலகம் கூறிய ஒரு நாள் கழித்து இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

அதன்படி, "பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான ஒப்பந்தம்" எட்டப்பட்டதாகவும், பின்னர் அதற்கு ஒப்புதல் அளிக்க அரசியல்-பாதுகாப்பு அமைச்சரவையைக் கூட்டுமாறு பிரதமர் உத்தரவிட்டதாகவும் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் வெள்ளிக்கிழமை தெரிவித்தது. நெதன்யாகுவின் விடியலுக்கு முன்னதான அறிக்கை, ஒப்பந்தத்திற்கு இஸ்ரேலின் ஒப்புதலுக்கான வழியை தெளிவுபடுத்தியது.

இது காஸா பகுதியில் நிலவும் மோதலை இடைநிறுத்துத்துவதுடன் காஸாவில் உள்ள போராளிகளால் பிணைக் கைதிகளாக இஸ்ரேலால் பிடிக்கப்பட்ட பலஸ்தீனிய கைதிகளுக்கு ஈடாக விடுவிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் நூறாயிரக்கணக்கான இடம்பெயர்ந்த பலஸ்தீனியர்கள் காஸாவில் உள்ள தங்கள் வீடுகளுக்கு திரும்ப அனுமதிக்கும்.

இதனிடையே வியாழக்கிழமை (16) இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல்களில், போரால் அழிக்கப்பட்ட பிரதேசத்தில் குறைந்தது 72 பேர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் முக்கிய மத்தியஸ்தரான கட்டாரும் அறிவித்த ஒரு நாளுக்குப் பின்னர், நெதன்யாகுவின் அரசாங்கக் கூட்டணியில் அதிகரித்து வரும் பதட்டங்கள் ஒப்பந்தத்தை செயல்படுத்துவது குறித்து கவலைகளை எழுப்பின. இதனால், வியாழன் அன்று இஸ்ரேல் போர்நிறுத்தம் மீதான வாக்கெடுப்பை தாமதப்படுத்தியது. மேலும் சலுகைகளைப் பெறும் முயற்சியில் ஒப்பந்தத்தின் சில பகுதிகளை ஹமாஸ் கைவிடுவதாக நெதன்யாகுவின் அலுவலகம் குற்றம் சாட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்க சுரங்க தொழிலாளர்கள் 87 பேரின் சடலங்கள் மீட்பு!

தென்னாபிரிக்காவில் கைவிடப்பட்ட தங்கச் சுரங்கத்தில் சட்டவிரோதமாக வேலை செய்யும் போது சிக்கிக் கொண்ட தொழிலாளர்களில் குறைந்தது 87 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு பொலிஸார் வியாழக்கிழமை (16) தெரிவித்துள்ளனர்.

நீதிமன்ற உத்தரவுப்படி மீட்பு நடவடிக்கையில் 78 உடல்கள் மீட்கப்பட்டன, மேலும் 246 உயிர் பிழைத்தவர்களும் திங்கட்கிழமை மீட்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதில் ஆழமான நிலத்தடியில் இருந்து வெளியேற்றப்பட்டதாக தென்னாபிரிக்க தேசிய காவல்துறை செய்தித் தொடர்பாளர் அத்லெண்டா மாதே தெரிவித்தார். மீட்பு நடவடிக்கைக்கு முன்னர் மேலும் ஒன்பது உடல்கள் மீட்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சுரங்கத் தொழிலாளர்கள் சட்டவிரோத நடவடிக்கையை முன்னெடுத்ததால், அவர்களுக்கு உதவ மாட்டோம் என்று அதிகாரிகள் கூறிய நிலையில், தாங்கள் சொந்த மீட்பு முயற்சிகளை மேற்கொண்டதாக சமூகக் குழுக்கள் தெரிவித்துள்ளன. சுரங்கத் தொழிலாளர்கள் பட்டினி மற்றும் நீரிழப்பு காரணமாக இறந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இருப்பினும் இறப்புக்கான உறுதியான காரணங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.



# புத்தர் வடிவிலான டொனால்ட் ட்ரம்ப் சிலைகள்; 140 முதல் 2,700 டொலர்கள் வரை விற்பனை

சீனக் கைவினைக் கலைஞர் ஹாங் ஜின்ஷியின் புத்தர் வடிவிலான டொனால்ட் ட்ரம்ப் சிலைகள், 140 டொலர்கள் முதல் 2,700 டொலர்கள் வரை இணையத்தள விற்பனை நிறுவனங்களில் விற்பனை யாகி உலகளவில் கவனத்தை ஈர்த்துள் ளன.

அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப்பின் உருவத்தை புத்தர் போல உருவாக்கியுள்ளார் சீனாவைச் சேர்ந்த பீங்கான் உருவ வடிவமைப்பாளரும் சிற்பியுமான ஹாங் ஜின்ஷி. ஜனவரி 20ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்கவுள்ள நிலையில், புத்தர் வடிவிலான ட்ரம்ப் சிலைகள் உலகளவில் கவனத்தை ஈர்த்துள்ளன.

சீனக் கைவினைக் கலைஞர் ஹாங் ஜின்ஷியின் சிலைகள், 140 டொலர்கள் முதல் 2,700 டொலர்கள் வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. கலை மற்றும் அரசியலை இணைக்கும் இந்த பீங்கான் சிலைகள், உலகெங்கிலும் உள்ள சிலை சேகரிப்பாளர்களிடம் அதிக ஆர்வத்தை ஈர்த்துள்ளன. 999 முதல் 20,000 யுவான்களுக்கு (சுமார் 40 ஆயிரம் முதல் 8 இலட்சம் ரூபாய் வரை) அவற்றின் அளவைப் பொறுத்து விலை நிர்ணயம் செய்துள்ளார் ஹாங் ஜின்ஷி. முதன்முதலில் 2021 ஆம் ஆண்டில் இ-கொமஸ் (E-Commerce) தளமான டோபோவில் இது வைரலாக பரவியது.

இந்த சிலைகள் அமேசன் மற்றும் சீன இணையத்தள விற்பனை நிறுவனமான டெமுவில் விற்பனைக்கு உள்ளன.

"தேர்தலில் அவர் வெற்றி பெற்ற பின்னாள்களில் நிறைய ஆர்வம் இருந்தது. முதலில் சிலைகளை நகைச்சுவைக்காக வடிவமைத்தேன். ஆனால், கடந்த சில ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான பீங்கான் சிலைகளை உருவாக்கியுள்ளேன். ட்ரம்பின் செயல் முறையும் புத்தர் சிலையின் வடிவமும் இரண்டு எதிரெதிர் வடிவங்கள் என்பதால் வாடிக்கையாளர்கள் புன்னகையுடன் வாங்கிச் செல்கின்றனர்" என தெரிவித்துள்ளார். இதனையடுத்து டொனால்ட் ட்ரம்ப் சிலை விற்பனை சூடுபிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



ஸ்பேஸ் எக்ஸின் ஸ்டார்ஷிப் (Starship) ரொக்கெட் வியாழன் (16) அன்று அதன் ஏழாவது சோதனைப் பயணத்தின் போது ஒரு வியத்தகு முடிவைச் சந்தித்தது.

நிலவுக்கும் அதற்கு அப்பாலும் எதிர்கால பயணங்களுக்காக சோதிக்கப்பட்ட ரொக்கெட் மெக்சிகோ வளைகுடாவின் நடுப்பகுதியில் வெடித்துச் சிதறி விபத்துக்குள்ளானது. டெக்சாஸ், போகா சிகாவில் அமைந்துள்ள ஸ்பேஸ் எக்ஸின் ஏவுதளத்திலிருந்து ரொக்கெட் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே இந்த சம்பவம் நிகழ்ந்தது.

ஸ்பேஸ்எக்ஸ் மிஷன் கட்டுப்பாட்டின்படி, விண்கலத்துடனான தொடர்பு, எட்டு நிமிடங்களுக்குள் துண்டிக் கப்பட்டது. இதனால் ரொக்கெட்டின் மேல் நிலையில் விரைவான திட்டமிடப்படாத பிரித்தெடுத்தல் ஏற்பட்டதாகவும், அது வெடிப்புக்கு வழிவகுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரொக்கெட் வெடிப்பு தொடர்பில் சமூக ஊடகங்களில் வெளியான காட்சிகள் தீப்பிழம்புகள் மழை போல் பொழிவதை வெளிப்படுத்தியுள்ளன.

இது குறித்து எக்ஸ் சமூக வலைத்த ளத்தில் ஸ்பேஸ்எக்ஸின் தலைமை நிர்வாக அதிகாரி எலோன் மஸ்க், "வெற்றி நிச்சயமற்றது, ஆனால் பொழுதுபோக்குக்கு உத்தரவாதம்!" என பதிவிட்டுள்ளார். இதனிடையே, ஃபெடரல் ஏவியேஷன் அட்மினிஸ்ட்ரேஷன் (FAA) தற்போது செயல்பாட்டை மதிப்பீடு செய்து, புதுப்பிக்கப்பட்ட அறிக்கையை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

400 அடி உயரம் கொண்ட ஸ்டார்ஷிப் ரொக்கெட், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட மிக சக்திவாய்ந்த ரொக்கெட் ஆகும். மேலும் சந்திரனுக்குத் திரும்புவதற்கான நாசாவின் முயற்சிகளில் இது முக்கிய பங்கு வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க விண்வெளி நிறுவனம் 2027 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட ஆர்ட்டெமிஸ் III பயணத்தின் போது விண்வெளி வீரர்களை சந்திர மேற்பரப்பில் கொண்டு செல்ல ஸ்பேஸ் எக்ஸை தேர்ந்தெடுத்துள்ளது.



# வெடித்துச் சிதறிய எலோன் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் ரொக்கெட்

# ஆப்கானிஸ்தான் கிரிக்கெட்டின் எதிர்காலம்?








ஆப்கானிஸ்தானின் கிரிக்கெட் அணிக்கு தடை விதிக்கப்பட வாய்ப்புகள் அதிகம். அப்படி ஒன்று நடந்தால், தேசத்தின் மகிழ்ச்சி மற்றும் எதிர்பார்ப்பின் கடைசி நம்பிக்கையையும் இழக்கக் கூடும். கல்வி, வேலை மற்றும் பிற உரிமைகள் மீதான கட்டுப்பாடுகள் உட்பட பெண்களின் உரிமைகள் தொடர்பான தற்போதைய நிலைமை தொடர்ந்தால், ஆப்கானிஸ்தானின் கிரிக்கெட் நிரந்தரத் தடையை எதிர்கொள்ளும் என்று அஞ்சுகிறேன் என்று ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் நசிம் டேனிஷ் தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி தடை செய்யப்படும் அபாயத்தில் உள்ளதாகவும் எச்சரித்துள்ளார்.

பல ஆண்டுகளாக ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தை வழிநடத்திய அவர், ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை கடுமையான அழுத்தத்தில் இருப்பதாகவும் மற்ற கிரிக்கெட் சபைகள் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டிகளில் விளையாடுவதை படிப்படியாக நிறுத்தக்கூடும்.

பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், அடுத்த பெப்ரவரியில் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ண போட்டிகளில் ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிராக விளையாடுவதை புறக்கணிக்குமாறு இங்கிலாந்து கிரிக்கெட் சபையிடம் வலியுறுத்தி உள்ளனர்.

இதற்கு பதிலளித்த இங்கிலாந்து கிரிக்கெட் சபை (ECB), ஆப்கானிஸ்தானுடன் இருதரப்பு தொடர்களில் விளையாடுவதில்லை என்ற தங்கள் நிலைப்பாடு தொடரட்டும், ஆனால் ஆப்கானிஸ்தான் சம்பந்தப்பட்ட ஐசிசி நிகழ்வுகளில் பங்கேற்போம் என்று கூறியுள்ளது. இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் தலைவர் ரிச்சர்ட் கோல்ட், “தனிப்பட்ட உறுப்பினர்களின் ஒருதலைப்பட்சமான செயல்களைக் காட்டிலும் ஐசிசி மட்டத்திலான அணுகுமுறை குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்றார். பெண்களின் உரிமைகளில் தாலிபான் கடுமையான போக்கை கையாளக் கூடாது. இல்லையெனில் பாதிப்பு ஆப்கானிஸ்தானின் கிரிக்கெட்டை மட்டுமல்லாது மற்ற துறைகளையும் பாதிக்கும் என்று நசிம் டேனிஷ் வலியுறுத்துகிறார். ஆப்கானிஸ்தானுக்கு தடை விதிக்கப்பட்டால், ஐசிசி நிதியளிப்பது நின்றுவிடும். அனுசரணைகளை இழக்கக்கூடும். உள்நாட்டு கிரிக்கெட் மறைந்துவிடும். யாரும் விளையாட மாட்டார்கள். ஆப்கானிஸ்தானின் கிரிக்கெட் முற்றிலும் அழிந்துவிடும் என்றார். அண்மையில், வடக்கு அயர்லாந்தின் முன்னாள் அமைச்சர் பரோனஸ் ஃபோஸ்டர், இங்கிலாந்து அணி ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான போட்டிகளில் விளையாட மறுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

கடந்த ஒரு வாரமாக, பிரிட்டனின் பெண்ணுரிமை ஆர்வலர்கள் மற்றும் பியர்ஸ் மோர்கன் போன்ற முக்கிய பத்திரிகையாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் இங்கிலாந்து கிரிக்கெட் அணி ஆப்கானிஸ்தானுக்கு எதிராக விளையாடக்கூடாது என்னும் கருத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

அவர்கள் முன்வைக்கும் காரணங்கள் தெளிவாக உள்ளன. தலிபான் அரசாங்கத்தின் கீழ், ஆப்கானிஸ்தானில் பெண்களின் உரிமைகள் “நசுக்கப்பட்டுள்ளன” என அவர்கள் கருதுகின்றனர். பெண்களின் கல்வி மீதான கட்டுப்பாடுகள் மற்றும் பெண்கள் விளையாடுவதற்கான தடை என அவர்கள் முன்வைக்கும் காரணங்கள் தெளிவாக உள்ளன. சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் ஆப்கானிஸ்தானின் கிரிக்கெட் அணியை தடை செய்வது அல்லது இடைநிறுத்துவது தொடர்பான விவாதத்தை பெரிதுபடுத்தாமல் வேண்டுமென்றே செயல்படுவது தெரிகிறது. ஒரு நாட்டை முழு உறுப்பினராக அல்லது டெஸ்ட் விளையாடும் நாடாக அங்கீகரிப்பதற்கான ஐசிசியின் நிபந்தனைகளில் ஒன்று, அந்த நாட்டில் பெண்கள் அணி இருக்க வேண்டும். ஆனால் ஆப்கானிஸ்தானில் தற்போது பெண்கள் கிரிக்கெட் அணி இல்லை. ஐசிசி இதை ஒரு முக்கியமான விஷயமாகக் கருதாமல், இந்த நிபந்தனையின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட முயற்சிக்கிறது.



ஆனால் அவுஸ்திரேலியாவின் உறுதியான நிலைப்பாடு மற்றும் இங்கிலாந்து கிரிக்கெட் சபை மற்றும் பிரிட்டன் நாடாளுமன்றத்தின் சமீபத்திய கருத்துகள் இந்த விடயத்தில் ஐசிசி அமைப்பிற்குள் மேலும் விவாதங்களைத் தூண்டலாம். ஐசிசியைப் பொறுத்தவரை, உலகளவில் கிரிக்கெட் விளையாட்டை வளர்த்து விரிவுபடுத்துவதே முதன்மையான நோக்கமாக இருக்கும். ஆப்கானிஸ்தானின் கிரிக்கெட் அணி, கடந்த 20 ஆண்டுகளில் மிகப்பெரிய வெற்றியையும், முன்னேற்றத்தையும் கண்டுள்ளது. சில ஆசிய நாடுகள் ஆப்கானிஸ்தானை ஆதரிக்க முனைகின்றன.

ஆனால் தற்போதைய முக்கியமான பிரச்சினைகளால் அவுஸ்திரேலியா, பிரிட்டன் மற்றும் பிற நாடுகளின் சபைகள் ஏற்கனவே தெளிவான நிலைப்பாட்டை எடுத்துள்ளன. சமீபத்தில், இந்தியரான ஜெய் ஷா ஐசிசி தலைமை பொறுப்புக்கு வந்துள்ளார். அவர் ஐசிசி அமைப்புக்குள் ஆப்கானிஸ்தானின் நிலையை பலப்படுத்துவார் என்று பலர் நம்புகிறார்கள். இந்த விவாதங்கள் குறித்து ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வாரியம் இதுவரை கருத்து தெரிவிக்கவில்லை. ஆனால் அரசியலையும் விளையாட்டையும் தனித்தனியாக பார்க்க வேண்டும் என்னும் கருத்தை பலமுறை வலியுறுத்தியுள்ளது. அழுத்தம் கொடுப்பதற்கு பதிலாக இதுபோன்ற பிரச்சினைகளில் விவாதங்கள் மற்றும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு நாடுகளை வலியுறுத்துகிறது. தென்னாபிரிக்காவின் கிரிக்கெட் அணி 1970 ஆம் ஆண்டில் இனவெறி (Apartheid) காரணமாக சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து கிட்டத்தட்ட 22 ஆண்டுகள் தடை செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தானின் கிரிக்கெட் அணியை மட்டுமே தலிபானால் எதுவுமே செய்ய முடியவில்லை. அணியை மாற்றவோ அல்லது அதன் மீது செல்வாக்கு செலுத்தவோ முடியவில்லை ஆப்கானிஸ்தான் அணியின் சின்னம், மூவர்ணக் கொடி மற்றும் முந்தைய அரசாங்கத்தின் தேசிய கீதம் என எதுவும் மாற்றப்படவில்லை. இன்னமும் சர்வதேச மைதானங்களில் ஆப்கானிஸ்தான் அணியால் அவை பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றன.

தலிபான் அரசாங்கத்தின் கொடியை பிரதிநிதித்துவப்படுத்த முடியாது என ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி தெரிவித்துள்ளது. ரஷீத் கான் மற்றும் முகமது நபி உட்பட பல கிரிக்கெட் வீரர்கள், ஆப்கானிஸ்தானில் பெண்களின் கல்வி மற்றும் அடிப்படை உரிமைகள் பற்றி பலமுறை பேசியுள்ளனர். அவை குறித்த முடிவுகளை மறுபரிசீலனை செய்யுமாறு தாலிபான் அரசாங்கத்தை அவர்கள் வலியுறுத்துகின்றனர். ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டிகளை அவுஸ்திரேலியா இரத்து செய்ததை தொடர்ந்து, சில வீரர்கள் ஹபிக் பாஷ் லீக் போன்ற அவுஸ்திரேலியாவின் வணிக போட்டிகளை விட்டு வெளியேறினர். ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி தொடர்பான சர்ச்சைக்குரிய விவாதங்கள், அணி வீரர்களுக்கு பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தும் என்கிறார் நசிம் டேனிஷ்.

அணியை சுற்றியிருக்கும் அழுத்தங்களை பற்றி வீரர்கள் பெரிதுப்படுத்தவில்லை என்ற போதிலும், ஆப்கானிஸ்தானின் தேசிய அணிக்காக விளையாடி உயர்மட்ட கிரிக்கெட்டில் சாதிக்க விரும்பும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு கிரிக்கெட் வீரர்களை இது பாதிக்கும்.

வர்த்தக ரீதியான லீக்குகளில் விளையாடும் பல ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் நன்றாக சம்பாதிக்கிறார்கள். ஆனால் தேசிய அணிக்காக மட்டுமே விளையாடுபவர்கள் அல்லது உள்நாட்டு கிரிக்கெட்டில் கவனம் செலுத்துபவர்கள் அழுத்தங்கள் மட்டுமன்றி, ஒருவேளை தடையை எதிர்கொள்ள நேரிட்டாலும் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

ஆப்கானிஸ்தானின் அணி சர்வதேச போட்டிகளில் விளையாட தடை செய்யப்பட்டால், பல உள்நாட்டு வீரர்கள் கிரிக்கெட் விளையாடுவதை கைவிடுவார்கள். இளம் வீரர்கள் விளையாட்டில் ஈடுபட மாட்டார்கள். குடும்பங்கள் இனி தங்கள் குழந்தைகளை கிரிக்கெட் அகடமிகளுக்கு அனுப்ப மாட்டார்கள் என்று டேனிஷ் கூறுகிறார். ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் தடை செய்யப்பட்டால், தலிபான்கள் தான் அதிகம் பயனடைவார்கள். ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை நடவடிக்கைகளில் தலிபான் நேரடியாக தலையிடவில்லை என்றாலும், அவர்களுக்கு கிரிக்கெட் மீது குறிப்பாக கந்தஹாரில் உள்ள அவர்களின் தலைவருக்கு அதிக ஆர்வம் இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

தலிபான் அரசு பெண்கள் கிரிக்கெட் விளையாடுவது பற்றி குறிப்பிட்டு கருத்து தெரிவிக்கவில்லை என்றாலும், ஆப்கானிஸ்தானில் பெண்கள் விளையாடுவதற்கு முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. பெண்களின் உரிமைகள் மீதான அவர்களின் பொதுவான நிலைப்பாடு மாறாமல் உள்ளது.

# கிரான் பொல்லார்ர்டின் 901 சிக்ஸர்கள்



மேற்கிந்திய தீவுகள் வீரர் கிரான் பொல்லார்ட் மாபெரும் உலக சாதனை ஒன்றை படைத்துள்ளார். கிறிஸ் கெயில் மட்டுமே பெற்றுள்ள 900 சிக்ஸர்கள் என்ற சாதனையை கடந்து 901 சிக்ஸர்கள் எடுத்து மாபெரும் மைல்கல் சாதனையை இரண்டாவது வீரராக நிகழ்த்தி வியக்க வைத்துள்ளார்.

2025 இன்டர்நேஷனல் லீக் ரி20 (ILT20) கிரிக்கெட் தொடர் துபாயில் நடைபெற்று வருகிறது. அந்த தொடரில் மும்பை இந்தியன்ஸ் எமிரேட்ஸ் அணிக்கும், டெசர்ட் வைப்பர்ஸ் அணிக்கும் இடையேயான போட்டி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் மும்பை இந்தியன்ஸ் எமிரேட்ஸ் அணிக்காக ஆடிய கீரான் பொல்லார்ட் 23 பந்துகளில் 36 ஓட்டங்கள் சேர்த்தார்.

அப்போது கிரான் பொல்லார்ட் இரண்டு நான்கு ஓட்டங்கள் மற்றும் மூன்று சிக்ஸ் அடித்து இருந்தார். அந்த மூன்று சிக்ஸர்களின் மூலம் அவர் ஒட்டுமொத்தமாக 901 சிக்ஸர்கள் என்ற எண்ணிக்கையை எட்டினார். இதற்கு முன் 900 சிக்ஸர்கள் என்ற எண்ணிக்கையை தொட்ட ஒரே வீரர் கிறிஸ் கெயில் மட்டுமே. அந்த சாதனையை கிரான் பொலார்ட் இரண்டாவது வீரராக எடுத்து வியப்பை ஏற்படுத்தியுள்ளார்.கிறிஸ் கெயில் 455 இன்னிங்ஸ்களில் 1056 சிக்ஸர்களை அடித்து இருந்தார். தற்போது கிரான் பொல்லார்ட் 614 இன்னிங்ஸ்களில் 901 சிக்ஸர்களை அடித்துள்ளார்.

இந்த பட்டியலில் மூன்றாவது இடத்தில் ஆண்ட்ரே ரசல் (456 இன்னிங்ஸ், 727 சிக்ஸர்கள்), நான்காவது இடத்தில் நிக்கோலஸ் பூரன் (350 இன்னிங்ஸ், 592 சிக்ஸர்கள்), ஐந்தாவது இடத்தில் கோலின் மன்றோ (415 இன்னிங்ஸ், 550 சிக்ஸர்கள்) உள்ளனர்.

கிரான் பொல்லார்ட் தான் உலகிலேயே அதிக ரி20 போட்டிகளில் விளையாடிய வீரர் ஆவார். அவர் இதுவரை 690 ரி20 போட்டிகளில் விளையாடி இருக்கிறார். அதில் 13,429 ஓட்டங்களை குவித்து இருக்கிறார். அவரது சராசரி விகிதம் 150.38 ஆகும். ஒரு சதம் மற்றும் 60 அரை சதங்களையும் அடித்துள்ளார்.

அவர் 690 ரி20 போட்டிகளில் 836 நான்கு ஓட்டங்கள், 901 சிக்ஸர்களையும் அடித்துள்ளார்.

381 பிடிகளை எடுத்துள்ளார். அதே போல பந்து வீச்சிலும் அவர் பகுதி நேர பந்து வீச்சாளராக சிறப்பாக செயல்பட்டுள்ளார். இதுவரை 404 ரி20 இன்னிங்ஸ்களில் பந்து வீசி 326 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார்.

# லொஸ் ஏஞ்சல்ஸ் நிவாரண பணிக்காக அமெரிக்க டென்னிஸ் வீரர் உதவி



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம், லொஸ் ஏஞ்சல்ஸ் நகரைச் சுற்றிலும் காட்டுத் தீ கட்டுக்கடங்காமல் பரவி பல மில்லியன் கணக்கான பொருட்கள் மற்றும் உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தியது.

இந்நிலையில் காட்டுத்தீக்கு இரையான லொஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தின் நிவாரண பணிகளுக்காக அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்றில் வென்ற ரூ.71 இலட்சம் பணத்தை வழங்கவுள்ளதாக அமெரிக்க டென்னிஸ் வீரர் டெய்லர் ப்ரிட்ஸ் தெரிவித்துள்ளார். என்னை வளர்த்த ஊருக்கு என்னால் இயன்றதை செய்வதாகவும், மக்களுக்கு உதவ பலர் முன் வரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

ஞாயிறு இதழ்
19.01.2025 - ஞாயிற்றுக்கிழமை
ஒருவன்
ORUVAN - ඔරුවන්
ஆண்டு: 01 இதழ் : 15 குரோதி வருடம் தை மாதம் 06 ஆம் நாள் - ஹிஜ்ரி 1446 ரஜப் 19

## ஜனாதிபதி அநுரவின் சீன விஜயம்:

# இலங்கை – சீனா உறவு வலுவடையும் சாத்தியம்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நான்கு நாள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு சீனா சென்றிருந்தமை நாம் அறிந்ததே. அதற்கு முன்னதாக அவர் இந்தியாவுக்கான உத்தியோகப்பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவை வலுவடையச் செய்ய நடவடிக்கை

எடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் சீனாவுக்கும் இலங்கை முக்கியத்துவம் வாய்ந்தாக இருக்கின்ற நிலையில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை அவசரமாக சீனாவுக்கு அழைப்பதற்கான ஏற்பாடுகளை சீனா செய்தது.

சீனா முழுமையான கொம்யூனிஸ கொள்கையை பின்பற்றும் நாடாகும். சீனாவின் கொம்யூனிஸ சிந்தனையால் கவரப்பட்டதன் காரணமாகவே ஜே.வி.பி. யின் ஸ்தாபகரான ரோஹன விஜேவீர 1970 ஆம் ஆண்டு கால கட்டத்தில் சோவியத் ரஷ்யாவில் மருத்துவ கல்வி கற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் இவ்வாறானதொரு சோசலிச சிந்தனையை பின்பற்றும் ஒரு அரசியல் கட்சியை உருவாக்கினார். ஆனாலும், அவரால் இந்த நாட்டில் ஆட்சியை பிடிக்க முடியாமல் போன நிலையில் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாச ஆட்சியில் அரசுக்கு எதிராக 1989 மற்றும் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட கிளர்ச்சி காரணமாக அவர் கொல்லப்பட்டார். அதற்கு முன்னதாக 1976 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்ததால் அப்போதைய பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவினால் விஜேவீர சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். பின்னர் 1977 இல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்தன அவரை விடுதலை செய்திருந்தார். இருப்பினும் 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜுலை இனக்கலவரத்திற்கு ஜே.வி.பி.யே காரணம் என குற்றம் சுமத்தப்பட்டு அக்கட்சி ஜே.ஆர்.ஜெயவர்தனவினால் தடைசெய்யப்பட்டது. இதன் காரணமாக ஜே.வி.பி.ஆயுத போராட்டத்திற்கு சென்றிருந்த நிலையில் 88 ஆம் ஆண்டில் அக்கட்சி மீதான தடை நீக்கப்பட்டதையடுத்து அவர்கள் மீண்டும் அரசியல் செயற்பாடுகளில் இறங்கினர்.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட அதே ஜே.வி.பி. யின் மறுவடிவமாக ஆட்சி பீடம் ஏறி இருக்கின்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இப்போது சோசலிச நாடுகளுடனான உறவை புதுப்பித்து நட்பை பலப்படுத்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார். அந்த வகையில் எந்தவிதமான ஆபத்தான நிலையிலும் மிகுந்த அக்கறையோடு நேசக்கரம் நீட்டி வரும் அயல் நாடான இந்தியாவுடனும் பலமான உறவு பேணப்படுகின்றது.

ஏற்கனவே இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்த 2022 ஆம் ஆண்டு காலகட்டத்தில் சுமார் 420 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேல் பலவிதமான கடன் வசதிகளை கொடுத்து இலங்கையை மீட்டெடுத்த நாடுகள் வரிசையில் இந்தியா முக்கியமான இடத்தை பெறுகின்றது.







> **இலங்கை ஒரு போதும் சீனாவை புறக்கணித்து ஆட்சி வியூகங்களை வகுக்கும் என எதிர்பார்க்க முடியாத அளவிற்கு இலங்கை - சீன இராஜதந்திர உறவு சுமார் 72 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட வரலாற்றைக் கொண்டதாகும் ..**

இருந்தபோதிலும் அவ்வாறான ஒரு சூழ்நிலையிலும் இலங்கையானது ஒரு போதும் சீனாவை புறக்கணித்து ஆட்சி வியூகங்களை வகுக்கும் என எதிர்பார்க்கவும் முடியாது. அந்தளவிற்கு இலங்கை – சீன இராஜதந்திர உறவு சுமார் 72 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட வரலாற்றைக் கொண்டதாகும்.

1952 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சீனாவுக்கு ஐரோப்பிய நாடுகள் பொருளாதார தடைகளை விதித்திருந்த சந்தர்ப்பத்தில் சீனாவுக்கு இறப்பர் மற்றும் அரிசி ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதன் பின்னர் 1957 ஆம் ஆண்டு உத்தியோகபூர்வமான இராஜதந்திர உறவு ஸ்தாபிக்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்நாட்டின் பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் காலப்பகுதி முதல் இந்த உறவு மேலும் பலமடைந்தது. குறிப்பாக இலங்கையை ஆட்சி செய்யும் அனைத்து இடதுசாரி கட்சிகளதும் நேச நாடு என்ற பெருமை அன்றுதொட்டு சீனாவுக்கு இருந்து வருகின்றது.

அதன் காரணமாகவே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலும் அதன் பின்னர் 2019 ஆம் ஆண்டு கோதாபய ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் கூட சீனாவை அரவணைத்ததாகவே பொருளாதார மற்றும் வெளிவிவகார கொள்கைகளை அமைத்து சீனாவுடன் மிகவும் இறுக்கமான உறவை பேணி வந்தனர் என்று கூறலாம். ஏன் அந்தளவிற்கு சீனா முக்கியத்துவம் பெறுகின்றது என்ற வினா எழலாம். சீனாவுக்கு இலங்கை முக்கியமா அல்லது இலங்கைக்கு சீனா முக்கியமா என்பது அடுத்து எழுகின்ற வினாவாகும். ஒருவகையில் பார்த்தால் பொருளாதார வளமும் பலமும் கொண்ட நாடு என்ற வகையில் இலங்கைக்கு சீனா முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. அதே போன்று மறுபுறமாக சீனா பிராந்தியத்தில் வல்லரசாக இருந்து வருவதால் அதன் பிராந்திய இராணுவ விரிவாக்கம், பாதுகாப்பு, சந்தைப்படுத்தல் போன்ற இலக்குகளை அடைய இலங்கை அந்நாட்டிற்கு முக்கியத்துவம் வாய்ந்தாக அமைகின்றது.

ஏற்கனவே இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் அம்பந்தோட்டை துறைமுகம், கொழும்பு துறைமுக நகரம் என்ற அடிப்படையில் பாரிய பொருளாதார வளம் கொண்ட கேந்திர நிலையங்களை சீனாவிடம் 99 வருட குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் கையளித்து இலங்கை பொருளாதார நலன்களை அடைந்திருக்கின்றது.

மேலும், இலங்கையை கடுமையான பொருளாதார நெருக்கடி நிலைமைகளில் இருந்து மீட்பதற்காக சீனா இலங்கைக்கு கொடுத்திருக்கும் கடன்களின் அளவு 150,000 கோடி ரூபாய்களுக்கும் (420 கோடி அமெரிக்க டொலர்) அதிகமானதாகும். இந்தளவு கடனை கொடுத்துள்ள சீனாவுக்கு இலங்கை வருடாந்தம் மேலும் பல பில்லியன் ரூபாய்களை வட்டியாக செலுத்தி வருகின்றது. 2022 ஆம் ஆண்டு இலங்கை பொருளாதார ரீதியாக படுபாதாளத்தில் விழுந்த போது சீனா இலங்கைக்கு கைகொடுத்தது. அந்த நாடு கடன் மீளமைப்புக்கு உடன்பட்டு அது தொடர்பான உடன்படிக்கையில் கையொப்பம் இட இணங்கிய பின்னரே சர்வதேச நாணய நிதியம் 300 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கும் மேற்பட்ட தொகைகளை இலங்கைக்கு கடனாக கொடுக்க இணக்கம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அதன் காரணமாகவே இலங்கை 2022 ஆம் ஆண்டில் இருந்து 2024 செப்டெம்பர் வரையான அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் இரண்டு வருட கால ஆட்சியில் ஓரளவிற்கு பொருளாதார மீட்சி கண்டது எனலாம் .

இந்நிலையில் தற்போது 04 நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சீன விஜயம் பல மட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கின்றது. குறிப்பாக, புதிய வர்த்தக வாணிப உடன்படிக்கைகள், முதலீட்டு வாய்ப்புக்கள், ஏற்கனவே பெறப்பட்ட கடனை திருப்பி வழங்குவதில் மேலும் சலுகைகள் என்று பல உதவிகளை இலங்கை சீனாவிடம் இருந்து எதிர்பார்த்த நிலையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகி இருக்கின்றது. சீன ஊடகங்கள் இந்த விஜயம் பற்றி விபரிக்கையில், மலர்ந்துள்ள புது யுகத்தில் இலங்கை – சீன உறவு மேலும் வலுவடைந்து இலங்கைக்கு பாரிய அபிவிருத்தி உதவிகள் கிடைக்க ஜனாதிபதி அநுரகுமாரவின் இந்த விஜயம் கைகொடுக்கும் என தெரிவித்துள்ளன.

அத்துடன், தற்போது பதவியில் இருப்பது தூய கொம்யூனிசம் சார்ந்த ஆட்சியாக இருப்பதால் முன்னைய காலப்பகுதிகளை விட சீனாவின் நேசக்கரம் இலங்கைக்கு பல வழிகளில் அதிகமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடிகின்றது.

அது மட்டுமல்லாமல் பிராந்தியத்தில் வர்த்தக ஏகாதிபத்திய விரிவாக்கலில் ஈடுபட்டுள்ள நாடுகள் வரிசையில் சீனாவின் பங்களிப்பு இந்தியாவை விட கூடுதலாக இருப்பதால் அந்நாடு இலங்கைக்கு மேலும் கூடுதலான உதவிகளை வழங்கும் என எதிர்பார்க்கலாம்.

அந்தவகை இந்நிலையில், இந்தியாவை விட சீனா இலங்கை மீது அதன் பிடியை மேலும் உறுதியாக்கும் முயற்சிகளில் இறங்கும் என குறிப்பிட முடியும். அதன் மூலம் இலங்கையை சீனா அதன் சந்தைப்படுத்தல்களுக்கு ஏற்ற வகையில் மாற்றியமைப்பதற்கான வியூகங்களை வகுத்து வருவதனையும் காணமுடிகின்றது. இதன் மற்றுமொரு நகர்வாகவே ஜனாதிபதி அநுரவிற்கு சீனா வழங்கிய அன்பளிப்புக்களின் அடையாளங்களாக பொருளாதார நலன் சார்ந்த உடன்படிக்கைகள், மேலும் புதிய முதலீட்டு வாய்ப்புக்களுக்கான தவுகளை திறத்தல், வரிச் சலுகைகள் என பல புதிய முன்னேற்றங்கள் இலங்கைக்கு கிடைக்கவுள்ளன எனலாம்.

> **இலங்கை - சீன உறவு மேலும் வலுவடைந்து இலங்கைக்கு பாரிய அபிவிருத்தி உதவிகள் கிடைக்க ஜனாதிபதி அநுரகுமாரவின் சீன விஜயம் கைகொடுக்கும் என அந்நாட்டின் ஊடகங்கள் தெரிவித்துள்ளன**

## ரிஷா பேசுகிறேன்

மற்றைய கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகளின் கணக்குகளையெல்லாம் கேட்பார்கள், வருமானம் எங்கிருந்து வருகின்றது எனவும் கேட்பார்கள்.. ஆனால், தமது கட்சியின் கணக்கு வழக்குகளை பற்றி மாத்திரம் மூச்சு விடவே மாட்டார்கள்.. யார் அவர்கள்..? சிந்தித்தால் புரிந்து கொள்வீர்கள்..

நெடிதுயர்ந்த கோபுரம் உண்டு, கடலினிலே புது நகரம் உண்டு.. புது முகங்கள் குடியானதிங்கு , பாம்பென்ன தவளையென்ன எல்லாமும் நம் உணவாகும் இனி இங்கு..

பரீட்சைத் தாளும் "லீக்"ஆச்சு, படிப்பும் கூட வீணாச்சு.. எழுதாத கேள்விக்கெல்லாம் இலவச புள்ளி வழங்கியாச்சு.. வினாத்தாள் தயாரிப்போரும் வீக் ஆச்சு, அவர்களின் தகுதி தான் என்ன ஆச்சு? இதுவே மனதில் தோன்றும் கேள்வியாச்சு..!



"க்ளீன் ஸ்ரீலங்கா" எனக் கூறி ஊரெல்லாம் சுத்தம் செய்வார். ஊழல் மற்றும் மோசடி பேர்வழிகளை சுத்தம் செய்வதற்கோ எவரும் இல்லை.. மொத்தத்தில் மக்கள் தான் "க்ளீன் போல்ட்"

பட்டங்கள் கூறி வெற்றிகளும் அடைந்தனரே,, நாடாளுமன்றமும் சென்றனரே.. மக்களும் பெருமை தான் அடைந்தனரே.. ஆனால், இப்போதோ பட்டங்கள் நூலறுந்த பட்டங்களாய் பறக்கின்றனவே...

மின் கட்டணம், நீர் கட்டணம் மாதாந்தம் நெருப்பை கக்கும்.. "பேர்ஸை" தொட்டுப் பார்க்கும் போது நெஞ்சு கணக்கும்.. மாதம் வரும் சம்பளம் கூட நிலைப்பதில்லை, வாரம் ரெண்டு கடந்த பின்னே மனதோ மகிழ்ச்சி கொள்வதில்லை.. மாதக் கடைசி ஆகும்போது மக்கள் கூட ஜஎம்எஃப் தேடும் கடனாளிகள் தானே...?

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் நல்லவரோ வல்லவரோ யார் அறிவார்? ஆனாலும், அதிகாரிகளோ இன்னும் சுரண்டுவதை சுரண்டுகின்றார், பழைய ஆட்டத்தையே ஆடுகின்றார்..

இந்திய பயணம் சென்றிருந்தார், செங்கம்பள வரவேற்பும் பெற்றிருந்தார்., நட்பின் நெருக்கமாய் அறிக்கை விட்டார் .. இனி அடுத்து, சிகப்பு நாட்டிற்கும் சென்றுவிட்டார், அதுகுறித்தும் அறிக்கை வெளியிடுவார்.. அப்போதே தெரியவரும் அயலான் அந்நியனாய் ஆகிவிட்டதை...

அரிசியும் உண்டு, தேங்காயும் உண்டு .. இப்படித் தான் நாளாந்த செய்திகளுண்டு.. கடையடிக்கு சென்றாலோ இவை எதுவும் இல்லையங்கு... வயிறெல்லாம் வெறுமையிங்கு, அரிசி கூட அரசியல் இங்கு..



# சஜித்துக்கு எச்சரிக்கை விடுத்த ஹிருணிகா



ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னணி பெண் தலைவர்களில் ஒருவரான ஹிருணிகா பிரேமச்சந்திர, சஜித் பிரேமதாசவுக்கு பகிரங்க எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளார். சஜித் பிரேமதாசவின் பலவீனங்கள் விரைவில் சரிசெய்யப்படாவிட்டால், அந்த பிரிவினரில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைவார்கள் என ஹிருணிகா பிரேமச்சந்திர எச்சரிக்கை விடுத்துள்ளதாக தெரியவருகின்றது. எனினும், தான் ஐக்கிய தேசியக் கட்சியில் சேரப் போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாக்குறுதிகளை மறந்த தேசிய மக்கள் சக்தி?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த முதல் சில நாட்களில் காலி முகத்திடலில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களால் நியமிக்கப்பட்ட நிறுவனத் தலைவர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றன. வாகனங்கள் ஏலம் விடப்பட்டு விற்கப்படும் என்று கூறப்பட்டாலும், அத்தகைய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் கூறப்படுகிறது.




நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளம், ஓய்வூதியம் அல்லது உத்தியோகபூர்வ இல்லங்கள் வேண்டாம் என்று கூறிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்போது அனைத்தையும் பெற்று வருவதாகவும் தேசிய மக்கள் சக்தி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மேலும், மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை இன்று அரசாங்கம் மறந்துவிட்டதாகவும், அவற்றை அரசாங்கம் பொருட்படுத்தவில்லை எனவும் எதிர்க்கட்சிகள் தெரிவிக்கின்றன.

## அரசியல் அந்தப்புரம்

நாமலுக்கு எதிராக

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் வாக்குமூலம்?



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரபல வர்த்தகருமான ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் வாக்குமூலம் ஒன்றை வழங்கவுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பிலேயே இவ்வாறு சாட்சிகள் வாக்குமூலம் வழங்கப்படவுள்ளதாக கூறப்படுகின்றது. எதிர்வரும் வாரத்தில் குறித்த வர்த்தகர் சாட்சியங்களை அளித்தவுடன் தொடர்புடைய சட்ட நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படும் எனவும் தெரியவருகின்றது.

# சொந்த பயன்பாட்டிற்கு அமைச்சு அறையைக் கோரிய நாடாளுமன்ற குழு தலைவர்



ஒரு முக்கிய நாடாளுமன்றக் குழுவின் தலைவர் ஒருவர் தனது சொந்த பயன்பாட்டிற்காக அமைச்சர்களுக்காக ஒதுக்கப்பட்ட அறையொன்றைப் பெற்றதையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களிடையே பெரும் அமைதியின்மை ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அமைச்சர்களுக்கான அறைகள் கடந்த காலத்திலிருந்தே அமைச்சர்களுக்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டே வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நாடாளுமன்ற சிறப்புக் குழுவிற்கு கொழும்பில் வேறு இடத்தில் ஒரு அலுவலகம் உள்ளது. எனினும், நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள உணவு மற்றும் பான வசதிகள் காரணமாக சிலர் அந்த இடத்திற்குச் செல்ல தயங்குகிறார்கள் எனவும் கூறப்படுகிறது.

இதன் காரணமாக குறித்த அலுவலகம் சிறிது காலமாக மூடப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# அரசாங்கத்திற்கு எதிரான போலி பிரசாரங்கள் அதிகரிக்கும் வாய்ப்பு

இவ்வாண்டில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு எதிராக நிறைய உண்மைக்கு புறம்பான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படும் வாய்ப்பு இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.



முற்றிலும் அவதூறான மற்றும் பொய் பிரசாரங்கள், அதே போல் திரிபுபடுத்தப்பட்ட பிரசாரங்களும் இதில் உள்ளடங்கலாம் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போதும் கூட, ரணில் விக்கிரமசிங்க மற்றும் ராஜபக்ஷ தரப்பைச் சேர்ந்த ஒரு குழுவினரின் தலைமையில் இதுபோன்ற பல பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

குறிப்பாக, சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பிரசாரத்திற்கு மேலதிகமாக, மின்னணு மற்றும் அச்சு ஊடகங்களும் இத்தகைய அவதூறுக்கு பங்களிக்கும் செய்திகளை உருவாக்கக்கூடும் எனவும் ஆய்வாளர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# கவிதை உலா

## சிதைக்கும் நினைவுகள்



மீண்டும் பிறக்கும் நினைவுகள்
மனதிலே ஏற்படும் மாற்றங்கள்
அச்சமடையும் நான்..!

உணர்கிறேன் அது மனதிலே
வலிகளையோ
மகிழ்ச்சியையோ சுமக்கின்றது
நொடிப்பொழுதில் உள்ளத்தில்
வெடிக்கும் எரிமலைகள்
தலையை அதிர வைத்து
உணர்வுகளை சிதைகின்றது

மீண்டும் பிறக்கும் நினைவுகள்
மனதிலே ஏற்படும் மாற்றங்கள்
அச்சமடையும் நான்

மகிழ்வுறும் தருணங்களை
நீடிக்க ஆசைப்படும் உள்ளம்
வலிகளை உணர்த்தும் சோகங்களை
புகைக்கின்றது
தனிமை தரும் அச்சம்!
நீங்கள் உணரும் சமயம்
என் நினைவுகள்
உங்களையும் வதைத்தால்
நான் இல்லாத நொடிகளில்
நீங்கள் என்ன செய்யலாம்?

மீண்டும் பிறக்கும் நினைவுகள்
மனதிலே ஏற்படும் மாற்றங்கள்
அச்சமடையும் நான்..!

**ஏ.எம்.அப்பாஸ்,**
**வாழைச்சேனை**



## நசுக்கிடுவோம்

இலங்கைத் தாயை வணங்கிடுவோம்
இனிய தமிழை வளர்த்திடுவோம்
என்றும் உண்மை உரைத்திடுவோம்
எளிமை வாழ்வு வாழ்ந்திடுவோம்
நேசக்கரங்களை நீட்டிடுவோம்
நேர்மையாக வாழ்ந்திடுவோம்
சாதி, மதங்களை மறந்திடுவோம்
சமமாக எல்லோரையும் எண்ணிடுவோம்
நாட்டை உயர்த்த முனைந்திடுவோம்
நாச சக்திகளை நசுக்கிடுவோம்..!

**ஸாதிக் பாரிஸ், மல்வானை**

## கல்வி வேண்டும்!

உலகம் உயரக் கல்வி வேண்டும்
உள்ளம் உயரக் கல்வி வேண்டும்
நாடுவளர கல்வி வேண்டும்
நம்பிக்கை வளர கல்வி வேண்டும்
மனம் வளர கல்வி வேண்டும்
மகிழ்ச்சி பெற கல்வி வேண்டும்
அறியாமை அகழ கல்வி வேண்டும்
சாதனை படைக்க கல்வி வேண்டும்
கண்ணியம் ஓங்க கல்வி வேண்டும்
கவலைகளட நீங்க கல்வி வேண்டும்..!

**இனாம், மல்வானை**



## தமிழறி தமிழா

என் இனிய தமிழா
தமிழ்த்தாய்
இருக்கையில்
அந்நிய பெண்ணிடமே
ஏன் அடைக்கலம் கொள்கிறாய்..?




கேட்டால் நடைமுறையில்
தமிழ் சாத்தியமில்லை என்று
நெருஞ்சி முள்
போன்றவற்றுக்குள்
உன் தன்மானத்தையும்
மூடி மறைக்கிறாய்..!

லகரங்களின்
அருமையறிந்த நீ
ழகரத்தின் சுவையறிய
மறக்கிறாய்..!

வல்லினம் உனக்கு
நுனிப்புல்லா..?
தமிழா முதலில் தமிழறி
அதுவே நம் வாழ்வின் நெறி..!

**கலாபூஷணம் கல்லொளுவை பாரிஸ்**

# சிப்பிக்குள் முத்து



சிப்பிக்குள் விழும் மழைத் துளிகள் தான், முத்து ஆகின்றது என்பது அநேகரின் நம்பிக்கை. ஆனால் இது தவறாகும். முத்துச் சிப்பிகள் கடலின் அடி ஆழத்தில் வாழக்கூடியவை. முத்துக் குளிக்கின்றவர்கள் கூட, கடலின் அடிக்குச் சென்றுதான் முத்து எடுப்பர். இதனை முத்துக் குளித்தல் என்று அழைப்பர். எனவே, முத்துச் சிப்பிக்குள் மழை நீர் விழ வாய்ப்பே இல்லை. மழைநீர்த் துளிகள் கடலின் மேற்பரப்பில் விழக்கூடியது. வீழ்ந்தவுடனே கடல்நீரில் கலந்துவிடும். அடியாழத்தில் உள்ள சிப்பிக்குள் மழைநீர் செல்லாது. எனவே, மழைநீர் முத்தாகிறது என்ற கருத்து தவறானது.

கடலின் அடியில் வாழும் முத்துச் சிப்பியினுள் செல்லும் சிறு மணல், சிப்பியின் உடலில் சிறு உறுத்தலை ஏற்படுத்தும். அந்த உறுத்தலின் விளைவாய் சிப்பியுள் சுரக்கும் சுரப்பு நீர் அந்த மணலின்மீது படியும். தொடர்ந்து சுரக்கும் சுரப்பு நீர் அடுத்தடுத்து படிந்து முத்தாக மாறுகிறது. ஆக, முத்து என்பது மணலின்மீது படியும் சிப்பியின் சுரப்பி நீரின் படிமமே ஆகும்.

# அதிகாரம் நம்மிடம் உள்ளது

# உரிய சட்டங்களை இயற்றியாவது நல்லதொரு நாட்டை உருவாக்குவோம்

## டில்வின் சில்வா கருத்து பகிர்கின்றார்

மூன்றிலிரண்டு பெரும்பான்மையோடு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியுள்ள தேசிய மக்கள் சக்தி கட்சியானது ஆட்சியை நடத்துவதில் சில சிக்கல்களை எதிர்நோக்கி வருவதை காண முடிகின்றது. திருடர்கள், ஊழல் பேர்வழிகளை பிடிப்பது, மானியம் வழங்குவது போன்ற முக்கிய விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் இருப்பதாக மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். இந்த விடயங்கள் உட்பட இன்னும் சில விடயங்கள் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் டில்வின் சில்வாவுடன் நிகழ்த்தப்பட்ட கலந்துரையாடல் இங்கு வழங்கப்படுகின்றது ..

**கேள்வி** - *தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்து சுமார் ஒன்றரை மாதங்கள் ஆகிவிட்டது. அரசாங்கத்தின் இதுவரையான பணிகளில் உங்களால் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைய முடியுமா?*

**பதில்** – ஆம். மகிழ்ச்சி அடைய முடியும். ஆட்சி அதிகாரத்தை பெற்றுள்ள நாம் பல மாற்றங்களை செய்து வருகிறோம். ஆனால், இந்த விடயங்களில் ஒவ்வொரு நபர்களுக்கும் வெவ்வேறு கருத்துக்கள் இருப்பது நமக்குத் தெரியாததல்ல. சிலர் மகிழ்ச்சியாக இல்லை என்பதை நாம் அறிவோம். எல்லா வகையிலும் சீரழிந்து போயிருந்த ஒரு நாட்டையே நாம் பொறுப்பேற்றோம். அதை மீண்டும் கட்டியெழுப்புவதில் பல தடைகள் உள்ளன. அந்த விடயங்களுக்கு முறையான தீர்வுகளை ஆராய்ந்தவாறும் தீர்வுகளை அடைந்தவாறும் அரசின் பணிகள் சரியாக நடந்து வருகின்றது.

**கேள்வி** - *ஆட்சியை நடத்துவதில் பல தடைகள் இருப்பதாக நீங்கள் கூறுகிறீர்கள். அவை எவ்வாறான தடைகள்?*

**பதில்** – அரசாங்க அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் தற்போதுள்ள பொறிமுறையானது பழைய பொறிமுறையைக்கொண்டது. அது கடந்த காலத்தில் அரசியல் மயமாக்கப்பட்ட மோசடி மற்றும் ஊழலை முறையாக தடுக்க முயலாத ஒரு பொறிமுறையாகும். இந்த பொறிமுறையை ஒரேயடியாக முற்றிலுமாக அகற்றிவிட்டு வேறு பொறிமுறையை மாற்றுவது சாத்தியமில்லை. அதனால், சில விடயங்களில் பிரச்சினைகள் உள்ளன. இந்த நாட்டின் அரசியல் கலாசாரத்தை மேல் மட்டத்திலிருந்து நாம் மாற்றியுள்ளோம். அந்த மாற்றம் எல்லா இடங்களிலும் நிலைபெறுவதற்கு சிறிது காலம் எடுக்கும். எந்த சந்தேகமும் வேண்டாம், மக்கள் விரும்பிய மாற்றமுள்ள நாட்டை நாங்கள் கட்டியெழுப்புவோம்.

**கேள்வி** - *அப்படியாயின் நீங்கள் கூறுகின்றபடி அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்?*

**பதில்** – அதற்கு நீண்ட காலம் செல்லாது. அடுத்த சில மாதங்களில் படிப்படியாக மாற் றங்களை ஏற்படுத் துவோம். தற்போது ஊழல், மோசடிகள் நிறுத் தப் பட் டுள் ளன. அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் லஞ்சம் வாங்கப் பயப்படுகிறார்கள். மேலும், ஜனநாயகத்திற்கான பாதை திறக்கப்பட்டுள்ளது. இனவாதம் இப்போது இல்லை. மக்களின் வாழ்வில் வசதியும் எளிமையும் சேர்க்கப்பட்டுள்ளன. மறுபுறம், வரலாற்று ரீதியிலான இன்னும் பல பிரச்சினைகள் உள்ளன. நான் முன்பே சொன்னது போல், அந்த பிரச்சினைகள் மந்திரத்தால் ஓரிரு வாரங்களில் தீர்ந்துவிடக்கூடிய விடயங்கள் அல்ல. அதற்கு சிறிது காலம் எடுக்கும். என்றாலும் அதற்காக கால நேரத்தை செலவு செய்ய நாம் தயாராகவே உள்ளோம். கண்டிப்பாக அந்த விடயங்களை நிறைவேற்றியே தீருவோம். அந்த நல்லொதொரு காலத்திற்கான ஆரம்ப பருவத்தினையே நாம் இப்போது கடந்து கொண்டிருகின்றோம்.

**கேள்வி** - *ஜனநாயகம் பற்றி பேசுகின்றீர்கள். ஆனால், தற்போதைய அரசாங்கம் ஊடகங்களை நசுக்க திட்டமிட்டு வருவதாக பெரும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. தேசிய மக்கள் சக்தி ஜனநாயகம் பற்றி பேசியவாறே ஊடகங்களின் மீது கைவைக்கவா முயற்சிக்கின்றது?*

**பதில்** – நிச்சயமாக இல்லை. ஊடகங்களில் கை வைக்க விரும்பினால், அதற்கான வழிமுறைகள் சட்டத்தில் இருக்கவே செய்கின்றன. கடந்த கால அரசாங்கங்கள் ஊடகங்களின் மீது எவ்வாறு கைவைத் திருந்தன என்பதை உங்களுக்கு புதிதாக ஞாபகப்படுத்த வேண்டியிருக்காது. ஊடக நிறுவனங்களுக்கு தீ வைக்கப்பட்டது, குண்டு வீசப்பட்டது, பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர், கடத்தப்பட்டார்கள், மிரட்டப்பட்டார்கள் ஊடகங்களுக்கு அவர்கள் வேறு எதைத்தான் செய்ய வில்லை? அவ்வாறு நாம் ஏதாவது செய்திருக்கிறோமா? ஆனால், பொய் கூறாமல் இருப்பதற்கான பொறுப்பும் ஊடகங்களுக்கு உள்ளது. அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகளை விமர்சிக்கும் ஊடகங்களின் உரிமையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். எம்மால் இனங்காணப்படாத நமது குறைப்பாடுகளை ஊடகங்கள் மூலமே அறிகின்றோம். ஆனால், எந்த ஒரு ஊடகமும் திட்டமிட்டு பொய் கூறி, வேண்டுமென்றே நமது கருத்துக்களை திரித்து, மக்களை தவறாக வழிநடத்த முயன்றால், அதை தோற்கடிக்க வேண்டாமா? ஊடகங்கள் ஒரு சுய கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டும். உண்மையில், நான் முன்வைக்கும் குற்றச்சாட்டு அனைத்து ஊடகங்களுக்கும் பொருந்தாது. இந்த குற்றச்சாட்டானது அரசியல் நலன் கருதி செயற்படுகின்ற ஒன்றிரண்டு ஊடகங்களுக்கும், இன்னும் பல சமூக ஊடக வலையமைப்புகளுக்கும் மட்டுமே பொருந்தும்.



**கேள்வி** - *திருடர்களைப் பிடிப்பது என்ற பிரதான கோஷத்துடன் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ளது. ஆனால், தற்போது திருடர்களை ஒரு பக்கம் வைத்து விட்டு, பஸ்களில் உள்ள அலங்கார பொருத்துக்களை அகற்றுவதிலேயே அரசு முன்னுரிமை அளித்து வருவதாக சில தரப்பினர் குற்றம் சாட்டுகின்றனரே?*




**பதில்** – உண்மையில் இது அரசியல் நலன் கருதி செயற்படுகின்ற ஒரு சிலரது கருத்தாகும். அவர்களுக்கு விமர்சனம் செய்வதைத் தவிர வேறு எதுவும் தெரியாது. க்ளீன் ஸ்ரீலங்கா எனும் தூய்மையான இலங்கை நல்லதா இல்லையா என கேட்க விரும்புகின்றோம். பெரும்பாலான மக்கள் இந்த நடவடிக்கைகளை பாராட்டுகிறார்கள். ஒரு நல்ல காரியத்தைச் செய்யும்போது தோன்றும் ஒன்றிரண்டு சிறு குறைகளைக் கொண்டு சிறந்த ஒரு விடயத்தைத் தாக்குவது நியாயமில்லை.

**கேள்வி** - *திருடர்களை பிடிப்போம் என கூறியிருந்தீர்கள். எப்போது திருடர்களை பிடிக்கப் போகின்றீர்கள்?*

**பதில்** – நமது நாட்டில் திருடர்களை பிடிப்பதற்கென மூன்று அமைப்புகள் உள்ளன. சட்டமா அதிபர் திணைக்களம், குற்றப்புலனாய்வுதிணைக்களம், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு. இந்த மூன்று நிறுவனங்களுக்கும் தேவையான ஆலோசனைகளை வழங்கியுள்ளோம். ஆனால், அவர்களின் கடமைகளில் நாங்கள் தலையீடு செய்யப் போவதில்லை. அவ்வாறு செய்வதால் சில தாமதங்கள் ஏற்படலாம். ஜனாதிபதிக்கும் சட்டமா அதிபருக்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றது. வழக்கு தொடரக்கூடிய சம்பவங்கள் பல உள்ளன. ஆனால், சரியான நடைமுறைகளின்படியே வழக்குப் பதிவு செய்ய வேண்டியுள்ளது. இல்லையேல் வழக்கில் சில குறைபாடுகள் நிலவுமாயின் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டு தப்பித்து விடும் நிலை ஏற்படக்கூடாது. எனவே எல்லாம் சட்டப்படியே நடக்கின்றது. ஆகையினால், தாமதங்கள் ஏற்படும் என்பதற்காக அவர்களை தண்டிக்கப் போவதில்லை என அர்த்தம் அல்ல. நாம் நல்ல காரியங்களை நல்ல வழியிலேயே செய்வோமே தவிர, நல்ல காரியங்களை தவறான வழியில் செய்யப் போவதில்லை.

**கேள்வி** - *நீங்கள் கூறுவதன்படி அரசாங்கத்தால் அதைச் செய்ய முடியா விட்டால், அடுத்தகட்ட நடவடிக்கை என்ன?*

> வரலாற்று ரீதியிலான பிரச்சினைகள் மந்திரத்தால் ஓரிரு வாரங்களில் தீர்ந்துவிடக்கூடிய விடயங்கள் அல்ல, அதற்கு சிறிது காலம் எடுக்கும்.

**பதில்** – நாடாளுமன்றத்தில் எமக்கு பெரும்பான்மை பலம் உள்ளது. எந்த சட்டத்தையும், எந்தவொரு சட்டமூலத்தையும் நிறை வேற்ற எங்களுக்கு வாய்ப்பு உள்ளது. புதிய சட்டங்களை உருவாக்கி, மாற்ற வேண்டிய இடங்களை மாற்றலாம்.

**கேள்வி** – *புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் இன்னமும் சில அரச அதிகாரிகளை வழிக்கு கொண்டுவர முடிவதில்லை என்பது தெரிந்த விடயமே. ஆட்சி மாறினாலும் அதிகாரிகளை சரிவர கையாள முடியாமல் இருப்பதற்கான காரணம் என்ன?*

**பதில்** – பல தசாப்தங்களாக நடந்து வரும் ஒரு செயற்பாட்டை உடனடியாக மாற்றுவதில் சிக்கல்கள் உள்ளன. இதுதான் பிரச்சினை. நாடு மாற வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். ஆனால், தம்மை மாற்றிக்கொள்ள சிலரால் முடியாத ஒரு நிலை இருக்கின்றது. மக்கள் நல்லதையே எதிர்பார்க்கிறார்கள். ஆனால், நல்லதை செய்ய முற்பட்டால் அதற்கு ஒத்துப்போக மனமில்லாத சிலர் இருக்கின்றனர்.

> ‘க்ளீன் ஸ்ரீலங்கா’ எனும் தூய்மையான இலங்கை நல்லதா இல்லையா என கேட்க விரும்புகின்றோம். பெரும்பாலான மக்கள் இந்த நடவடிக்கைகளை பாராட்டுகிறார்கள்

**கேள்வி** - *“க்ளீன் ஸ்ரீலங்கா” (தூய்மையான இலங்கை) திட்டத்திற்கும் அதுதானே நடந்தது ?*

**பதில்** – நிச்சயமாக. ஒரு நாட்டை மாற்றுவது என்பது ஒரு அரசாங்கத்தால் மட்டும் செய்யக்கூடிய காரியம் அல்ல. ஒரு அரசாங்கம் முடிவெடுக்கலாம் மற்றும் தலையீடு செய்ய முடியும். ஆனால், இதை நல்ல திசைக்கு திருப்ப வேண்டிய பெரிய பொறுப்பு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், ஊடகங்கள் மற்றும் பொதுமக்களுக்கு உள்ளது. நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டிய பொறுப்பு எமக்கு வாக்களித்த மக்களுக்கும் அதிகமாக உள்ளது.

**கேள்வி** - *நாட்டில் முதலீடுகளை செய்யக் கூடிய வகையில் முதலீட்டாளர்களுக்கு எத்தகைய சூழ்நிலை உள்ளது?*

**பதில்** – பல நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எமது நாட்டில் முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளனர். இந்தியா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகளில் இருந்து முதலீட்டாளர்கள் இங்கு வந்து முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளனர். இதற்கு முன்னைய காலங்களில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் மற்றும் லஞ்ச கோரிக்கைகள் குறித்து வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துக்கு விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இப்போது யாரும் லஞ்சம் கேட்பதில்லை. மோசடி மற்றும் ஊழலற்ற நாட்டைக் கட்டியெழுப்ப முதலீட்டாளர்களை இலங்கைக்கு அனுப்புவோம் என அமெரிக்கத் தூதுவர் அண்மையில் குறிப்பிட்டிருந்தார். முதலீட்டாளர்கள் தங்கள் முதலீடுகளைச் செய்வதற்கு ஏற்ற சூழல் தற்போது நாட்டில் கட்டமைக்கப்பட்டுள்ளது. அடுத்த வரவு செலவுத் திட்டத்திற்குப் பிறகு, நாடு ஓர் ஒழுங்கான முறையில் நகரத் தொடங்கும்.

**கேள்வி**- *தேசிய மக்கள் சக்தியில் இருந்து 159 எம்.பி.க்கள் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களது எம்.பி. சம்பளத்தை கட்சியே எடுப்பதாகவும், அதனால் அவர்கள் வாழ்க்கை செலவிற்கு போதிய பணம் இல்லாமல் இருப்பதாகவும் பேசப்படுகின்றதே ?*

**பதில்** – நாம் அனைவரும் சட்டப்படி என்றில்லாமல் வேலை செய்பவர்கள். இரவு பதினொன்றரை மணி வரை பணியாற்றும் அமைச்சர்கள் எங்களிடம் உள்ளனர். எம்.பி.யின் சம்பளம் மற்றும் அவர்கள் பெறும் பணம் குறித்து எந்த எம்.பி.யும் சிணுங்குவது இல்லை. இந்த மாபெரும் வெற்றியை அடைய அனைவரும் கடுமையாக உழைத்தோம். எனவே, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பெறும் எதுவாயினும் அது பொதுவாக அந்த கட்சி சார்ந்த அமைப்பிற்கே உரியது என்ற எண்ணம் எங்களிடம் உள்ளது. எனவே, எம்.பி.யின் சம்பளம் கட்சி நிதிக்கு செல்கிறது என்பது உண்மைதான். ஆனால் அவர்களுக்கான அனைத்து செலவுகளையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இதன் மூலம் கட்சிக்கு சிறிதளவு பணத்தை சேமிக்கக் கூடியதாக இருக்கும். நாங்கள் சுகபோக வாழ்க்கை வாழ்வதற்காக இந்தத் துறையை தெரிவு செய்தவர்கள் அல்ல. இந்த விடயங்களில் யாருக்கும் எந்த பிரச்சினையும் இல்லை. வெளியாட்கள் சிலர் தான் இதனை பிரச்சாரமாக பயன்படுத்துகின்றனர்.

**கேள்வி** - *சிலோன் சுகர் பிரைவேற் லிமிடெட் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் நீதிமன்ற தீர்ப்பின்படி இலங்கையில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமானது என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஆனால், நீண்டகாலத் திட்டமிடலொன்றின் விளைவாகவே இந்த இழப்பு ஏற்பட்டதாக சிலோன் சுகர் பிரைவேற் லிமிடெட் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தலைமையிலான அரசின் கீழ் இத்தகைய அரச சொத்துக்கள் பாதுகாக்கப்படும் என்ற எண்ணம் ஊழியர்கள் மத்தியில் உள்ளது. எனவே இந்த விடயத்தில் அரசாங்கம் தலையிடத் தயாரா?*

**பதில்** – இந்த சம்பவம் பற்றி எனக்கு போதிய விபரம் தெரியாது. ஆனால், நமது கொள்கை அரச சொத்துக்களை பாதுகாப்பதாகும். கண்டிப்பாக அதன்படியே நாம் தொழிற்படுவோம். மக்கள் எமக்கு மிகுந்த நம்பிக்கையுடன் அதிகாரத்தை வழங்கியுள்ளனர். அந்த நம்பிக்கையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம். எதையும் தொடங்கும் போது தடைகள் ஏற்படுவது வழமையே. எனவே, நல்ல காரியங்களைச் செய்வதை விட்டுவிட மாட்டோம். அரசாங்கம் என்ற வகையில் மக்கள் விரும்பிய மாற்றத்தை ஏற்படுத்த நிச்சயம் பாடுபடுவோம். இது குறித்து மக்களுக்கு உறுதியளிக்கின்றோம்.

நன்றி : திவயின

தமிழில் : வி.ரெட்லி ஹெரிசன்

# கனவில் வந்த காரிகையைத் தேடி...?

ஆர். ராஜலிங்கம்

அத்தியாயம் -11

**தோ**ட்டத்தில் அமர்ந்திருந்த தீபன் பலவாறு சிந்தித்தபடி மிகுந்த குழப்பத்தில் இருந்தான்.

ஏன் அப்படி ஒரு பயங்கர கனவு வந்தது என்று பலவாறு சிந்திக்கும்போது தீபனுக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது.

"நான் நிறைய வாசிப்பதனால் எனக்கு அப்படியொரு பாதிப்பு ஏற்பட்டிருக்குமா?"

இப்படி சிந்தித்தபோது அவனுக்கு சில மாதங்களுக்கு முன்னர் சஞ்சிகை ஒன்றில் வாசித்த ஒரு தகவல் நினைவுக்கு வந்தது.

அதாவது ஏதோ ஒரு நாட்டில் குகை ஒன்று இருப்பதாகவும் பல வருடங்களுக்கு முன்னர் மரணதண்டனைக் கைதிகளை அந்தக் குகைக்குக் கொண்டுபோய் அங்குவைத்து அவர்களுக்கு மரண தண்டனையை நிறைவேற்றினார்கள் என்றும் அவன் அந்த சஞ்சிகையில் வாசித்தது இப்போது ஞாபகத்துக்கு வந்தது. அதன் பாதிப்புதான் இந்தக் கனவாகவும் இருக்குமோ என்று அவன் நினைத்துக் கொண்டான்.

"அப்படியே இருந்தாலும் அந்தப் பெண்ணை மட்டும் மறக்க முடியவில்லையே! என்ன செய்வது" என்று அவனுக்குப் புரியவில்லை.

அவனுடைய மனநிலை பற்றி ராம்குமார் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. சில தினங்களுக்கு முன்னர் பூங்குழலி தீபனை வீட்டைவிட்டு அனுப்புமாறு கூறியதையும், அவ்வேளையில் அவள், அவன் எந்த தவறும் செய்யவில்லை, "நான்தான் அவனை.." என்று கூறி அழுததையும், பின்னர் அவள் தீபனுடன் நெருக்கமாகப் பழகுவதையும், அவனை வெகுவாக உபசரிப்பதையும் அவர் கவனித்தே வந்தார்.

இதேவேளை தீபனும் அவருடைய மனநிலை பற்றி சிந்திக்கலானான். அவர் தன்னையும் பூங்குழலியையும் பார்க்கும் பார்வையில் ஏதோ அர்த்தம் இருப்பதாக உணர்ந்தான். இது என்ன நிலையை ஏற்படுத்துமோ தெரியவில்லை. அதனால் விரைவில் இங்கிருந்து சென்றுவிடுவதே நல்லது என்றும் நிதைத்துக் கொண்டான்.

இப்படி பலவாறு நினைத்து ஆழ்ந்த சிந்தனையில் இருந்த தீபனை நோக்கி விமலா வந்தாள்.

அவள் தீபனிடம் "ஐயா, உங்களைக் கொஞ்சம் வரச்சொன்னார்" என்று கூறினாள்.

சிந்தனையிலிருந்து விடுபட்ட தீபன் என்ன இது ஒருநாளுமில்லாமல் இப்போது ஏன் என்னை அவர் சந்திக்க வேண்டும் என்று நினைத்தவன், "இதோ வருகிறேன் என்று சொல்லுங்க" என்று கூறியபடி அவசர அவசரமாக எழுந்தான்.

அவன் மனதில் பல்வேறு சிந்தனைகள் ஏற்பட்டன. ஒரு நாளும் இல்லாமல் இன்று ஏன் என்னை அழைக்கிறார் என்று பலவாறு சிந்திக்கலானான்.

பூங்குழலி அம்மாவையும் என்னையும் அவர் பார்க்கும் பார்வை வித்தியாசமாகத் தெரிகிறது. எங்களைப் பற்றி அவர் ஏதும் தவறாக நினைக்கிறாரோ தெரியவில்லை. அப்படி ஏதும் அவர் நினைப்பாராக இருந்தால் அதற்கு இன்றே ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிடவேண்டும் என்று நினைத்துக் கொண்டே அவன் அவருடைய அறைக்குள் நுழைய முற்பட்டபோது, "வாருங்கள் மிஸ்டர் தீபன். அமருங்கள்" என்று கூறினார். அவர் என்ன சொல்லப்போகிறாரோ என்று அவன் நினைத்துக் கொண்டிருக்கையில் அவர்,



"தீபன் நீங்கள் உங்கள் திருமணத்தைப் பற்றி என்ன திட்டமிட்டு இருக்கிறீர்கள்?" இதுதான் அவர் எடுத்த எடுப்பிலேயே கேட்ட முதல் கேள்வி. அதைக் கேட்டு அவன் சிறிது தடுமாறிவிட்டான்.

தீபன் கூறிய பதில் "ஏன் சேர் திடீரென்று இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறீர்கள்? அதைப்பற்றி நான் இன்னும் எதுவும் யோசிக்கவே இல்லை"

"சரிதான், ஆனால் நீங்களும் ஒரு திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கையில் ஈடுபட வேண்டும்தானே".

"இல்லை சேர், எனக்கு அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் வரவே இல்லை"

"நீங்கள் அப்படிச் சொல்வதானால் அதற்கு ஏதும் காரணம் இருக்கவேண்டும்"

ராம்குமார் இப்படிச் சொன்னதும் தீபன் அப்படியானால் இவர் என்மீது ஏதோ சந்தேகம் கொள்கிறார். அந்த சந்தேகத்தை வளரவிடக் கூடாது என்று நினைத்தவன்,

"வந்து சேர், அதைப்பற்றி நான் இன்னும் நினைக்கவில்லை என்றுதான் கூறினேன்" என்றான். "நீங்கள் சொல்வது சரி. ஆனால் உங்களுக்கு யாரும் இல்லை என்பதை நீங்கள் எனக்கு ஆரம்பத்திலேயே சொல்லி விட்டீர்கள். இப்பொழுது நீங்கள் என்னிடம் வந்து சேர்ந்திருக்கிறீர்கள். உங்களுடைய வாழ்க்கையைப் பற்றி யோசிக்க வேண்டிய அக்கறை எனக்கு இருக்கிறது அல்லவா?"

"உண்மைதான், ஆனாலும் பெற்றோர்கள் போன்று நீங்களும் அம்மாவும் இருந்து என்னை கவனித்துக் கொண்டிருக்கும் போது நான் அதைப் பற்றியெல்லாம் எதுவும் நினைக்கவில்லை",

பூங்குழலியோடு அவன் நெருங்கிப் பழகுவதால் அதைப்பார்த்து அவர் ஏதும் சந்தேகம் கொள்வாராக இருந்தால் அதற்கும் ஓர் முற்றுப்புள்ளி வைத்துவிடவேண்டும் என்ற எண்ணத்தில அவன் அப்படிக் கூறினான். ஆனால் ராம்குமார்,

"அது சரி, இருந்தாலும் கேட்கிறேன். உங்கள் மனதில் ஏதாவது எண்ணம் இருந்தால் சொல்லிவிடுங்கள். அது

**ஏதோ ஒரு நாட்டில் குகை ஒன்று இருப்பதாகவும் பல வருடங்களுக்கு முன்னர் மரணதண்டனைக் கைதிகளை அந்தக் குகைக்குக் கொண்டுபோய் அங்குவைத்து அவர்களுக்கு மரண தண்டனையை நிறைவேற்றினார்கள் என்றும் அவன் அந்த சஞ்சிகையில் வாசித்தது இப்போது ஞாபகத்துக்கு வந்தது. அதன் பாதிப்புதான் இந்தக் கனவாகவும் இருக்குமோ என்று அவன் நினைத்துக் கொண்டான்**

யாராக இருந்தாலும் பரவாயில்லை" என்று கூறினார். "இவர் ஏன் யாராக இருந்தாலும் என்று கூறுகிறார். அப்படியானால் என்மீது அவருக்கு ஏதும் சந்தேகங்கள் ஏற்பட்டிருக்குமோ?" இப்படிப் பலவாறு சிந்திக்கலானான்.

பின்னர் " ம்.., இனியும் அதனை இவரிடம் மறைக்கக் கூடாது. உண்மையைக் கூறிவிடவேண்டியதுதான்" என்று தீர்மானித்துக் கொண்டான். பின்னர் தன் மனதில் உள்ள அந்த இரகசியத்தை சொல்லத் தயாரானான்.

(தொடரும்)

# குறுக்கெழுத்துப்போட்டி 11

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | 3 | ■ | 4 |
| | ■ | ■ | | ■ | 5 | | |
| 6 | | 7 | | ■ | | ■ | |
| | ■ | | ■ | 8 | ■ | 9 | ■ |
| ■ | 10 | | | | ■ | | ■ |
| 11 | | | ■ | 12 | 13 | | 14 |
| ■ | | ■ | ■ | 15 | | ■ | |
| 16 | | ■ | 17 | | | ■ | |

**இடமிருந்து வலம்**

1. பாடல் புனையும் அறிவை குறிக்கும்.
5. இனிப்பு பண்டம் ஒன்று.
6. திருமண வீட்டிலும் போடப்படும்.
10. ஆதாரமற்ற தகவலை இப்படிக் கூறுவார்கள்.
11. உறுதியான என்ற பொருளைத் தரும்.
12. மன வேதனையில் ஏற்படுவது.
15. போதை தருவது.
16. ஆதிகால மனிதனின் இல்லமாகவும் இது பயன்பட்டது. திரும்பி.
17. இதனை ஓர் அபசகுனமான பறவையாகவும் கருதுகிறார்கள். குழம்பி.

**மேலிருந்து கீழ்**

1. எழுத்துத் துறையிலும் பிரகாசிக்க தேவையான வளம்.
2. உறக்கம் என்றும் சொல்லலாம்.
3. இது பொன்போன்றது என்பார்கள். குழம்பி.
4. இதனைப் பிடித்து இழுத்து சண்டை செய்வோரும் உண்டு.
7. இதற்காக யானைகள் பெரும்பாலும் கொல்லப்படுகின்றனவாம்.
8. வறண்டுபோன காலத்தில் பெய்யும் மழைக்கு உதாரணமாக இவளைக் கூறுகிறார்கள்.
9. ஒற்றைக் காலில் வெகு நேரம் நிற்கும் பறவையொன்று. குழம்பி.
10. திசைகளில் ஒன்று
13. கழுத்தில் அணியும் அணிகலன் ஒன்றையும் குறிக்கும். குழம்பி.
14. இதனுடன் முயற்சியும் இருந்தால் சாதித்து விடலாம்.

**உங்கள் பதில்களை தபால் அட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பி வைக்கலாம்**

ஒருவன் ஆசிரியர் பீடம், பெல்லாட்ரிக்ஸ் கட்டம்,
2ஆம் மாடி, ஜெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு -09

## சென்ற வாரத்திற்கான விடை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 தூ | ம | 2 கே | 3 து | ■ | 4 ஆ | யு | 5 ள் |
| ண் | ■ | 6 னி | ரு | 7 தி | கா | ■ | க |
| 8 டி | நெ | ■ | 9 ம் | ஐ | ய | ■ | ம |
| ல் | ■ | ■ | 10 பு | க | ம் | 11 க | க் |
| ■ | 12 பா | 13 ர் | ■ | ம் | ■ | ளி | ■ |
| 14 ஊ | ■ | க | 15 தை | ■ | 16 பு | ப் | 17 உ |
| 18 க | ம | ம் | ■ | 19 வி | ல் | பு | த |
| ம் | ■ | 20 ம | ம | தை | ■ | ■ | வி |

## வெற்றியாளர்கள்

1. எம்.ஜீவிதா, கல்முனை
2. முஹம்மட் பரீனா, மாத்தறை
3. எஸ்.கலைவாணி, கொம்பு
4. கே.சாந்தி, திருகோணமலை
5. என்.இம்தியாஸ், யாழ்ப்பாணம்
6. உமா மகேஷ்வரி, வத்தளை

# வெற்றியின் மூலப்பொருள் விடாமுயற்சி

மனமே

சுபா

வாழ்க்கையின் எந்தப் பகுதியிலும் வெற்றிக்கு ஒரு முக்கிய மூலப்பொருள் என்றால் அது விடாமுயற்சி தான்.

ஒவ்வொரு பெரிய சாதனையும், ஒவ்வொரு திருப்புமுனையும், வரலாற்றில் ஒவ்வொரு முக்கிய மைல்கல்லும் விடாமுயற்சியுடன் இருந்த ஒருவரின் விளைவாகும்.

படிக்காத மேதைகள் பலர் தங்களது விடாமுயற்சியால் மட்டுமே பல மொழிகளைக் கற்று பல அனுபவங்களைப் பெற்று பல நாடுகளை சுற்றி, அசைக்க முடியாத மனிதர்களாகவும் தலைவர்களாகவும் உருவாகி உள்ளனர்.

வெற்றிபெற வேண்டும் என்று ஒரு மனிதர் தீர்மானித்து விட்டால் அவர், வயதையோ மற்ற தடைகளையோ நிச்சயம் பொருட்படுத்த மாட்டார். அவர் எந்த துறையில் வெற்றி பெற வேண்டும் என்று எண்ணுகிறாரோ அதில் மட்டுமே விடாமுயற்சியுடன் செயல்படுவார். சிலர் மிகவும் நொந்து கொண்டு ஏகப்பட்ட முறை முயற்சி செய்துவிட்டேன், ஆனால் எதிலும் வெற்றி கிட்டவில்லை என மனம் உடைந்து போவார்கள்.

ஆனால் அந்த நிலையிலும் நாம் தொடர்ந்து உழைப்போமேயானால், நம் முயற்சிக்கு நிச்சயம் பலன் கிட்டும். தோமஸ் அல்வா எடிசன், இறுதியாக ஒளி விளக்கை உருவாக்குவதற்கு முன்பு ஆயிரக்கணக்கான முறை தோல்வியுற்றாராம். அவரின் அந்த தொடர் தோல்வி தான் இன்று உலகமே ஒளியைக் காண உதவியது.

போல் விட்ஜென்ஸ்டைன் என்பவர், பியானோ வாசிப்பதில் ஆர்வம் உடையவர். அவர், முதலாவது உலகப்போரில் தனது வலது கையை இழந்தார். ஒரு விரலில் காயம் ஏற்பட்டால் கூட இசைக் கருவியை கையாள்வது கடினம். ஆனால் அவர் வலது கையை இழந்த பின்பும் மனம் தளராமல் எஞ்சியுள்ள இடது கையால் எவ்வாறு இசைப்பது என்பதை கற்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

பிரபலமான பல்வேறு இசை அமைப்பாளர்களிடம் இது தொடர்பாக கேட்டார்.

அப்போதைய பிரபல இசை அமைப்பாளர் ஆன ரோவெல் அவருக்கு உதவினார். அவர் இசை ஆர்வம் கொண்ட போல் விட்ஜென்ஸ்டெயினுக்கு ஏற்றவாறு இசை அமைத்துக் கொடுத்தார். பின் நாட்களில் பிறர் தனது குறையை அறியா வண்ணம் இசைத்து கச்சேரிகளிலும் கலந்து கொண்டு பெரும் புகழ் பெற்றார் போல் விட்ஜென்ஸ்ஸ்டெய்ன்.

பிரபல இயற்பியல் விஞ்ஞானியான ஸ்டீபன் ஹொக்கின்ஸ் பற்றி அறியாதவர் இருக்க முடியாது. வாழ்வில் பல சவால்களையும், தொடர் தோல்விகளையும் எதிர் கொண்டவர் தான் அவர். பேசுவது, நடப்பது, சுவாசிப்பது என அனைத்திற்கும் அவர் இயந்திரங்களின் உதவியை நாட வேண்டிய அளவிற்கு உடல் திறன் குன்றி இருந்தார். ஆனால், இதை அவர் தனது சாதனைக்கு தடையாக ஒருபோதும் கருதியது இல்லை. அவரது அறிவியல் கொள்கைகள் இன்று விஞ்ஞான உலகில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

ஆகவே, ஒரு குறிக்கோளை திட்டமிடுங்கள். அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக முயலுங்கள். அவ்வாறு முயலும் போது எவ்வளவு இன்னல்கள், தொடர் தோல்விகள்



ஏற்பட்ட போதிலும் குறிக்கோளை மட்டும் விட்டுவிடாமல் உறுதியுடன் செயல்படுங்கள். அவ்வாறு செயல்படும்போது வெற்றி பெறுவது உறுதி. நமது இலக்கில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். அதற்காக கடினமாக உழைக்கத் தயாராக இருக்கவேண்டும். முக்கியமாக, நாம் மனச்சோர்வடைந்தால் அல்லது சோர்வாக உணர்ந்தால், விடாமுயற்சியே நம்மைச் சமாளிக்கும் என்பதை என்றும் நினைவில் கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு தோல்வியின் போதும், நாம் ஏன் அதை ஆரம்பித்தோம் என்பதை நினைவூட்டி அதன் பின் அந்த முயற்சியை தொடரவேண்டும். ஆனால் அதில் நாம் உடனடியாக முடிவுகளைப் பார்க்க முடியாது, நாம் எடுக்கும் ஒவ்வொரு அடியும் நமது இலக்கை நெருங்குகிறது. இறுதியாக நாம் அந்த இலக்கை அடையும் போது, நமது அந்த விடாமுயற்சிதான் அதை சாத்தியமாக்கியது என்பதை நாம் கண்கூடாகவே பார்க்கலாம்.

# கண்டுகொள்ளப்படாத அப்பா பாசம்



"பட்டர் தடவி பாண் சாப்பிட ஆசையா இருக்குதம்மா" என்றேன் நான் அம்மாவிடம்.

ஏதோ நான் தகாத வார்த்தைகள் உபயோகித்ததைப்போல் கடுகடுப்பான அம்மா, தன் முகத்திலுள்ள சகல அங்கங்களாலும் சைகை செய்து எனக்கு ஏதோ சொன்னாள். அதை விளங்கிக் கொள்ளாத "நான் ஏனம்மா.....?" என்றேன்.

சட்டென அருகே வந்தவள் தன் கையால் என் வாயைப் பொத்தியவளாய் குனிந்து என் காதருகில் "அப்பாவுக்குக் கேட்டிடும், மெதுவாய்ப்பேசு" என முணுமுணுத்தாள்.

"அப்பாவின் நிதி நிலமை இந்நாட்களில் மிக மோசம்.எனக்குத் தெரியும்.இருந்தாலும் நானென்ன வாகனமா வாங்கிக்கேட்டேன்? பாண்தானே வேண்டுமென்றேன்? இதென்ன குழப்பம்..." என நான் எனக்குள்ளே கேட்டுக்கொண்டேன்.

"கொஞ்ச நாட்கள் கழித்து வாங்கித் தருவேன் பொறுத்திரு" மிக மெதுவாகவே சொன்னாள்.வெளியே கதவுக்கு மிக அருகில் அமர்ந்திருந்த அப்பாவுக்கு கேட்டிடாமற்போலும்.

அப்பா சுகயீனமுற்றபின் அவருக்கு வைத்திய ஆலோசனைப்படி ஓய்வெடுக்கவென மாதக்கணக்காய் வேலைக்கு விடுப்பு எடுக்க நேர்ந்ததில் எங்களுக்கு முன்பைவிட இப்போது பெரியளவில் பணக்கஷ்டம்தான். நான் அறியேனா?

தினமும் வேலைக்குச் செல்கையில் அப்பா வழக்கமாக அவர் போய்வருதற்கு பஸ் கட்டணத்துக்கு சரியாக மட்டுமே தன் பக்கெற்றில் பணம் எடுத்துச் செல்வார்.

அப்பாவுக்கு இரவு வேலை.

மாலையில் அப்பா சென்றபின் அப்பாவின் வேலையில் உள்ள கஷ்டம், வீட்டு நிதி நிலவரம் என்பவற்றை அம்மா என்னிடம் ஒப்பிப்பதை வழக்கமாய்க் கொண்டிருந்தாள். என் சிறுவயதில் அதெல்லாம் முழுமையாக எனக்கெங்கே விளங்கும்?

இன்றும் அப்பா வேலைக்குச் சென்றபின் அம்மா சற்று அதிகமாகவே வீட்டு நிலவரம், பணக்கஷ்டம் பற்றி சொல்லலானாள்.

நானும், "சரியம்மா நானினி பட்டர் தடவி பாண்தின்ன ஆசை என்றெல்லாம் சொல்லமாட்டேன்" என சொன்னபின்தான் அம்மா அமைதியானாள்.

அவள் என்னிடம் நான் பாண் தின்ன ஆசை என்று சொன்னதால்தான் வீட்டுநிலவரம் எடுத்துச் சொன்னாள் என்றில்லை.அவள் பெற்ற தாயாயிற்றே!

அவள் தன் கண்களில் நிரம்பிய கண்ணீரைத் துடைத்தவளாய் எனக்கு ஆறுதல் சொன்னாள்.

"பாண் திண்டு ரொம்பநாளாயிட்டுதானப்பன். என் செல்லக்குட்டிக்கு பட்டர் தடவி பாண் தின்னபிடிக்கும் என்றும் எனக்குத் தெரியும். அது அப்பாவுக்கும் தெரியாமலில்லப்பா. இப்ப நம்மகிட்ட அதுக்கெல்லாம் ஏது காசு? நீ சொன்னது அப்பா காதில் விழுந்தால் அவர் உள்ளம் துடித்துப்போகும் தம்பி. அதனாலதான் சொல்ல வேணாமெண்டு சொன்னேன். புரிந்துகொள் தம்பி" என்றாள். பாவம் அம்மா அவள் என்னதான் செய்வாள்?

மறுநாள் காலை வேலைவிட்டு வீடு வந்த அப்பா ஒரு பொலித்தீன் பையை அம்மாவிடம் நீட்டி என்னைச் சாடை செய்தார். அம்மாவிடம் அதை வாங்கிப் பார்த்தேன். என்ன ஆச்சரியம் அதில் சுடச்சுட பாணும் குளிரக்குளிர பட்டரும்.

"ஏதுங்க பணம் யாரிடமாவது கைமாறோ?" எனக் கேட்டாள் அம்மா.

"இண்டக்கி நடந்து போய் நடந்தே வந்தேன். சத்தம்போடாத புள்ள காதுல விழுந்திடப்போகுது..." அத வெட்டி நிறைய பட்டர் தடவி பிள்ளைக்கு கொடு நீயும் தின்" என்றார் அப்பா.

மனதினுள் எண்ணிக் கொண்டேன்... "என் காதில் விழவில்லை என்ற எண்ணம் இருவருக்கும். பாண் தின்னும் என் ஆசையைவிட அப்பாவின் பாசம் எனக்கு எவ்வளவோ பெரிதாய்த் தெரிந்தது. எழுதும் அனைவருமே அன்புக்கு அம்மா என்றெழுதுவது எப்படித்தான் நியாயமோ......?" என எண்ணிக் கொண்டேன்.

**ஹொரொவ்பொத்தான**
**அகமட் இம்தியாஸ்.**

# நான்கு கோடி பாடல்களுக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசுபெற்ற ஔவை..!



ஒருமுறை மரகத நாட்டில் செல்வந்தன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஓரளவுக்கு கவி பாடும் ஆற்றல் இருந்தது. எனவே கவி பாடுவதிலும், பாடுவதை கேட்பதிலும் மிகுந்த ஆர்வம் கொண்ட அவன், தன்னை நாடிவரும் புலவர்களை பாட வைத்து அவர்களுக்கு பரிசளிப்பது வழக்கம்.

ஆனால் இயல்பிலேயே அந்த செல்வந்தனிடம் கருமித்தனமும் அதிகமாக இருந்தது. அதனால் பாடும் எந்த ஒரு புலவருக்கும் அவன் பரிசினை முழுமையாக கொடுக்க மாட்டான். தனக்கு ஓரளவு கவி பாடுவதில் அறிவு இருப்பதால் ஏதோ ஓரிடத்தில் ஏதேனும் ஒரு பிழையை சுட்டிக்காட்டி தங்களுடைய பாட்டில் குறை இருக்கிறது என்று கூறி தான் கொடுப்பதாக சொன்ன பரிசை முழுமையாக கொடுக்காமல் சாதித்து விடுவான்.

இவ்வாறாக தன்னை நாடிவரும் புலவர்களிடம் மிகவும் குதர்க்கமாக பேசிக்கொண்டே இருந்த அந்த செல்வந்தன் ஒரு நாள், நான்கு கோடி பாடல்கள் பாடும் ஒருவருக்கு ஆயிரம் பொற்காசுகள் தரப்போவதாக அறிவித்தான். எனவே அன்றைய நாளில் நான்கு கோடி பாடல்கள் பாடுவதற்காக வந்த புலவர்களை காட்டிலும், நான்கு கோடி பாடல்கள் பாடப்போவது யார்? என்று அறிந்து கொள்வதற்காக வந்த புலவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. ஏனெனில் வாழ்நாள் முழுக்க பாடினாலும் ஒருவரால் நான்கு கோடி பாடல்களை பாடுவது என்பது அவ்வளவு எளிதில் முடியாத ஒரு காரியம்.

மேலும் இப்படியான ஒரு அரிதான போட்டியை வெல்லப் போவது யார் என்று அறிந்து கொள்வதற்காக அங்கே பொதுமக்களும் அதிக அளவில் கூடி விட்டார்கள். போட்டியில் பங்கேற்று வெற்றி பெறப் போவது யார் என்று அறிந்து கொள்வதற்கான ஆர்வம் நிமிடத்திற்கு நிமிடம் கூடிக் கொண்டே சென்றது.

இவ்வாறான சூழலில் மாபெரும் பெண்பாற்புலவரான ஔவையார் அங்கு வந்து சேர்ந்தார். போட்டியின் அறிவிப்பு என்ன என்பதையும் அதற்கான பரிசு தொகை பற்றியும் அறிந்து கொண்டார். மேலும் போட்டி வைத்த செல்வந்தனின் எண்ணம் ஒருவரை நான்கு கோடி பாடல்கள் பாட வைப்பது மட்டுமல்ல என்பதையும், புலவர்களை மட்டம் தட்டி அவமதிப்பதற்காகவே அவன் இவ்வாறு ஒரு போட்டியை அறிவித்திருக்கிறான் என்பதையும் ஔவையார் நன்கு புரிந்து கொண்டார்.

எனவே அந்த கருமித்தனம் நிறைந்த செல்வந்தனுக்கு சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என நினைத்து ஔவையார் பாடல் ஒன்றை பாடினார்.

ஔவையார் பாடிய பாடலை கேட்டு அங்கு நின்றிருந்த அனைவரும் மெய்சிலிர்த்து போயினர்.

அனைவரும் அவரின் புத்தி கூர்மையையும், அறிவின் ஆழத்தையும் கண்டு வியந்து போயினர். செல்வந்தனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை! அவன் முகம் மிகவும் வாடிப் போய்விட்டது! தன்னுடைய தோல்வியை ஒப்புக்கொண்டு தான் அறிவித்தபடி ஆயிரம் பொற்காசுகளை அவருக்கு பரிசாக அளித்தான். அத்தோடு மட்டுமன்றி இனிமேல் எந்த ஒரு புலவரையும் மட்டம் தட்டி பேசுவதில்லை என்றும், "வல்லவனுக்கு வல்லான் வையகத்தில் உண்டு" என்பதை தான் புரிந்து கொண்டதாகவும் மனம் திருந்தி கூறினான்.

**நான்கு கோடி பாடல்களையும் உள்ளடக்கி அவ்வையார் பாடிய ஒரே பாடல் இதுதான்!**

**"மதியாதார் முற்றம் மதித்தொரு கால்சென்று**
**மிதியாமை கோடி பெறும்**
**உண்ணீர்**
**உண்ணீர்**
**என்று**
**உபசரியார்**
**தம்மனையில்**
**உண்ணாமை**
**கோடி பெறும்**
**கோடி கொடுத்தும்**
**குடிப்பிறந்தார்**
**தம்மோடு**
**கூடுதல் கோடி பெறும்**
**கோடானு கோடி**
**கொடுப்பினும் தன்னுடைநாக்**
**கோடாமை கோடி பெறும்"**

இப்பாடலின் கருத்து இதுதான். அதாவது, நம்மை மதிக்காத ஒருவரை மதித்து அவரது வீட்டிற்கு சென்று அவரது வாயில் படியை கூட மிதிக்காமல் திரும்புவது கோடி பொன் பெற்றதற்கு சமமாகும்.

சாப்பிடுங்கள்! சாப்பிடுங்கள் என்று வாய் வார்த்தைகளாக சொல்பவர் சிலர்! வீட்டுக்கு சென்றால் சாப்பிடுங்கள் என்ற வார்த்தையை கூட சொல்லாதவர்கள் சிலர்! அப்படிப்பட்டவர்கள் வீடுகளில் சென்று அங்கு ஒருவாய் தண்ணீர் வாங்கி அருந்தாமல் திரும்புவது கோடி பொன் பெறுவதற்கு சமமாகும்! உள்ளன்பு இல்லாதவர்களின் வீடுகளில் உணவருந்தாமல் இருப்பது கோடி பொன்னைத் தரும்!

கோடி ரூபாயை கொட்டிக் கொடுத்தாவது பண்பில் சிறந்தவர்களின் நட்பினை பெற்றுக் கொள்வது கோடி பொன் பெறுவதற்கு சமமாகும். நற்பண்புகளை ஒருங்கே பெற்ற நல்லோரை துணையாகக் கொண்டால் எத்தகைய துன்பத்தில் இருந்தும் நம்மால் எளிதில் தப்பித்துக் கொள்ள முடியும்.

மேலும் கோடி ரூபாயை கொட்டிக் கொடுத்தாலும் தன்னுடைய நேர்மையிலும் நடுநிலையிலும் இருந்து தவறாமல் இருக்கும் நாக்கினை பெறுவது கோடி பொன் பெறுவதற்கு சமமாகும்! இவ்வாறாக நான்கே நான்கு கருத்துக்கள் மூலம் நான்கு கோடி பொன் பெறுவதற்கு சமமான கருத்துக்களை தம்முடைய ஒரே பாடல் மூலம் ஔவையார் விளக்கி கூறிவிட்டார்..!




சாதாரண ஒரு நிகழ்வு, ஒருவர் வாழ்க்கையில் எப்படிப்பட்ட மாற்றத்தைக் கொண்டு வரும் என்பதற்கு சிறந்த உதாரணம் இந்த புகைப்படம்.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஐந்து வயதான இந்த சிறுமிக்கு, தாய் மட்டுமே. அவளது அம்மா அவளை பாண் வாங்க கடைக்கு அனுப்புகிறார். பாண் வாங்கி வரும்போது, வரும் வழியில், ஒருவர் அந்தச் சிறுமியைப் புகைப்படம் எடுக்கிறார். ஒரு சில நாட்களில், அவர் அந்தப் புகைப்படத்தை சமூக ஊடகங்களில் பகிர்ந்த நிலையில், அது வைரலாகப் பரவி விடுகின்றது. இந்நிலையில், அந்நிறுவனம் அந்த சிறுமியை, பிராண்ட் தூதராக மாற்றுகிறது. அந்த சிறுமியின் புகைப்படம் இப்போது தென்னாபிரிக்கா முழுவதும் பாண் விளம்பரப் பலகைகளில் உள்ளது. இதற்கு ஈடாக, அந்த தாய்–மகள் இருவருக்கும் இரண்டு அறைகள் கொண்ட வீட்டைப் பெற்றுக் கொடுத்ததுடன், பட்டப்படிப்பு வரை சிறுமியின் கல்விச் செலவை நிறுவனம் ஏற்றுக்கொண்டது. வாழ்க்கையில் இப்படியும் நடக்குமா என்று எண்ண வைக்கின்றது இந்த சம்பவம். யாரோ ஒருவர் எடுத்த ஒரு புகைப்படம், ஒருவரின் வாழ்க்கையை ஒரேயடியாக மாற்றியுள்ளது.

## பிரபலங்களின் மறுபக்கம்

# மதுப்பழக்கத்தால் வாழ்க்கையிழந்த 'சின்னத்தம்பி' நடிகர்

சின்னத்தம்பி படத்தில் குஷ்புவின் இரண்டாவது அண்ணனாக நடித்தவர் தான் உதய பிரகாஷ். இவருடைய இயற்பெயர் மணிகண்டன். இவர் 1964ஆம் ஆண்டு ஊட்டியில் பிறந்தவர். இவர் ஒரு சிறந்த கால்பந்து வீரரும் கூட.

1990 ஆம் ஆண்டு நடிகை விஜயசாந்தி நடித்து வெளிவந்த தெலுங்கு படமான 'வைஜெயந்தி ஐபிஎஸ்' என்ற படத்தின் மூலம் தான் இவர் சினிமா உலகிற்கு அறிமுகமானார். சின்னத்தம்பி, வருஷம் 16, அன்புச்சங்கிலி, இதய வாசல் உள்ளிட்ட பல



படங்களில் நடித்திருந்தார்.

பின் பட வாய்ப்புகள் வந்த உடன் இவர் மதுவுக்கு அடிமையாகியுள்ளார். மது பழக்கத்தினால் இவர் படப்பிடிப்புகளுக்கு போகாமல் வீட்டிலேயே விழுந்து கிடப்பாராம். இதனால், படவாய்புகள் குறையத்தொடங்கின.

பின்னர் நடிகர் சரத்குமார், தனது 'திவான்' படத்தில் நடிக்க வாய்ப்பு கொடுத்திருக்கிறார். ஆனால், அதற்குப் பிறகும் இவருக்கு படத்தில் நடிக்க வாய்ப்புகள் வரவில்லை. இதனால் இவருக்கு நிறைய மன கஷ்டமும், பண கஷ்டமும் ஏற்பட்டது. பின் கடன் தொல்லைகள் அதிகம் ஆனது. கடன் அதிகமானதால் சென்னையை விட்டு வெளியேறினார்.

பின் தனது கிராமத்தில் ஒரு குடிசையில், ஒரு துறவியின் ஆதரவில் வாழ்ந்து வந்ததாகத் தெரியவந்தது. பின் கடன் தொல்லைகள் அதிகரத்துக் கொண்டே வந்துள்ளது. அதேசமயம், மதுப்பழக்கத்தால், இவருடைய கல்லீரல் கெட்டுப் போய் விட்டது. பின் ஆஸ்துமா நோயும் ஏற்பட்டுள்ளது. பின்னர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். ஆனால், மருத்துவமனையில் இருந்து வெளியேறிய அவர், நடிகர் சங்கம் அருகில் உள்ள வீதியில், சடலமாக மீட்கப்பட்டிருக்கின்றார்.




# பல்வகை வடிவ குடியிருப்புகள்

**உலகின் பல பகுதிகளிலும் பல்வேறு வடிவங்களில் அமைக்கப்பட்ட குடியிருப்புகள் காணப்படுகின்றன. அவற்றில் சிலவற்றை இங்கு பார்ப்போம்.**



பின்புறத்தில் மலையும் முன்புறத்தில் நதியும் இருக்கும் வகையில் அமைக்கப்படும் சிறந்த வீடுகள் ஹங்குல் (Hangul House) வீடு என்று அழைக்கப்படுகின்றன. கொரிய பாரம்பரிய பாணியில் கட்டப்படும் இவை ஹனோக் (Hanok) என்றும் அழைக்கப்படுகின்றன.

டியுனீசியாவில் (Tunisia) உள்ள 'மத்மாதா' (Matmata) எனப்படும் இந்த வீடுகளின் அசாதாரண வடிவம் வியப்புக்குரியது. 'ட்ரோக்லொடைட்' (Troglodyte) என்றும் அழைக்கப்படும் இவ்வீடுகள் குழிவடிவில் செதுக்கப்படுகின்றன.



தெற்கு அவுஸ்திரேலியாவிலுள்ள பாலைவனத்தின் மையப்பகுதியில் ஓபல் சுரங்க நகரம் என்று அழைக்கப்படும் 'கூபர் பெடி' (Coober Pedy) பட்டினத்தில் வாழும் அரைவாசிக்கும் மேற்பட்ட மக்கள் நிலத்தடி வீடுகளிலேயே வாழ்கின்றனர். கொளுத்தும் கோடை வெப்பம் மற்றும் உறைபனி காலத்தில் அவற்றின் தாக்கத்திலிருந்து விடுபடவே இவர்கள் இவ்வாறு வீடுகளை அமைக்கின்றனர்.



சாதாரணமாக வட்டவடிவில் அமைக்கப்படும் ஆபிரிக்க பாணியிலான பாரம்பரிய வீடுகள் ரொண்டேவல் (Rondavel) என்று அழைக்கப்படுகின்றன. தென் ஆபிரிக்க நாடுகளில் இவற்றைக் காணலாம்.



**கென்யாவில் நிலத்து வீடுகள் என்னும் பெயரிலான வீடுகள் (Land Homes Kenya) அமைக்கப்படுகின்றன. மாசாய் பழங்குடியினர் வசிக்கும் இவ்வீடுகள் சகதி, மாட்டுச்சாணம் மற்றும் குச்சிகள் என்பவற்றால் அமைக்கப்படுகின்றன.**



வாழை இலை வீடுகள் (Banana Leaf Houses) ருவாண்டாவில் சகதி, புல் மற்றும் வாழை இலையுடன் களிமண்ணைக் கலந்து ஓட்டு வீடுகள் அமைக்கப்படுகின்றன. பசுமையான மலைகள், பள்ளத்தாக்குகள் மற்றும் குகைகளில் மறைந்து வாழும் விலங்குகள் என்பவற்றை இங்கு காணலாம்.



எத்தியோப்பிய பாரம்பரிய (Ethiopian Traditional Houses) வீடுகள் என்று கூறப்படும் இவ்வீடுகள், வட்டவடிவில் ஈரமண், களிமண், மணல், வைக்கோல் மற்றும் விலங்குகளின் சாணம் என்பவற்றைக் கலந்து அமைக்கப்படுகின்றன. உலகில் அதிகமான கழுதைகள் வாழும் நாடு எத்தியோப்பியா என்பது குறிப்பிடத்தக்கது.





ஹைட்டியில் வண்ணமயமான சிறிய வீடுகள் (Haiti, Tiny, Colorful Home) அமைக்கப்படுகின்றன. நகரத்தைச் சுற்றியுள்ள மலைகளில் மிக அருகருகாக இவை அமைக்கப்படுகின்றன.

தென் அமெரிக்காவின் சிறிய நாடான ஈகுவடோரில் (Ecuador) கிராமப்புறங்களில் வீடுகள் கட்டுவதற்குப் பெரும்பாலும் பனை, சதுப்பு மண், மூங்கில் மண் போன்ற இயற்கைப் பொருட்களே பயன்படுத்தப்படுகின்றன.



மலைகள், பாலைவனங்கள், கடற்கரைகள் என்பவற்றுக்குப் பிரபல்யமான மெக்ஸிக் கோவில் பாரம்பரிய வீடுகள் (Mexico Traditional Houses) அமைக்கப்படுகின்றன. இவை களிமண், சேறு மற்றும் வைக்கோல் கலவையுடன் செங்கல்போன்று உருவாக்கி வீடுகள் அமைக்கப்படுகின்றன.





பங்களாதேஷ் ஒரு தாழ்வான நாடு. அங்கு அடிக்கடி வெள்ளப்பாதிப்பு ஏற்படுகின்றது. இதன் காரணமாக அங்கு மரத்துண்டுகள் தாங்கும் வகையில் அமைக்கப்படும் வீடுகள் 'ஸ்டில்ஸ்' வீடுகள் (Bangladesh Stilts Houses) என்று அழைக்கப்படுகின்றன.

# சீன நிலநடுக்கம் சொன்ன வாழ்க்கை தத்துவம்

1976ஆண்டு ஜூலை 28, புதன்கிழமை அதிகாலையில் சீனாவில் உள்ள ஒரு நகரில் நாய்கள், காணுமிடங்களிலெல்லாம் வெறித்தனமாக குரைக்கத் தொடங்கின. அமைதியான அந்தக் காலைப் பொழுதில் நாய்களின் சத்தம், அந்த நகரவாசிகளுக்கு ஒரு பெரும் தொல்லையாக இருந்தது.

ஏதோ நாய்களுக்கு பைத்தியம் பிடித்துவிட்டது என்று எண்ணிய பொலிஸார், அதற்காக நகர சபை ஒரு நடவடிக்கை எடுக்கும் வரை, உடனடியாக அங்கிருந்த சுமார் 90 ஆயிரம் பேரை, வீடுகளை விட்டும் அதிரடியாக வெளியேற்றினர்.

ஆனால், ஒரு நாள் காலை நேரத்தை குழப்பிய இந்த நாய்கள், தங்களை பெரும் உயிராபத்திலிருந்து காப்பாற்றும் என்று அந்த நகர மக்கள் கற்பனை கூட செய்திருக்க மாட்டார்கள்.

குடியிருப்பாளர்கள் வெளியேறிய சில மணி நேரங்களுக்குப் பிறகு அங்கு பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது நடந்தது அதிகாலை 03:42 மணியளவிலாகும்.

சீனா கண்ட மிகப் பெரிய நிலநடுக்கம் இந்த டாங்ஷாங் நிலநடுக்கமாகும். இந்த நிலநடுக்கத்தால், அந்நகரின் அனைத்து கட்டடங்களும் அழிந்து தரைமட்டமாகின. ஆனால், நாய்களால் தொல்லை என எண்ணி வெளியேற்றப்பட்ட, அந்த நகரத்தில் வசித்த 90 ஆயிரம் பேரின் உயிர்கள் காப்பாற்றப் பட்டன.

குரைக்கும் நாய்கள், ஒரு பேராபத்தை தடுக்கும் என்று அவர்கள் கனவில் கூட நினைத்திருக்க வில்லை. ஆகவே, நாம் பார்க்கும் துன்பங்களுக்குப் பின்னால் நாம் அறியாத பல நிகழ்வுகள் மறைந்திருக்கலாம். எல்லாவற்றுக்கும் பின்னால் கருணைப் பார்வை இருப்பது நமக்கு தெரியாமல் இருக்கலாம். பேராபத்துக்களை தடுக்க சிறு ஆபத்துக்கள் ஒரு காரணியாக இருக்கலாம் என்று உணர்த்தியது இந்த சம்பவம்.



# பெண்ணும் செருப்புகளும்

*ஒரு பெண்மணி செருப்பு கடைக்கு சென்று செருப்புகளை தேர்ந்தெடுக்க ஆரம்பித்தார்.*

*ஒன்று இரண்டு என்று கிட்டத்தட்ட கடையில் உள்ள 40, 50 ஜோடிகளை முயற்சித்துப் போட்டு, ஒரு வழியாக ஒரு ஜோடியை தேர்ந்தெடுத்து விட்டு கடைக்காரரிடம் மகிழ்ச்சியாக எனக்கு ஏற்ற அளவுள்ள செருப்பு கிடைத்துவிட்டது என்று கூறினார்.*

*"இதற்கு நான் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?" என்றார் பெண்மணி.*

*"அந்த செருப்பிற்கு நீங்கள் பணம் தரத் தேவையில்லை" என்றார் கடைக்காரர்.*

*"நான் பணம் கொடுத்தே தீருவேன்" என்றார் பெண்மணி.*

*"நீங்கள் தேர்ந்தெடுத்த செருப்பு நீங்கள் கடைக்கு வந்தபோது போட்டுக் கொண்டு வந்த செருப்பு" என்றார் கடைக்காரர்.*

***(என்றோ படித்து சிரித்தது)***



# மலைகளாக மாறிய மூன்று சகோதரிகளின் கண்ணீர்க்கதை

காதலில் தோல்வியுற்ற மூன்று சகோதரிகள் மலைகளாக மாறி இன்றும் காட்சியளிக்கின்றனர் என்றால் நம்ப முடிகிறதா? ஆமாம், அப்படி ஒரு நிகழ்வு பற்றி காலம் காலமாகப் பேசப்பட்டு வருகிறது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது,

அவுஸ்திரேலியாவின் நியூசவுத்வேல்ஸ் பகுதியில் ப்ளூ மவுண்டன் என்னும் மிகவும் பிரபல்யமான மலைப்பகுதியொன்று காணப்படுகின்றது. கட்டூம்பா என்னும் பட்டினத்துக்கு அருகில் உள்ள இந்த மலைப்பகுதியில் மூன்று மலைகள் வரிசையாகக் காணப்படுகின்றன. இந்த மலைகள்பற்றி ஒரு சோகமான கதை இருப்பதாகக் காலம் காலமாகக் கூறப்பட்டு வருகிறது.

இந்த மூன்று மலைகளும் மூன்று சகோதரிகளாம். கட்டூம்பா என்னும் ஆதிக்குடிகள் சமூகத்தைச் சேர்ந்த இவர்களின் பெயர்கள் மிஹ்னி, விம்லாஸ், குன்னேடு என்பனவாகும்.

மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து கொண்டிருந்த இந்த சகோதரிகளின் வாழ்வில் புயல் வீசத் தொடங்கியது. அதற்குக் காரணம் இவர்களின் உள்ளத்தில் ஏற்பட்ட காதல் உணர்வுகள்தான்.

இவர்கள் வாழ்ந்த பகுதிக்கு அண்டைய பகுதியில் நேப்பியன் என்னும் ஆதிக்குடிகள் இனம் ஒன்று வாழ்ந்தது. இந்த சமூகத்தைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் மீதே இந்த மூன்று சகோதரிகளுக்கும் காதல் ஏற்பட்டது.

காலப்போக்கில் இவர்களின் காதல் மலரத் தொடங்கியது. ஆனாலும் இவர்கள் திருமணம் செய்து கொள்ள முடியாத நிலையே ஏற்பட்டது. காரணம் இந்த இரண்டு சமூகங்களும் வெவ்வேறு இனங்கள் என்பதுதான். இந்த வேற்று இன திருமணத்திற்கு அந்த சமூகங்களின் சட்டங்கள் தடை விதித்தன. ஆனால், அந்த மூன்று சகோதரர்களும் இந்த சட்டங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. மூவரும் மூன்று சகோதரிகளையும் கடத்திக் கொண்டு வந்தாவது திருமணம் செய்து கொள்வது என்று துணிந்தனர். அதனால் இரண்டு சமூகங்களுக்கு இடையிலும் யுத்தம் மூண்டது.

இதனை அறிந்த சக்திமிக்க முனிவர் ஒருவர் யுத்தத்தில் மூன்று சகோதரிகளின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு உறுதி எடுத்து அவர்கள் மூவரையும் தனது சக்தியால் மலைகளாக உருவெடுக்கச் செய்தார். யுத்தம் முடிந்த பின்னர் மீண்டும் அவர்களை பழைய உருவத்துக்குக் கொண்டு வந்துவிடலாம், அதன் பின்னர் அவர்கள் திருமணம் செய்துகொண்டு மகிழ்ச்சியாக வாழலாம் என்ற நல்ல எண்ணத்திலேயே அவர் அந்த சகோதரிகளை மலைகளாக மாற்றினார். ஆனால், நடந்தது வேறு. யுத்தத்தில் அந்த முனிவரும் கொல்லப்பட்டுவிட்டார்.
அதனால் அந்த மூன்று சகோதரிகளும் மீண்டும் பழைய உருவைப்பெறும் வாய்ப்புப் பெற முடியாமல் போய்விட்டது.
அதனால் அந்த மூன்று சகோதரிகளும் அப்படியே இன்னும் மலைகளாகவே காட்சிய ளிக்கின்றனர் என்று இந்த ஊர்மக்கள் கூறுகின்றனர்.
இந்த மலைகளை த்ரீ சிஸ்டர்ஸ் (Three sisters) அதாவது, மூன்று சகோதரிகள் என்றே அழைக்கின்றனர்.



இது உண்மையில் நடந்ததா அல்லது கட்டுக் கதையா என்று உறுதியாகக் கூற முடியவில்லை. ஆனால், டொக்டர் மார்ட்டின் தோமஸ் என்னும் வல்லுனர் இது கட்டூம்பா சமூகத்தினர் தமது இருப்பை அடையாளப்படுத்திக் கொள் வதற்காக கற்பனையாக சிருஸ்டித்த கட்டுக்கதை என்று கூறுகின்றார்.

மூன்று மலைகள் உருவாகக் காரணம் மண்ணரிப்பினால் அங்கிருந்த மூன்று பாறைகள் மலைகளாக உருவாகியதாக இவர் கூறுகிறார். அது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை. ஆனால், அது எப்படி இருந்த போதிலும் இந்த மலைகளைப் பார்ப்பவர்கள் இனம் புரியாத ஒரு சோகத்துக்கு உள்ளாவதாகக் கூறுகிறார் கள்.

மனிதி

# உலகில் மருத்துவ பட்டம் பெற்ற முதல் பெண்மணி எலிசபெத் பிளக்வெல்

உலகில் மருத்துவப் பட்டம் பெற்ற முதல் பெண்மணியாக, எலிசபெத் பிளக்வெல் (Elizabeth Blackwell) என அறியப்படுகிறார். அதற்கு முன்னர் பல நாடுகளில் பெண்கள் மருத்துவராக இருந்தாலும் அவர்கள் அதை கல்வியாக பயின்று பட்டம் பெறவில்லை.

1821ஆம் ஆண்டு, பெப்ரவரி 3ஆம் திகதி இங்கிலாந்தில் உள்ள பிரிஸ்டலில், சாமுவேல் பிளக்வெல் மற்றும் ஹன்னா தம்பதியருக்கு பிறந்த ஒன்பது குழந்தைகளில், மூன்றாவது குழந்தை தான் எலிசபெத். அவரது உடன்பிறந்தவர்களில் எமிலி பிளக்வெல், அமெரிக்காவில் மருத்துவப் பட்டம் பெற்ற மூன்றாவது பெண் ஆவார்.

எலிஸபெத்தின் தந்தை சாமுவேல் பிளக்வெல் ஒரு சீனி சுத்திகரிப்பு ஆலையை நடத்தி வந்தார். சாமுவேல் தனது நான்கு மகன்களைப் போலவே தனது ஐந்து மகள்களையும் கல்வி பயில வைத்தார். வறுமையின் காரணமாக சாமுவேல் 1832இல் பிரிஸ்டலில் இருந்து நிவ்யோர்க்கிற்கு குடும்பத்தோடு குடிபெயர்ந்தார், பின்னர் 1838இல் சின்சினாட்டிக்கு குடிபெயர்ந்தனர். எலிசபெத்திற்கு 17 வயதாக இருந்தபோது அவரது தந்தை இறந்துபோனார்.

வருமானத்திற்காக எலிசபெத் ஹன்னா, மரியன் ஆகியோருடன் இணைந்து இளம் பெண்களுக்கான ஆங்கிலம் மற்றும் பிரெஞ்ச் மொழிகளுக்கான கல்வி நிலையம் ஒன்றைத் தொடங்கினர். பின்னர் எலிசபெத் மருத்துவ கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கத் தொடங்கினார்.

பாலின பாகுபாட்டினால் நிவ்யோர்க்கில் உள்ள ஜெனீவா மருத்துவக் கல்லூ ரியைத் தவிர, அவர் விண்ணப்பித்த மற்ற அனைத்து கல்லூரிகளிலும் நிராகரிக்கப்பட்டார். ஜெனிவா கல்லூ ரியில் ஆண் மாணவர்கள் எலிசபெத் படிக்க ஏதுவாக ஆதரவு வாக்களித்தனர். இவ்வாறு 1847இல் எலிசபெத் பிளக்வெல் அமெரிக்காவில் மருத்துவப் கல்லூ ரியில் சேர்ந்தார். ஜனவரி 23, 1849இல் மருத்துவப் பட்டமும் பெற்றார்.

ஏப்ரல் 1849இல், பட்டம் பெற்ற மூன்று மாதங்களுக்குப் பிறகு, அமெரிக்க மருத்துவ இதழில் அவர் எழுதிய 'டைபொய்ட் காய்ச்சல்' பற்றிய ஆய்வு கட்டுரை, முதல் முறையாக ஒரு பெண் மாணவியால் வெளியிடப்பட்ட மருத்துவக் கட்டுரையாகும். மருத்துவப் பயிற்சிக்காக பெரிஸ் சென்ற அவர், ஒரு பொது மகப்பேறு மருத்துவமனையில் பயின்றார். அப்போது ஒரு நோயாளியிடமிருந்து நோய்த்தொற்று ஏற்பட்டதால் ஒரு கண்ணில் பார்வையற்றவரானார்.



பின்னர் லண்டனுக்குச் சென்று, செயின்ட் பர்த்தலோமிவ் மருத்துவமனையில், புகழ்பெற்ற புளோரன்ஸ் நைட்டிங்கேல் உடன் பணிபுரிந்தார். நிவ்யோர்க்கிற்குத் திரும்பிய அவர், தன் சகோதரி எமிலியுடன் சேர்ந்து 1857இல் ஏழைப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக நிவ்யோர்க் மருத்துவ மனையைத் திறந்தார். முழுவதும் பெண்கள் பணிபுரிந்த உலகின் முதல் மருத்துவமனை இதுதான்.

பின்னர் மருத்துவ-மனையை மேம்படுத்தி பெண்கள் மருத்துவப் பயிற்சியை மேற்கொள்ளும் இடமாக மாற்றினார். பெண் பார்வையாளர்களுக்கு பெண் கல்வியின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தத் தொடங்கினார்.

இதற்கிடையே, அமெரிக்க உள்நாட்டுப் போரின் போது செவிலியர்களை ஒழுங்கமைப்பதன் மூலம் குறிப்பிடத்தக்க பங்கை எலிசபெத் கொண்டிருந்தார். மேலும், அவரது மருத்துவமனையானது பெண்களுக்கான மருத்துவ கல்லூரி திட்டத்தை உருவாக்கியது.

பெண்களுக்கு மருத்துவக் கல்வியை நிறுவ முயற்சிக்க எலிசபெத் பிரிட்டனுக்குச் சென்றார். ஜுலை 1869இல், அவர் பிரித்தானியாவுக்குப் பயணம் செய்தார். பலவித முயற்சிகளுக்கு பின் 1874ஆம் ஆண்டில், எலிசபெத் லண்டனில் ஒரு மகளிர் மருத்துவப் கல்லூரியை சோபியா ஜெக்ஸ்-பிளேக்குடன் நிறுவினார்.

வாழ் நாள் முழுக்க பல பெண்களை மருத்துவராக்கிய எலிசபெத் பிளக்வெல், 1910 மே 31 அன்று இங்கிலாந்தின் ஹேஸ்டிங்ஸில் விண்ணுலகம் எய்தினார். அந்த வகையில், உலகெங்கிலும் பெண் மருத்துவர்கள் உருவாக காரணமான எலிசபெத் பிளக்வெல், உலகம் வியந்த பெண்மணிகளுள் ஒருவராக இன்றும் போற்றப்படுகின்றார்.

# எப்படி அமையலாம் ஆடைத் தெரிவு...?



### ஒல்லியானவர்கள்

ஒல்லியாக இருக்கும் பெண்கள் ஆடைகளை தேர்வு செய்யும் போது பெரும்பாலும் பளிச்சென்று இருக்கும் நிறங்களை தேர்வு செய்வது நல்லது. கருப்பு நிற உடைகள் உங்களை மேலும் ஒல்லியானவர்களாக காட்டும் என்பதால் கருப்பு நிறத்தை தவிர்க்கவும். மேலும் நீங்கள், உடலை இறுக்கக்கூடிய ஆடைகளை தவிர்த்து தளர்வான ஆடைகளை அணிவது நல்லது. அதுபோல், அகல வாக்கில் கோடுகள் வைத்திருக்கும் ஆடைகளை அணிவது உங்களை மேலும் ஒல்லியாக காட்டாமல் சற்று பூசினால் போல காட்டும். உடைகளை தெரிவு செய்யும் போது உடைகளின் வகைகளைத் தெரிவு செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். தூய பருத்தி, ஜோர்ஜெட் வகையான ஆடைகள் உடலின் மெலிந்த தேகத்தை சற்று மேம்படுத்திக் காட்டும்.

மேலும், ஒல்லியாக இருக்கும் பெண்கள் பல்வேறு அடுக்குகளால் செய்யப்பட்ட ஆடைகளை அணிவது அவர்களின் தோற்றத்தை சிறப்பாக எடுத்துக் காட்டும். மேலும், அவர்கள் அணியும் ஆடைகள் எப்போதும் அதிகப்படியான வேலைப்பாடுகளை கொண்டிருப்பதாக இருந்தால் அது அவர்களது தோற்றத்தை இன்னும் மேம்படுத்தி காட்ட உதவும்.

### சற்று பருமனான பெண்கள்

சற்று பருமனாக இருக்கும் பெண்கள் எப்போதும் தங்களை ஒல்லியாக காட்டுவதற்காக சிந்தடிக், பொலிஸ்டர், கிரேப், ரேயான், பருத்தி போன்ற ஆடைகளைத் தெரிவு செய்வது, அவர்களின் தோற்றத்தை மேலும் பருமனாக காட்டாமல் உடல் அமைப்பை மெலிவாகக் காட்டும். மேலும் உடல் பருமனாக உள்ளவர்கள் முன்புறத்தில் அதிக வேலைபாடுடைய ஆடைகளை அணிவது பொருத்தமாக இருக்கும்.

அதேசமயம், உடல் பருமனாக உள்ள பெண்கள் எப்போதும் அணியும் ஆடைகளில் கையின் அளவு சற்று நீளமாக இருக்குமாறு அணிந்தால் மிகவும் நன்றாக இருக்கும். கைகளை குறைவாக வைத்து அணியும் போது அது உங்கள் உடலை மேலும், பருமனாகக் காட்டும். பெரும்பாலும் குர்த்தி வகைகளை அணியும்போது செங்குத்தாக கோடுகள் போட்ட அல்லது செங்குத்தானஅலங்காரங்களிலான உடைகளை அணிவது உங்களது உடல் பருமனை மேலும் அதிகரிக்காமல் காட்டும்.



### மிகவும் அதிக பருமன் கொண்டவர்கள்

அதிகப்படியான எடைகொண்ட பெண்கள், அணியும் போது இடையில் பெல்ட் வருவது போன்ற உடைகளை அணிந்தால் அது உங்களது தோற்றத்தை மிகவும் சிறப்பாக எடுத்துக் காட்டும். மேலும், உங்கள் ஆடைகளில் யு-லைன் மற்றும் நேரான கட் குர்த்திகளை அணிவது பொருத்தமாக இருக்கும்.

# பளபளப்பான கூந்தலுக்கு இயற்கை வழி கண்டிஷனர்



**தேவையான பொருட்கள்**

முட்டை- 3
ஒலிவ் எண்ணெய் - 1 தேக்கரண்டி
தேன் - 1 தேக்கரண்டி
வினாகிரி - 2 தேக்கரண்டி
எலுமிச்சை சாறு - கால் தேக்கரண்டி

**செய்முறை:**

இரண்டு அல்லது மூன்று முட்டைகளை உடைத்து அதில் வினாகிரி மற்றும் எலுமிச்சை சாறு சேர்த்து நன்றாக கலந்து எடுக்கவும். பிறகு அதில் ஒலிவ் எண்ணெய் மற்றும் தேன் சேர்க்கவும். இதை கிரைண்டரில் அரைத்து, தடிமனான பேஸ்ட் போல கலந்துகொள்ளவும்.

இதை கூந்தலின் மயிர்க்கால்கள் முதல் நுனி வரை தடவி விடவும். பிறகு 20 நிமிடங்கள் வரை வைத்திருந்து பிறக் கூந்தலை, ஷெம்போ கொண்டு அலசி எடுக்கவும்.

**குறிப்பு: முட்டை சிறந்த கண்டிஷனராக செயல்படுகிறது. ஒலிவ் எண்ணெய் கூந்தலை வலுவாக்க செய்கிறது. தேன் கூந்தலுக்கு ஈரப்பதம் அளிக்கிறது. முடி உதிர்தலை வினாகிரி தடுத்து நிறுத்துகிறது. இந்த கண்டிஷனரானது கூந்தலை வலுவாகவும், ஆரோக்கியமாகவும் வைக்க உதவுகிறது.**

# முகம் பொலிவு பெற எளியமுறை அழகு குறிப்புகள்.!





* சுத்தமான சந்தனத்தை பாதாம் எண்ணெய்யில் குழைத்து முகத்தில் பூசி, இந்த கலவை காய்ந்ததும் முகத்தை கழுவலாம். தக்காளியை நன்றாக பிசைந்து அதனோடு 4 அல்லது 5 துளிகள் எலுமிச்சை சாறு கலந்து முகம், கழுத்து பகுதி, கைகளில் பூசிக்கொள்ளலாம்.

* மஞ்சள் தூளை பசை போல் செய்து சருமத்தின் மேல் தடவ வேண்டும். உடனடி நிவாரணம் பெற தினமும் தொடர்ந்து இரண்டு முதல் மூன்று முறை செய்ய வேண்டும்.

* முகத்தை கழுவியபிறகு சிறிதளவு பாலை உள்ளங்கையில் எடுத்து முகத்தில் பூசவும். இவ்வாறு தொடர்ந்து 2-3 வாரங்கள் வரை செய்துவந்தால் உங்கள் சருமம் பொலிவடைந்திருப்பது கண்கூடாக தெரியும்.

* சிறிதளவு இளநீரை முகம், கழுத்து பகுதி, கைகளில் பூசிவந்தால் சரும நிறம் மாறும்.

* சீரகம் மற்றும் முள்ளங்கி ஆகியவற்றை தனித்தனியே தண்ணீரில் கொதிக்கவைத்து, கழுவினால் முகம் பிரகாசமாக தோன்றும்

* பப்பாளி, சரும ஆரோக்கியத்தை பேணுவதில் வல்லமை கொண்டது. கண்களின் கீழே ஏற்படும் வீக்கத்தையும், கரும்படலத்தையும் மட்டுமல்லாமல் கண்களின் கீழே உள்ள இரத்த நாளங்களையும் சரி செய்து தோலில் ஏற்படும் இரத்தப் போக்கை குணமாக்குகிறது. பப்பாளியை, கண்களின் கீழே உள்ள தோலில் தடவி நாம் அற்புத நன்மைகளைப் பெறலாம்.

* புதினா மற்றும் எலுமிச்சை சாற்றைக் கலந்து முகத்தில் தடவலாம். முட்டையின் வெள்ளை கருவை வாரம் இருமுறை முகத்தில் பூசிவந்தால் சரும நிறம் சிகப்பாக மாறுவதோடு மிருதுவாகவும் மாறும்.

# எழுத்து மொழியிலிருந்து பேச்சு மொழிக்கு கவிதையை கொண்டு சென்ற கவிஞர்கள்!

கவிதையை எழுத்து மொழியிலிருந்து விடுவித்து அன்றாடப் பேச்சு மொழிக்கு அருகாமையில் கொண்டு செல்ல முயன்ற கவிஞர்களை மூன்று வகையாகச் சொல்லலாம். ஆங்கிலக்கவி வால்ட் விட்மன், பிரெஞ்சுக் கவி சாள்ஸ் பாதலேர், ஸ்பானிஷ் கவி பாப்லோ நெருடா போன்றவர்களே அந்த



மூன்று வகையினராவர். இதில் வால்ட் விட்மன் என்ற கவிஞரை கவனத்திற் கொண்டால், ஓசை ஒழுங்கோடு எழுதப்படும் மரபுக் கவிதைகள் நடனம் ஆடுவது போல என்றால் இவரது பேச்சு மொழிக் கவிதைகள் நடப்பது போன்றவை என கூறலாம். 1855 இலிருந்து1892 வரை வால்ட் விட்மன் செய்த மொழிப் பரிசோதனைகளின் மூலமாக வசன கவிதை ( Free Verse) என்ற ஒன்றை அவர் தனது கவிதைகளில் முன்னிறுத்தினார்.

பிரெஞ்சுக் கவி மல்லார்மே என்ற கவிஞர் 1857 இல் பிரெஞ்சுக் கவிஞர் சாள்ஸ் பாதலேர் தொடங்கிய "குறியீட்டியல்" என்பதை அடுத்த தளத்துக்கு நகர்த்தியவர் என கூறலாம். இவர் கவிதை ஒரு பேச்சுதான் என்றாலும் இது வால்ட் விட்மன் ஒரு பெருங்கூட்டத்தை விளித்துப் பேசுவதைப் போன்றது அல்ல. நெரிசல் மிகுந்த மின்சார ரயிலில் படிக்கட்டில் தொங்கிக் கொண்டு போகிறபோது தனக்குத்தானே பேசிக் கொண்டு போவதை ஒத்தது.

இத்தகையவர்களின் கவிதைகளில் எழுத்து என்பது மூடிய நிலையில் செயல்படுகிறது. தனிப்பட்ட ஒவ்வொரு சொல்லும் பிறிதொன்றைப் பேசுவது மட்டுமல்லாது தன்னையே பேசிக் கொள்கிறது. குறியீடுகளின் கூட்டம் ஒருமுனையில் இருக்கையில் மற்றொரு முனையில் மொழி இருக்கிறது. இவை இரண்டிற்கும் இடையில் இருக்கும் வெளியில் பேச்சு நிகழ்கிறது.

மேலும், மூன்றாம் வகையைச் சேர்ந்த ஸ்பானிஷ் கவி பாப்லோ நெருடா என்ற கவிஞரை குறிப்பிடலாம். இவர் எந்தவித முன்கூட்டிய திட்டம் அற்ற நிலையில் , ஒன்றை சுட்டிக் காட்டுவது போல ஜாடை காட்டி அதைத் தெரிவிக்காமல் போய் விடுகிற தன்மை கொண்ட தன் கவிதைகள் மூலமாக 4 வகையான அனுபவங்களை முன் வைக்கிறார்.

1. இவரது காதல் வாழ்வு 2. ஆசியாவின் தூதராகப் பணியாற்றியபோது இவர் அனுபவித்த கொடுங்கனவுகளையும், மனச்சோர்வுகளையும் பேசும் கவிதைகள். 3. அன்றாட வாழ்வின் மிக நுட்பமான கவனிப்புகள் 4.மனித குலத்தின் தற்கால நிலை அதன் எதிர்காலக் கனவுகள்.

குறிப்பாக நெருடாவின் கவிதைகள் பரந்துபட்ட விஷயங்களைப் பேசினாலும் தனக்கென்று இருக்கிற ஒரு மையத்தை நோக்கி நகர்கிற ஒரு பேச்சை அவை முன்வைக்கின்றன என குறிப்பிட முடியும்.

**- இந்திரன் ராஜேந்திரன் -**




# பாடல்களில் அழகுற அமைந்த பிரிமொழிச் சிலேடை அணி

ஒரு வகையில் பொருள்தரும் தொடர்ச் சொல், வேறு வகையில் பிரித்து எழுதும்போது வேறு பொருள் தருமாயின் அது பிரிமொழிச் சிலேடை எனப்படும். பிரிமொழி சிலேடைக்கு காளமேகப் புலவர் பாடல் ஒன்றை பார்ப்போம் ..

பாம்புக்கும் எள்ளுக்கும் சிலேடை எடுத்துக்காட்டு:

----------------

ஆடிக் குடத்து அடையும்; ஆடும்போதே இரையும்;




டித்திறக்கின் முகம்காட்டும்; – ஓடி
மண்டைபற்றின் பரபரெனும் பாரில்
பிண்ணாக்குண்டாம் உற்றிடு
பாம்பு எள்ளெனவே ஓது

(பிண்ணாக்கு என்னும் சொல், பாம்பிற்கு ஆகுங்கால் "பிள் + நாக்கு" = பிண்ணாக்கு, பிளவுபட்ட நாக்கு என்றும், எள்ளுக்கு ஆகுங்கால் எள்ளுப் பிண்ணாக்கு என்றும் இருவேறு பொருள் தரும். மற்றச் சொற்கள் அப்படியே நேராக நின்று பாம்பிற்கும் எள்ளுக்கும் பொருந்துமாறு இரு வேறு பொருள் தரும்.)

**இப்பாடலின் பொருள்**

"பாம்பானது, படம் எடுத்து ஆடிக் குடத்தினுள் புகும்; படம் எடுத்து ஆடும்போதே சீத்து, சீத்து என ஓசை உண்டாக்கும்; குடத்தில் இட்டு மூடிய பின் மூடியைத் திறந்து பார்த்தால் தனது தலையை எடுத்துக் காட்டும்; அது ஓடி ஒருவர் தலையைத் தீண்டுமானால் அவர்க்குப் பரபர என்ற உணர்ச்சி உண்டாகும்; அதற்குப் பிளவுபட்ட நாக்கும் உண்டு."

அதேபோல் "எள்ளானது, செக்கில் ஆட்டப்பட்டுக் குடத்திலே அடைக்கப்படும்; செக்கில் ஆட்டும் போதே இரைச்சல் ஓசையை உண்டாக்கும்; குடத்தில் எண்ணெய்யை அசையாமல் வைத்து மூடித் திறந்து பார்த்தால் அது பார்ப்பவருடைய முகத்தைக் காட்டும்; எண்ணெய்யைத் தலையில் ஊற்றித் தேய்த்தால் குளிர்ச்சியான உணர்ச்சி உண்டாகும்; எண்ணெய் ஆட்டும் போது எள்ளுப் பிண்ணாக்கு உண்டாகும்." ஆதலால் இவ்வுலகில் பாம்பும் எள்ளும் சமம் என்று கூறுவாயாக.

அணிப் பொருத்தம். இது பிரிது மொழிதல் அணிக்கு உதாரணம் கண்ணதாசன் எழுதிய புகழ்பெற்ற அத்திக்காய் பாடல் அனைவருக்கும் தெரியும் அதில் அத்தனை வரிகளிலும் பிரிது மொழிகள் சிலேடை அணி வரும். அத்திக்காய்.... அத்திக்காயையும் குறிக்கும். அந்த திசையையும் குறிக்கும். உள்ளம் எல்லாம் மிளகாயோ என்பதில் உள்ளம் மிளகாயா என்றொரு பொருளும் உள்ளம் இளகாயோ என்ற ஒரு பொருளும் வருகிறது. தூதுவழங்காய் வெண்ணிலவே என் தூதுவளை இலையையும் தூது சொல் என்ற பொருளையும் தருகிறது.

வரிக்கு வரி பிரிமொழி சிலேடை வரும்படி கவிஞர் கண்ணதாசன் அமைத்திருப்பது ரசனைக்குரியதாகவே அமைந்திருக்கும்.

**- ஜெயதேவன் -**

# சங்க காலத்தின் இரண்டு விதமான வாழ்க்கை நிலையை உணர்த்துகின்ற 'சங்க இலக்கியம்'

சங்க இலக்கியம் எனப்படுவது சங்ககாலப் பகுதியில் எழுதப்பட்ட செவ்வியல் இலக்கியங்கள் ஆகும். சங்க இலக்கியம் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட வரை 473 புலவர்களால் எழுதப்பட்ட 2381 பாடல்களைக் கொண்டுள்ளது. இப்புலவர்களுள் பலதரப்பட்ட தொழில் நிலையில் உள்ளோரும் பெண்களும், நாடாளும் மன்னரும் உண்டு. சங்க இலக்கியங்கள் அக்காலகட்டத்தில் வாழ்ந்த தமிழர்களின்



அன்றாட வாழ்க்கை நிலைகளைப் படம்பிடித்துக் காட்டுவதாய் உள்ளன. சங்ககால மக்களின் வாழ்க்கை நிலை இரண்டு பிரிவுகளாக சங்க இலக்கியங்கள் வழி அறியலாம். இல்லற வாழ்க்கை பற்றிய செய்திகளை அகம் என்றும், கொடை, போர், வீரம், ஆட்சி, முதலியவற்றை பற்றிய செய்திகளை புறம் என்றும் சங்க இலக்கியங்கள் பிரித்துக் காட்டுகின்றன.

19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களான சி.வை. தாமோதரம்பிள்ளை, உ.வே. சாமிநாத ஐயர் ஆகியோரின் முயற்சியினால் சங்க இலக்கியங்கள் அச்சுருப் பெற்றன. எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் தான் சங்க இலக்கிய நூல்கள். இவை பதினெண்மேற்கணக்கு நூல்கள் எனவும்; சங்கமருவிய நூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எனவும் பெரும்பிரிவுகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு;

**எட்டுத்தொகை நூல்கள் (பதினெண் மேற்கணக்கு)**

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு

**பத்துப்பாட்டு நூல்கள்**

பத்துப்பாட்டு நூல்கள், திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு , முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, பட்டினப் பாலை, மலைபடுகடாம்

**பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்**

திருக்குறள், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, களவழி நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, நாலடியார்.

# நவீன தமிழிலக்கியம் என குறிப்பது எதனை?

நவீன காலகட்டத்தில் தமிழில் உருவான இலக்கியம் நவீன தமிழிலக்கியம் எனப்படுகின்றது. பொதுவாக அச்சுத்தொழில்நுட்பம், உரைநடை ஆகியவை உருவான பின்னர் எழுதப்படும் இலக்கியம் நவீன இலக்கியம் எனப்படுகிறது. **Modern Literature** என்னும் ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கமாக புழக்கத்திற்கு வந்த சொல் இது. பொதுவாக இது காலகட்டத்தை குறிப்பதானாலும் குறிப்பிடத்தக்க தனி இயல்புகளையும் இலக்கணங்களையும் கொண்டுள்ளது.



நவீன இலக்கியம் நவீன காலகட்டத்தின் சில அடிப்படை இயல்புகளில் இருந்து உருவான இலக்கிய எழுத்துமுறை. நவீன காலகட்டம் என்பது நவீனத் தொழில்நுட்பத்தின் விளைவாக உருவானது. நவீன தொழில்நுட்பம் மனித சமுதாயத்திற்கு கீழ்காணப்படும் நலன்களை அளித்தது;

பெருந்தொழில் உற்பத்தி முறை, நவீனப் போக்குவரத்து, நவீனச் செய்தித்தொடர்பு, அச்சுத்தொழில்நுட்பம்

இந்த தொழில்நுட்பங்களால் உலகளாவிய அளவில் மனித சமூக அமைப்பில் மாற்றங்கள் உருவாயின. இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு பெருந்தொழில்கள் உருவானபோது கைத்தொழில்களைச் சார்ந்து அமைக்கப்பட்டிருந்த சமூக அமைப்பு உடைந்தது. ஆலைத் தொழிலாளர்கள், பொதுத்தொழிலாளர்கள் என்னும் புதிய வகை திறனாளர் தோன்றினர். குடிமரபாக தொழில்களைச் செய்யும் முறை இல்லாமலாகியது. கிராமங்களைச் சார்ந்த வாழ்க்கைமுறையும் மாறத்தொடங்கியது.

பெருந்தொழில்களின் விளைவாக நவீன போக்குவரத்தும் நவீனச் செய்தித் தொடர்பும் உருவாயின. மக்கள் விரைவாக பயணம்செய்யவும், செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ளவும் தொடங்கியபோது சிறுசிறு சமூகவட்டங்களாக வாழ்ந்த வாழ்க்கைமுறை மறைந்தது. அச்சமூக வட்டங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து பொதுச்சமூகம் உருவாகியது. அது செய்தித்தொடர்பால் ஒருங்கு திரட்டப்பட்டது.

அந்த பொதுச் சமூகத்தில் பொதுக்கல்விமுறை உருவாகி வந்தது. முன்பு ஒவ்வொருவருக்கும் அவரவர் குடித்தொழில் சார்ந்த கல்வியே அளிக்கப்பட்டது. நவீனச் சமூகத்தில் அனைவருக்கும் சமமான, ஒரே கல்வி அளிக்கப்பட்டது. பொதுக்கல்வியின் விளைவாக பொதுவான இயல்பு கொண்ட குடிமக்கள் உருவானார்கள். பொதுக்கல்வி கற்ற பொதுச்சமூகம் உருவானபோது அவர்களை நோக்கி எழுதப்படும் இலக்கியம் உருவானது. அதுவே நவீன இலக்கியம் என அழைக்கப்படுகிறது.




தெரிந்து கொள்வோம்

# நாமக்கல் கவிஞர் வெ.ராமலிங்கம் பிள்ளை

**(19.10.1888 - 24.08.1972)**

நாமக்கல் கவிஞர் வெ.ராமலிங்கம் பிள்ளை அகிம்சா வழியிலும் கவிதைத் துறையிலும் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தவர் ஆவார். வரலாறு, புதினங்கள், இசைபுதினங்கள், கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள், மொழிபெயர்ப்புகள் என படைப்புகளால் பைந்தமிழை வளர்த்தவர். தமிழக அரசின் முதல் அரசவை கவிஞராகவும் இருந்தவர். பத்மபூஷண் (தாமரையணி) விருது பெற்ற காந்தியக் கவிஞரான இவர் சாகித்திய அகடமியில் தமிழ்ப் பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர். "கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" போன்ற தேசபக்திப் பாடல்களைப்பாடி தேசியத்தையும், காந்தியத்தையும் போற்றியவர். பாலா கங்காதர திலகர் போன்றோரின் தீவிரவாதத்தால் ஈர்க்கப்பட்ட இவர் மகாத்மா காந்தியின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட பின் அறப் போராட்டத்தால் மட்டுமே விடுதலையைப் பெறமுடியும் என்ற முடிவுக்கு வந்தவர். இவரது கவிதைகள் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றியும் அகிம்சை பற்றியும் இருந்ததால் இவர் காந்தியக் கவிஞர் என அழைக்கப்படுகிறார்.

**நாமக்கல் கவிஞரின் புகழ் பெற்ற மேற்கோள்கள் :**

"கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது"

"தமிழன் என்றோர் இனமுன்று தனியே அதற்கோர் குணமுண்டு", "தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா", "கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்" போன்ற பாடல்களை பாடி இன்றுவரை மக்கள் மனதில் நீங்கா இடத்தை பெற்றுள்ளார். இவரின் மலைக்கள்ளன் என்ற நாவல் எம் ஜி ஆர் நடித்து "மலைக்கள்ளன்" என்ற பெயரில திரைப்படமாக வெளிவந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஒருவன் மின்மினி

அன்பு தம்பி, தங்கையரே, இது உங்களுக்கான பக்கம். இதில் உங்கள் சித்திரங்கள், ஆக்கங்கள், பிறந்தநாள் வாழ்த்துகள், உங்கள் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் இப்பகுதி பற்றிய உங்கள் கருத்துகளை நீங்கள் எங்களுடன் வட்ஸப் அல்லது தபால் மூலம் பகிர்ந்துகொள்ளலாம். அவை, ஒருவன் மின்மினி பக்கத்தில் வெளியாகும்.

ஆசிரியர் பீடம், பெல்லாட்ரிக்ஸ் கட்டிடம், 2ஆம் மாடி, டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு – 09 0740162534



## குறளும் பொருளும்

**அதிகாரம் 03: நீத்தார் பெருமை**

**குறள் 29** : குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்தல் அரிது

**பொருள்** : குணக்குன்றுகளான பெரியவர்கள் கோபம் கொண்டால் அந்தக் கோபம் அவர்கள் உள்ளத்தில் ஒரு கணம் கூட நிலைத்து நிற்காது.

**குறள் 30** : அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்

**பொருள்** : அனைத்து உயிர்களிடத்திலும் அன்புகொண்டு அருள் பொழியும் சான்றோர் எவராயினும் அவர் அந்தணர் எனப்படுவார்.

# எல்லாம் இறைவன் செயல்



ஒரு ஊரில் அருணாச்சலம் என்பவன் வாழ்ந்து வந்தான். இவன் மிகுந்த இறை பக்தி கொண்டவன். வாழ்க்கையில் இன்பமோ துன்பமோ எது நடந்தாலும் எல்லாம் இறைவன் செயல் என்று சொல்வான்.

இதனால் எதை பற்றியும் கவலைப்படமாட்டான். இறைவன் அருள் இன்றி ஒரு அணுவும் அசையாது என்பது இவனுடைய கொள்கை. அதே ஊரில் தங்கையா என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் அருணாச்சலத்திற்கு நேர் எதிர்.

கடவுளே இல்லை என்று சொல்லும் கொள்கையுடையவன். வசதிக்கு குறைவில்லை. எனவே, அருணாச்சலத்தை பார்க்கும் போதெல்லாம் மிகவும் கிண்டல் செய்வான். காரணம் அருணாச்சலம் ஏழை.

“நீ நம்பி இருக்கிற கடவுள் உன்னை மட்டும் ஏழையாக வைத்துவிட்டு என்னை மட்டும் பணக்காரனாக படைத்திருக்கிறான் பார்த்தாயா?” இப்படியெல்லாம் பேசி கிண்டல் செய்வான்.

அதற்கு அருணாச்சலம் எல்லாத்துக்கும் ஒரு காரணம் இருக்கும். அதை இறைவனை தவிர யார் அறிய முடியும் என்று சொல்வான். இப்படியாக தங்கையா கிண்டல் செய்வதும் அருணாச்சலம் பதில் சொல்வதுமாக இருந்தான்.

ஒரு நாள் உச்சி வெயில் மண்டையை பிளந்தது. அப்போது அந்த வழியாக குடை பிடித்து கொண்டு வந்து கொண்டிருந்தான் தங்கையா. குடை வாங்க வசதியில்லாத அருணாச்சலம் வெயிலில் வேர்வை வழிந்தோட வந்து கொண்டிருந்தான். அவனை கண்டதும் அருணாச்சலத்திற்கு ஏக சந்தோஷம்.

வழக்கம் போல் அருணாச்சலத்தை வம்புக்கு இழுத்தான். “என்ன அருணாச்சலம் வெயிலில் வேர்க்க விறுவிறுக்க எங்க போயிட்டு வர்ற? எல்லாம் கடவுள் செயல் என்று சொல்லும் உனக்கு ஒரு குடை கொடுக்க வேண்டும் என்று அந்த கடவுளுக்கு தெரியாதா! என்னய்யா சாமி?” என்று நக்கல் செய்தான்.

வெயில் கொடுமை ஒரு பக்கம் அவனது தொடர் தொல்லை ஒரு பக்கம் சேர்ந்து கொண்டு அருணாச்சலத்தை எரிச்சல் படுத்தியது.

“அந்த கடவுளின் கருணை இல்லையென்றால் உன் கையில் குடை இருந்தாலும் நீ அதை பிடித்து செல்ல முடியாது. அதை கையில் வைத்து கொண்டு தலை காய ஓடுவாய் என்பதை மட்டும் மறந்துவிடாதே. இறைவனது கருணையை எப்போதும் கிண்டல் செய்யாதே” என்று கூறிவிட்டு வேகமாக நடந்தான்.

பெரிய தத்துவம் சொல்றான் என்று சிரித்து கொண்டே நடந்தான் தங்கையா. சிறிது தூரம் கூட நடந்திருக்கமாட்டான். அதற்குள் வெறி நாய் ஒன்று அவனை துரத்த ஆரம்பித்தது. உயிர் பயத்தில் ஓட்டம் பிடித்தான் தங்கையா. நாயோ பயங்கரமாக துரத்தியது.

குடையை பிடித்து கொண்டு ஓடுவதற்கு சிரமமாக இருந்தது. எனவே, குடையை மடக்கி கையில் வைத்து கொண்டு ஓட்டமாக ஓடி உயிர் தப்பிப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது.

அப்பொழுதுதான் அவன் மனதில் அருணாச்சலம் சொல்லிவிட்டு சென்ற வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. கடவுளின் கருணை இல்லாவிட்டால் கையில் குடை இருந்தாலும் பிடிக்கமுடியாது என்பதை உணர்ந்தான். அவனை அறியாமல் ஒருவித பயம் அவனை ஆட்கொண்டது. அன்றிலிருந்து கடவுளின் அருளை நம்ப ஆரம்பித்தான் தங்கையா.



# தெரியுமா?



*வயதாகும் போது, நம் தோலில் சுருக்கம் விழும். இது எப்படி தெரியுமா? நமது தோலின் அனைத்துப் பகுதிகளிலும் இலாஸ்டிக் போன்ற படலம் படர்ந்திருக்கிறது. இது தோல் விரிவடையும்போது (உதாரணமாக, சிரிக்கும்போது கன்னத்தில் தோல் விரிவடைவதுபோல்) தோலிலுள்ள இலாஸ்டிக் பயன்பாட்டிற்கு வந்து பின்பு பழைய நிலைக்கு மாறுகிறது. நமது ஆடைகளிலுள்ள இலாஸ்டிக் போன்று உள்ளதே தோலின் அமைப்பு. இதைப் போலவே நமது உடலிலுள்ள செல் அதன் செயல்பாட்டை முடித்த வுடன், இறந்து போகாமல் அது 3,4 செல்களாகப் பிரிந்து மீண்டும் செயல்படத் தொடங்குகிறது. இதுவே செல்லின் இயல்பு.*

*இந்நிலையில், வயது முதிர்வடையும்போது தோல் இலாஸ்டிக் தன்மையை இழக்கிறது. அதே நேரத்தில் செல்களும் செயல்படாமல் போகின்றன. ஆகவே, விரிவடைந்த தசைகள் திரும்பப் பழைய நிலைக்கு வர மறுக்கவே தோலில் சுருக்கங்கள் ஏற்படுகின்றன.*






எம்.சுலைமான், தரம் 04, காத்தான்குடி



என்.ஸ்மித் பெனின், கொலன்னாவ



“மகிழ்ச்சி என்ற உணர்ச்சி இல்லாவிட்டால் வாழ்க்கை சுமக்க முடியாத பெரிய சுமையாகிவிடும்”
– ஜோர்ஜ் பெர்னார்ட் ஷோ (George Bernard Shaw)

இவர் ஒரு ஐரிய நாடக ஆசிரியர், விமர்சகர், மதக் கோட்பாடுகளுக்கு எதிரானவர் மற்றும் அரசியல் ஆர்வலர் ஆவார். இவரது தாக்கம் மேற்கத்திய நாடகம், கலாசாரம் மற்றும் அரசியலில் 1880ஆம் ஆண்டில் இருந்து தற்போது வரை நீடிக்கிறது. ‘மேன் எண்ட் சூப்பர் மேன்’ (1902), ‘பிக்மேலியன்’ (1913) மற்றும் ‘செயிண்ட் ஜோன்’ (1923) போன்ற பரவலாக அறியப்பட்ட படைப்புகள் உட்பட அறுபதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார். சமகால நிகழ்வுகளை கிண்டல் செய்யும் விதம் மற்றும் வரலாற்று கருத்துருவகம் செய்தல் ஆகியவற்றில் அவரது காலத்தில் சிறந்து விளங்கிய இவருக்கு, 1925இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# எப்படி எப்படி?



**நா**ய் தன் உடலில் காயம் ஏற்பட்டால், அதன் எச்சிலைக் கொண்டே சரி செய்து கொள்ளும். இது எப்படி?

நாய் மட்டுமல்ல, எல்லா விலங்குகளுக்கும் இந்தப் பண்பு உண்டு. உடலில் காயம் ஏற்பட்டால், அது தன் எச்சிலைக் கொண்டே சரி செய்து கொள்ளும். மனிதன் உட்பட உமிழ்நீர்ச் சுரப்பியில் ‘லைசோசைம்’ உள்ளது. இது பக்டீரியாக்களை அழிக்கவல்லது. நாய் தன் எச்சிலைக் கொண்டு தடவும்போது காயத்தின் மீது பக்டீரியா போன்ற நுண்கிருமிகள் நுழையாதபடி காத்துக் கொள்கிறது. இது நாயின் சுய வைத்தியமாகும். இதனால், காயமும் விரைவில் குணமாகும்.

# நாயகர்கள் நாட்களிலிருந்து

## கனவை நனவாக்கிய தலைவர்

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோன் எஃப் கென்னடி, வெள்ளை மாளிகையில் நாள் தோறும் தன்னைக் காணவரும் பார்வையாளர்களுடன் சில நேரம் செலவிடுவார். அப்படி ஒருநாள், அவரைக்காண பாடசாலை மாணவர்கள் சிலர் காத்திருந்தனர்.

அவர்களைக் கண்ட ஜனாதிபதி, பளிச்சென்ற புன்னகையுடன் காணப்பட்ட ஒரு மாணவனின் கன்னத்தில் தட்டிக் கொடுத்து, “உன் எதிர்கால இலட்சியம் என்ன?” என்று கேட்டார்.



உடனே அச்சிறுவன், “ஐயா, இன்று நீங்கள் இருக்கும் இடத்தில் நாளை நான் இருக்க வேண்டும். இதுதான் என் இலட்சியம்” என்றான். கென்னடி, தன் விழியினை மேலே உயர்த்தி நல்லது என்று சிறுவனை வாழ்த்தி அவ்விடத்தைவிட்டு நகர்ந்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாவதுதான் தன் இலட்சியம் என்று கூறிய அச்சிறுவன் யார் தெரியுமா? பின்னாளில் அமெரிக்காவின் புகழ்பெற்ற ஜனாதிபதிகளில் ஒருவராக விளங்கிய பில் கிளின்டன். ஒருவரது எண்ணம் வெறும் கற்பனையாகவோ, ஆசையாகவோ இருந்தால் மட்டும் போதாது, அதனை அடையும்வரை மிக உறுதியாகச் செயல்பட வேண்டும். அப்படி, உறுதியாகச் செயல்பட்டு, ஜனாதிபதியானவரே கிளின்டன்.



என். ஸ்டீவர்ட், க்ரீன் ப்ரிட்ஜ் இன்டர்நெஷனல், கொலன்னாவ



எஸ்.யாஷிகா, தரம் 5, ஹட்டன்.

## புள்ளிகளை இணைத்து உருவத்தை கண்டுபிடியுங்கள்



# நிறம் தீட்டுங்கள்





கே.கிருஷிகா, தரம் 06, மன்னார்

# விட்டமின் ‘டி’ நம்பிக்கையை அதிகரிக்கும்




சூரிய ஒளி விட்டமின் ‘டி’யின் முக்கிய ஆதாரமாகும். இது நம் உடலில் ஊட்டச்சத்து மற்றும் ஹோர்மோன் ஆகிய இரண்டிலும் செயல்படுகிறது. எலும்புகள் மற்றும் பற்களுக்குத் தேவையான கல்சியம் மற்றும் பொஸ்பரஸை உறிஞ்சுவதற்கு விட்டமின் ‘டி’ உடலில் அவசியம். நோயெதிர்ப்பு செயல்பாடு, தசை ஆரோக்கியம், வீக்கம் மற்றும் மனநிலையை பராமரிப்பதிலும் இது முக்கியப் பங்கு வகிக்கின்றது.

எலும்புகளில் வலி, குறிப்பாக கழுத்து, இடுப்பு, முழங்கால் மற்றும் தசை பலவீனம் இவையெல்லாம் இருந்தால் அதை ‘ஓஸ்டோமலாசியா’ (Osteomalacia) எனும் உடல் நலக் குறைவு என்கிறார்கள். இது விட்டமின் ‘டி’ குறைபாட்டால் ஏற்படும் நோய். இதனை வராமல் தடுக்க தினமும் 100 மி.கி. விட்டமின் ‘டி’ தேவையாம்.

ஆகவே, சூரிய ஒளி உடலில் அரை மணி நேரம் படுவதன் மூலம் இத்தகைய சிறப்புவாய்ந்த விட்டமினை இலகுவாக பெற்றுக்கொள்ளலாம் என, அமெரிக்க ஹென்றி ஃபோர்ட் மருத்துவ அமைப்பின் எலும்பு சிகிச்சை பிரிவு நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள். மேலும், பெண்களின் உடல் பருமன் பிரச்சினைகள் அதிகரித்து வருவதற்குக் காரணம் விட்டமின் ‘டி’ பற்றாக்குறையே என்பதை, பிரிட்டிஷ் ‘மெடிக்கல் ஜேர்னல்’ ஆய்வில் கண்டறிந்துள்ளனர். பெண்கள் வெளியே வருவதில் காட்டும் ஆர்வமின்மைதான் இதற்கு முக்கியக் காரணம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதனைத் தவிர்க்க தினமும் 15 முதல் 20 நிமிடங்கள் காலை 10 மணிக்குள் வெயிலில் நின்றாலே போதுமாம்.

அதேசமயம், விட்டமின் ‘டி’யானது, உடல் பருமன் பிரச்சினைகள் மட்டுமல்லாமல், எலும்பு மெலிவு, ஆஸ்துமா, முடக்கு வாதம் போன்ற பிரச்சினைகளிலிருந்தும் தீர்வு தருகின்றது எனவும், விட்டமின் ‘டி’யை நேரடியாக சூரிய ஒளி மூலம் அல்லது உணவுகள் அல்லது வில்லைகள் வடிவிலோ தவறாமல் எடுத்துக் கொள்கின்றவர்களுக்கு சளி, புளூ காய்ச்சல் தாக்கும் அபாயம் குறைவு என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனா.

மேலும், விட்டமின் ‘டி’ நுரையீரல் சம்பந்தமான நோய்களிலிருந்தும் நம்மை பாதுகாக்கிறது என்கிறார்கள் பெரிஸ் நகரில் உள்ள குயின்ஸ் மேரி பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள். அத்துடன், விட்டமின் ‘டி’ குறைவாகக் கிடைக்கும் மழைக்காலங்களில் மற்றும் குளிர்காலத்தில்தான் நுரையீரல் சம்பந்தமான நோய்களும், புளூ காய்ச்சல், சளி, இருமல் போன்ற பிரச்சினைகள் வருகின்றன என்பதற்கு இதுவே உதாரணம் என்கிறார்கள். நாட்பட்ட ஆஸ்துமா மற்றும் நிமோனியா போன்றவற்றிற்கும் விட்டமின் ‘டி’ சத்து நல்ல நிவாரணம் தருகிறது என்றும் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிலையில், வாழ்க்கையில் கவலையைப் போக்கி நம்பிக்கையை அதிகரிக்க விட்டமின் ‘டி’ சத்து உதவியாக இருக்கிறது என்றும் ஆய்வின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. வயதானவர்கள் தனிமையின் காரணமாக மிகவும் கவலையுடன் இருப்பார்கள். தற்காலத்தில் இளைஞர்களும் பல்வேறு



பிரச்சினைகளால் கவலையுடன் இருக்கிறார்கள். வாழ்க்கையை வேண்டா வெறுப்புடன் கடப்பவர்கள் என இவர்களை ஆய்வு செய்ததில் அவர்களின் இரத்தத்தில் விட்டமின் ‘டி’ சத்து மிகவும் குறைவாக இருப்பது கண்டறியப்பட்டது. அவர்களுக்கு விட்டமின் ‘டி’ வில்லைகளை எடுத்துக்கொள்ள சொன்னபோது அவர்களுக்கு வாழ்கையில் நம்பிக்கை வந்தது என, மேற்குறித்த ஆய்வில் தெரிய வந்துள்ளது.

மேலும், இதுபோன்ற நபர்கள் தினமும் 20 நிமிடங்கள் நேரடி சூரிய ஒளியில் இருந்தபோது அவர்களுக்கு வாழ்க்கையில் ஒரு நம்பிக்கை பிறந்தது எனவும், குறித்த ஆய்வை மேற்கொண்ட ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, விட்டமின் ‘டி’ நோயெதிர்ப்பு மண்டலத்தை ஆதரிக்கிறது. ஈறு நோய் அல்லது புண்கள் போன்ற வாய்வழி தொற்றுகளை எதிர்த்துப் போராட உடலுக்கு உதவுகிறது. ஆரோக்கியமான நோயெதிர்ப்பு அமைப்பு பல்லுறுப்பு நோய் அபாயத்தைக் குறைக்கிறது. விட்டமின் ‘டி’ குறைபாடுடைய தாய்மார்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் உயர் இரத்த அழுத்தக் குறைபாடுடன் பிறப்பதாகவும் ஆய்வில் கண்டறிந்துள்ளனமை குறிப்பிடத்தக்கது.

# ஆபத்தாகும் வெங்காயத்தின் கருப்பு பூஞ்சை படலம்



நாம் அன்றாட சமையலில் உபயோகிக்கும் காய்கறிகளில் ஒன்று வெங்காயம். நமது உணவின் சுவையை அதிகரிப்பதில் வெங்காயத்திற்கு முக்கிய பங்கிருக்கின்றது. வெங்காயம் இல்லாத உணவு சுவையாக இருக்காது. உணவின் சுவையை அதிகரிப்பதில் வெங்காயம் பல ஆரோக்கிய நன்மைகள் கொண்டிருக்கின்றது.

வெங்காயத்தில் பல வகைகள் உள்ளன. மேலும், இதில், பொட்டாசியம், கார்போஹைட்ரேட், சோடியம், விட்டமின் ‘சி’, ‘பி’ மற்றும் ‘டி’, கல்சியம், மெக்னீசியம் மற்றும் இரும்புச்சத்து போன்ற சத்துகள் அடங்கியுள்ளன. இந்த ஊட்டச்சத்துக்கள் செரிமான மண்டலத்தை சீராக்க உதவுகிறது. மேலும், உடலுக்குத் தேவையான நோயெதிர்ப்பு சக்தியையும் வழங்குகிறது.

குறிப்பாக, வெங்காயத்தை தேனில் ஊறவைத்து சாப்பிட்டால் உடலுக்கு பலவித ஆரோக்கிய நன்மைகள் கிடைக்கும். அதேசமயம், உடலில் படிந்து கிடக்கும் தேவையற்ற கொழுப்புகளை கரைக்க, தினமும் ஒரு பச்சை வெங்காயத்தை சாப்பிட்டு வரலாம்.

இப்படி பல ஆரோக்கிய நன்மைகளை வழங்கும் வெங்காயத்தில் சில ஆபத்துகளும் நிறைந்திருக்கின்றன. அதாவது, ஒரு சில வெங்காயத்தை உரிக்கும் பொழுது, அதன் மேல் ஒரு கருப்பு படலம் பரவி இருப்பதை காணலாம். சிலர் அதை சுத்தம் செய்யாமல் வெட்டி சமையலில் சேர்ப்பார்கள். ஆனால், இது முற்றிலும் தவறான பழக்கம்.

வெங்காயத்தில் காணப்படும் இந்த கருப்பு படலம் நமது உடல் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்க கூடியவையாகும். இந்த வெங்காயத்தை சாப்பிட்டால் பூஞ்சை நோயான ‘மியூகோர்மைகோசிஸ்’ ஏற்படக் கூடும். இது நச்சுத்தன்மை வாய்ந்த ஒரு பூஞ்சையாகும். ஆகவே, வெங்காயத்தின் மேல் இந்த கருப்பு புள்ளிகள் தென்பட்டால் அதை நன்கு சுத்தம் செய்துவிட்டு சமையலுக்கு பயன்படுத்த வேண்டும். அதுவே வெங்காயத்திற்குள் இதுபோன்று கருப்பு பூஞ்சை தென்பட்டால் அதை பயன்படுத்துவதை தவிரக்க வேண்டும்.

கருப்பு பூஞ்சை படர்ந்த வெங்காயத்தை உட்கொள்வதால் குமட்டல், தலைவலி, வாந்தி, வயிற்று வலி, வயிற்றுப்போக்கு போன்ற பாதிப்புகள் ஏற்படக்கூடும் என்பது குறிப்பிடத்தக்கது.

வயிற்றில் குழந்தை வளர வளர, குடல் ஒரு பக்கம் தள்ளும். அப்போது அதிகமாக சாப்பிட முடியாது. சீக்கிரமும் பசிக்காது. அந்த நேரங்களில் ஜூஸ், முளை கட்டிய தானியங்கள் போன்றவற்றை, பல வேளைகளாகப் பிரித்துச் சாப்பிட வேண்டும்.





குழந்தைகள் விளையாடச் செல்வதற்கு முன்பு நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். விளையாடும்போது வியர்வையாக வெளியேறும் நீரை, அது ஈடு செய்யும்.

அதிக நாட்கள் உணவை ஃப்ரிட்ஜில் வைத்து சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். அப்படி வைக்கப்பட்ட உணவுகளில் சத்துக்கள் குறைந்து விடுவதோடு, உடல் ஆரோக்கியத்துக்கும் தீங்கினை ஏற்படுத்தும்.





தயிர் சாப்பிட்டால் குழந்தைகளுக்குச் சளி பிடிக்கும் என்பது தவறு. குழந்தைக்குத் தயிர் மிகவும் நல்ல உணவு. தயிரில் “புரொபயோட்டிக்” எனும் சத்து அதிகம். அது குடலுக்கு மிக நல்லது. குழந்தைக்கு அலர்ஜி வராமல் தடுக்கும்.

தினசரி சிறு துண்டு அன்னாசியை தேனில் ஊற வைத்து, அந்தத் தேனை இரண்டு வாரம் சாப்பிட்டால் கல்லீரல் ஆரோக்கியமாக இருக்கும்.



# ஆரோக்கியத்தில் முக்கியப் பங்காற்றும் ‘மெக்னீசியம்’




மெக்னீசியம் மனித உடலில் எலும்பு வலிமை, இதய ஆரோக்கியம் மற்றும் சரியான தசை செயல்பாடு ஆகியவற்றை பராமரிக்கத் தேவையான ஒரு முக்கியமான கனிமம் ஆகும். இந்த சத்து குறைந்தால், உடலில் பல பிரச்சினைகள் ஏற்படும்.

## அறிகுறிகள்

- ஒருவருக்கு உடலில் மெக்னீசியம் குறைவான அளவில் இருந்தால் அவருக்கு அடிக்கடி உடலில் தசைப்பிடிப்பு ஏற்படும். மெக்னீசியம் தசைகளின் சுருக்கத்தையும் தளர்வையும் கட்டுப்படுத்துகிறது. புரதத்தை ஒருங்கிணைப்பதன் மூலம் தசைகளை வலிமையாக்குகிறது. ஆனால், மெக்னீசியம் குறையும் போது ‘எலக்ட்ரோலைட்’ சமநிலையை சீர் குலைத்து விடுகிறது. அதனால் அடிக்கடி தசைப்பிடிப்பு ஏற்படும்.
- உடலின் வளர்சிதை மாற்றத்திற்கும் ஆற்றலுக்கும் மெக்னீசியம் மிகவும் முக்கியமானது. உடல் தேவையான அளவு மெக்னீசியம் உற்பத்தி செய்யவில்லையானால், உடல் சோர்வும் பலவீனமும் அடைகிறது.
- குறைந்தளவு மெக்னீசியம் உயர் இரத்த அழுத்தத்தை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், இதய நோய்களின் அபாயத்தையும் அதிகரிக்கிறது.
- ஒஸ்டியோபோரோசிஸ் ஏற்படலாம். இது எலும்புகளை பலவீனப்படுத்துகிறது மற்றும் எலும்பு முறிவு அபாயத்தை அதிகரிக்கிறது.
- மெக்னீசியம் குறைபாடு இரத்தத்தில் கல்சியத்தின் அளவைக் குறைக்கிறது. பலவீனமான எலும்புகளை ஏற்படுத்துகிறது. ஒழுங்கற்ற இதயத் துடிப்பு உடலில் மெக்னீசியம் அளவு குறையும்போது ‘வென்ட்ரிக்கிள்’ சுருக்கங்களை ஏற்படுத்துகிறது. இது ஒழுங்கற்ற இதயத்துடிப்பை ஏற்படுத்துகிறது. மார்பு வலி, மூச்சுத்திணறல், தலை சுற்றல் போன்றவையும் இதன் அறிகுறிகள் ஆகும்.
- உடலில் போதுமான அளவு மெக்னீசியம் இல்லாதபோது தூக்க – விழிப்பு சுழற்சியை கட்டுப்படுத்தும் ‘மெலடோனின்’ ஹோர்மோனையும் சீர்குலைக்கிறது. நரம்பு செயல்பாடு சரியாக நடைபெறாததால் மூளை மற்றும் உடலைத் தளர்த்துவது பாதிக்கப்படுகிறது.
- தலைவலி, பசியின்மை, குமட்டல் மற்றும் வாந்தி ஆகியவை ஒற்றைத் தலைவலியால் ஏற்படும் பொதுவான மெக்னீசியம் குறைபாடு அறிகுறிகள் ஆகும்.



“அந்த டொக்டர் போலிஎண்டு கண்டுபிடிச்சிட்டியா... எப்படி?”

‘கால்ல வெடிப்பு இருக்குனு சொன்னதுக்கு, உள்ளே போய் ‘கம்’ போத்தலை எடுத்துட்டு வந்து ஒட்டப் பாக்குறாரு.”

# வலியை குறைக்கும் ‘மிளகாய் தேநீர்’

கோப்பி மற்றும் தேநீர் வகைகளில், வாசனைக்காக அவற்றுடன் பல வகை மூலிகைகள் சேர்த்து தயாரித்து அருந்தி வருவது பரவலாக எல்லா இடங்களிலும் நடைமுறைக்கு வந்துள்ளது. அதில் மற்றொரு வகையாக சமீபத்தில் ‘சில்லி டீ’ அதாவது மிளகாய் தேநீர் அறிமுகமாகியுள்ளது. இது வழக்கமான அமைதியான குணம் கொண்ட சாதாரண தேநீருடன் சேரும்போது ஒரு தனித்துவமான அதிக சக்தி அளிக்கக் கூடிய ஓர் உக்கிரமான பானமாக உருவெடுக்கிறது. இதன் மாறுபட்ட சுவை மற்றும் இதிலிருக்கும் ஆரோக்கிய நன்மைகளுக்காக பலர் இதை விரும்பி ருசிக்க ஆரம்பித்துள்ளனர்.

பாரம்பரிய ‘பிளெக்’ அல்லது ‘க்ரீன்’ டீயுடன் மிளகாய்களை சேர்த்து, வழக்கமான இஞ்சி, ஏலக்காய் மற்றும் பட்டை போன்றவற்றை, வாசனைக்காக சேர்த்து, தேநீர் தயாரிக்கையில் சூடான காரசார சுவையுடன் ஓர் அற்புதமான தேநீர் கிடைக்கிறது.

இது, ஆர்த்ரைடிஸ் மற்றும் தசையில் கோளாறு உண்டானதால் வரும் நாள்பட்ட வலிகளால் துன்புறுவோர்களுக்கு நல்ல நிவாரணம் அளிக்க உதவுகிறதாம்.



மிளகாயிலுள்ள ‘கெப்சைசினின்’ தலையீட்டால் பாதிக்கப்பட்டவர்கள் வலியின்றி நடமாட முடிகிறது என கண்டறியப்பட்டுள்ளது.

## தொலைபேசி உரையாடல் ஆதாரங்களை

# மறைத்து வைக்கும் மர்மம் துலங்குமா?




**தாஜுதீன் கொலை வழக்கு முடிவுக்கு வர வேண்டிய சந்தர்ப்பத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ராஜபக்ஷர்கள் மீதிருந்த நட்பின் காரணமாக வழக்கை இழுத்தடிக்க, மழுங்கடிக்க, திசை திருப்ப தேவையான நடவடிக்கைகளை ரணில் மேற்கொண்டதாகவும் அவர் மீது குற்றச் சாட்டுக்கள் உள்ளன .**



வசீமினின் கொலை வழக்கில் பல ஆதாரங்கள் இவ்வாறு மூடிமறைக்கப் பட்டாலும் பிரேத பரிசோதனையை நடத்திய கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியாக இருந்த ஆனந்த சமரசேகர மற்றும் இந்த கொலையுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையவர் என கருதப்படும் அநுர சேனாநாயக்க (தற்போது உயிருடன் இல்லை) இருவரும் தான் ஆதாரங்களை மூடி மறைப்பதில் பெரும் பங்களிப்பை செலுத்தியதாக கூறப்பட்டது. மேற்குறித்த இருவரும் அடிக்கடி தொலைபேசி வாயிலாக அதிக நேரம் உரையாடியிருந்த ஆதாரங்களும் கிடைத்திருந்ததாக அந்நாட்களில் பேசப்பட்டதுடன் பல ஊடகங்களில் செய்திகளாகவும் அவை வெளியாகியிருந்தன.

**இந்த சம்பவத்துடன் ராஜபக்ஷர்களின் தொடர்புகள் சம்பந்தமாக கண்டறிவதற்கான ஆதாரத்திற்கு தொலைபேசி உரையாடல்கள் மிக முக்கியத்துவத்தை பெறுகின்றது என கூறப்படுகின்றது**







இந்நிலையில் தான் இதை ஆதாரபூர்வமாக நிரூபிப்பதற்காக 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர், குற்றப்புலனாய்வு திணைக்களம் குறித்த பிரபல தொலைபேசி வலையமைப்பு நிறுவனத்துக்கு ஒரு கோரிக்கையை முன்வைத்திருந்தது. அதாவது, சட்ட வைத்திய அதிகாரியாக இருந்த ஆனந்த சமரசேகர மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் அநுர சேனாநாயக்க ஆகியோரின் தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பான விபரங்களை கோரியிருந்தது.

அந்நாட்களில், குறித்த வலையமைப்பு நிறுவனத்தின் தலைவராக பணியாற்றிய ஹான்ஸ் விஜேசூரிய, அதை மூடி மறைப்பதற்கு முயற்சி எடுத்ததாகவும் இவர் ராஜபக்ஷர்களுக்கு சார்பானவர் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது. இவர் தான் தற்போது டிஜிட்டல் பொருளாதாரத்திற்கான ஜனாதிபதியின் ஆலோசகராக கடமையாற்றுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக கடந்த டிசம்பர் மாதம் 4ஆம் திகதி நாடாளுமன்றில் முஜிபூர் ரஹ்மான் குற்றஞ்சாட்டியிருந்தார். இதற்கு ஆளுங்கட்சியின் பிரதம கொரடா நளிந்த ஜயதிஸ்ஸ பதிலளிக்கையில் "ஹான்ஸ் விஜேசூரிய மீது தனிநபர் தாக்குதல் நடத்துவது போல நாடாளுமன்றில் பேசப்படுகின்றது. எந்தவிதமான எதிர்பார்ப்புகளும் இன்றி, சம்பளம் – சலுகை ஏதுமின்றி சேவை நோக்கத்தில் தான் அவர் இந்த கடமையை பொறுப்பேற்றுள்ளார்" எனவும் நளிந்த ஜயதிஸ்ஸ பதிலளித்திருந்தார். மேலும், அந்நாட்களில் பேசப்பட்ட தொலைபேசி உரையாடல்கள் அனைத்தும் தற்போது தமக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். ஆனால், அந்த தொலைபேசி அழைப்புகள் புதியதா அல்லது பழைய தரவுகளா என்பது தொடர்பில் யாருக்கும் தெரியாது.

நளிந்த ஜயதிஸ்ஸவின் கருத்துப்படி, தொலைபேசி உரையாடல்கள் எந்த காலகட்டத்துக்குரிய தரவு என்பதன் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனவும் தற்போது எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, முஜிபுர் ரஹ்மான், 2015 ஆம் ஆண்டு மைத்ரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த சந்தர்ப்பத்தில் மங்கள சமரவீர, ராஜித சேனாரத்ன ஆகியோர் குறித்த தொலைபேசி வலையமைப்பு நிறுவன முக்கியஸ்தர்களை அழைத்து அச்சுறுத்தும் விதமாக அழுத்தம் கொடுத்ததாக அவர் நாடாளுமன்றில் தெரிவித்ததையும் காணமுடிந்தது.

இந்த வழக்கை பொருத்தவரை தொலைபேசி உரையாடல்கள் மிகவும் முக்கியமானவையாக கருதப்படுகின்றது. மேலும், தாஜுதீனின் உடற்கூற்று பரிசோதனை தொடர்பில் எவ்வாறு போலியான அறிக்கை தயாரிக்கப்பட்டது என்பது குறித்தும் அநுர சேனாநாயக்க என்னவெல்லாம் கூறியிருப்பார் என்பது குறித்தும் மேற்படி தொலைபேசி உரையாடல்கள் மூலம் அறிந்து கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதைத் தவிர இந்த சம்பவத்தில் ராஜபக்ஷர்களின் தொடர்புகள் சம்பந்தமாக கண்டறிவதற்கான ஆதாரத்திற்கு இந்த தொலைபேசி உரையாடல்கள் மிக முக்கியத்துவத்தை பெறுகின்றது. அதிலும், குறிப்பாக ஷிரந்தி ராஜபக்ஷவின் சாரதியாக செயற்பட்ட ஒரு நபரும் தாஜுதின் கொலையில் நேரடியாக செயற்பட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டுக்கள் நிலவுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவர் ஒரு முன்னாள் இராணுவ வீரர் எனவும் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் ஒரு முன்னாள் பாதுகாவலர் எனவும் அந்நாட்களில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

குறித்த நபர் சம்பவம் நடந்த இடத்துக்கும் சென்றிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது. அதை ஆதாரங்களுடன் கண்டறியவும் இந்த தொலைபேசி உரையாடல் உதவியாக இருக்கும் எனவும் நம்பப்படுகின்றது.

மேலும், நாம் முன்னர் கூறியது போல ஜனாதிபதி செயலகத்தில் இருந்து பல அழைப்புகள் பல பிரமுகர்களுக்கு சென்றுள்ளதாக குறிப்பிட்டிருந்தோம் அல்லவா?, சில வேளைகளில் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியது அந்த அழைப்புக்களாகவும் இருக்கலாம் என கருத முடியும்.

தாஜுதீன் கொலை வழக்கை பொருத்தவரை கொலையாளியே இல்லாமல் ஒரு கொலை நடந்திருப்பது பாரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது அல்லவா?

இந்த வழக்கில் ரணில் விக்கிரமசிங்கவும் ஒரு பேசுபொருள்தான். அவர் ரணில் ராஜபக்ஷ என அழைக்கப்படுவதற்கும் ஒரு காரணம் உண்டு என்றே கூறவேண்டும். கிட்டத்தட்ட தாஜுதீன் கொலை வழக்கு முடிவுக்கு வர வேண்டிய சந்தர்ப்பத்தில் ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷர்கள் மீதான நட்பின் காரணமாக வழக்கை இழுத்தடிக்க, மழுங்கடிக்க, திசைதிருப்ப தேவையான நடவடிக்கைளை மேற்கொண்டதாகவும் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் இருப்பதாக கூறப்படுகின்றது.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் சாதாரண ஆட்கள் யாரும் கூறும் குற்றச்சாட்டும் கிடையாது. மாறாக, ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிகாலத்தில் அமைச்சர்களாக இருந்த நபர்களே இந்த குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும், எந்த ஆட்சியாக இருந்தாலும் அங்கு நடக்கும் ஊழல்களை தைரியமாக சபையில் பேசி அதிர்வலைகளை ஏற்படுத்திய அநுர குமார திசாநாக்க ஆட்சி அமைத்திருக்கும் இந்த காலகட்டத்தில் தாஜுதீன் கொலை வழக்கிற்கு ஒரு நீதி கிடைக்காவிடின் வேறு எந்த ஆட்சியிலும் இந்த வழக்கிற்கு தீர்வு என்பது கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது.

ஆகவே, மீண்டும் பேசுபொருளாகிய தாஜுதீன் கொலை வழக்கின் மூலம் அவர்களின் குடும்பத்தாருக்கும் இந்த வழக்கில் நீதி தேடி அலைவோருக்கும் வெகுவிரைவில் ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என இறைவனை பிரார்த்தித்து தொடரை நிறைவு செய்கின்றோம்.

**- வெல்க அறம்!!**

# அதிக விலைக்கு விற்கப்பட்ட மனிதப் பல்



உலகிலேயே அதிக விலைக்கு விற்கப்பட்ட மனிதனின் பல் பற்றி கேள்விப்பட்டுள்ளீர் களா ..? ஆச்சரியமான தகவல் தான்.. ஆனாலும் அது உண்மையே .. இந்தப் பல் விலைமதிப்புமிக்கதாக அமைந்தமைக்கான காரணம், இந்த பல் சேர் ஐசக் நியூட்டனுக்கு சொந்தமானது என்பதாலாகும். கிட்டத்தட்ட சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர்தான் இந்த பல் இவ்வாறு விற்கப்பட்டுள்ளது.



இந்த தகவலின்படி 1816 ஆம் ஆண்டில் தான் சேர் ஐசக் நியூட்டனின் பற்களில் ஒன்று லண்டனில் 3,633 அமெரிக்க டொலருக்கு விற்கப்பட்டுள்ளது. இன்றைய விலைப்படி இன்று இதனை சுமார் 35,700 அமெரிக்க டொலர்களுக்கு சமமாக கருத முடியும். அதாவது இந்திய மதிப்பில் சுமார் ரூ.30.32 லட்சம் ஆகும்.

இதுவரை விற்கப்பட்டவற்றில் அதிக விலை கொண்ட பல் இது என்று கின்னஸ் உலக சாத னையால் உத்தியோகப்பூர்வமாக அங்கீகரி க்கப்பட்டுள்ளது. வரலாற்றில் மிகவும் புகழ்மிக்க விஞ்ஞானிகளில் ஒருவரான சேர் ஐசக் நியூட்டன் 1726 இல் காலமானார். இவர் புவியீர்ப்பு விதியைக் கண்டுபிடித்ததில் புகழ் பெற்றவர் என்பது அனைவரும் அறிந்ததே.

# அறுவை சிகிச்சையின் போது மருத்துவர்கள் பச்சை நிற ஆடையை அணிவது ஏன்?



அறுவை சிகிச்சைகள் பொதுவாக தனியான அறையிலேயே நடைபெறுவதுண்டு. வெளிச்சம் நிறைந்த இடத்திலிருந்து இருண்ட அறைக்குள் நுழையும்போது பச்சை அல்லது நீல நிறம் பொருத்தமாக இருக்கும். இந்த விதியை தான் அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்களும் பயன்படுத்துகின்றனர். அதாவது, பச்சை மற்றும் நீல நிறங்கள் ஒளியின் நிறமாலையில் சிவப்பு நிறத்திற்கு எதிரே உள்ளது. இதனால்தான் பச்சை நிறத்திலான ஆடைகளை அவர்கள் அணிகின்றார்கள்.

இதை சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால், அதாவது, துணியின் பச்சை மற்றும் நீல நிறங்கள் ஒரு அறுவை சிகிச்சை நிபுணரின் பார்வை திறனை அதிகரிக்கின்றன. மேலும், பச்சைத் துணி அறுவை சிகிச்சையின் போது கண்ணுக்கு சிறிது ஆறுதல் அளிக்கிறது. இது சிகப்பின் எதிரொலிப்பை தவிர்க்க உதவுகிறது. மேலும், உலகின் முதல் அறுவை சிகிச்சை நிபுணரின் நூலில் கூட பச்சை நிறத்தைப் பயன்படுத்துவது பற்றி கூறப்பட்டுள்ளது என மருத்துவ தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாகவே மருத்துவர்கள் நீண்ட காலமாக நீலம் அல்லது பச்சை நிற சீருடைகளை அணிகின்றனர். இதற்கு முன்னர் கடந்த காலங்களில், மருத்துவர்கள் வெள்ளை ஆடை அணிந்தே சத்திர சிகிச்சை செய்திருந்தனர். இந்த நடைமுறையை தான் 1914 இல் மருத்துவர் ஒருவர் மாற்றியுள்ளார். அதற்கமைய, அவர்தான் அறுவை சிகிச்சையின் போது பச்சை ஆடை அணியும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளார். அன்றிலிருந்து அறுவை சிகிச்சையின் போது பச்சை ஆடை அணிவது வழக்கத்திற்கு வந்தது.

# மிரட்டும் 'விடாமுயற்சி' ட்ரெய்லர்!




அஜித்குமார் நடித்துள்ள விடாமுயற்சி திரைப்படத்தின் டிரெய்லர் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

மகிழ் திருமேனி இயக்கத்தில் அஜித் நடித்துள்ள திரைப்படம் விடாமுயற்சி. இப்படத்தில் அஜித் உடன் திரிஷா, ரெஜினா கசான்ட்ரா, ஆரவ், அர்ஜுன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார்.

ஓம் பிரகாஷ் ஒளிப்பதிவு செய்துள்ள இப்படத்தின் டீசர் வெளியாகி இரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. இப்படத்திற்கு சென்சார் குழு 'யூஏ' சான்றிதழ் வழங்கியது. இந்த நிலையில், விடாமுயற்சி படத்தின் ட்ரெய்லர் தற்போது வெளியாகியுள்ளது. ட்ரெய்லரின் தொடக்கத்தில் அஜித் மற்றும் திரிஷா உடனான காதல் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. பின்பு ரெஜினா கசான்ட்ரா, அர்ஜுன், ஆரவ் உள்ளிட்டோரின் காட்சிகள் இடம்பெற விறுவிறுப்பாக நகர்ந்து அதிரடியான சண்டை மற்றும் கார் சேசிங் காட்சிகள் வருகின்றன.

இதற்கிடையே, விடாமுயற்சி வருகிற பெப்ரவரி 6ஆம் திகதி வெளியாகும் என அதிகார்வ பூர்வ தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வசூல் மழையில் 'வணங்கான்'



நடிகர் அருண் விஜய், நடிப்பில் சமீபத்தில் வெளிவந்து மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ள திரைப்படம் வணங்கான்.

பாலா இயக்கத்தில் வெளியான இப்படத்தில் அருண் விஜய்யின் நடிப்பு வித்தியாசமாக இருந்தது. மேலும் அவர் மாற்றுத்திறனாளியாக நடித்து அனைவரின் பாராட்டுகளையும் பெற்றுள்ளார். அருண் விஜய்யின் நடிப்பு பல சினிமா நட்சத்திரங்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. இவரை தவிர்த்து படத்தில் அறிமுக நடிகைகளான ரோஷினி மற்றும் ரிதா ஆகியோர் நடிப்பும் பாராட்டப்பட்டது.

இந்நிலையில், விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் வெற்றி பெற்று வரும் வணங்கான் திரைப்படம், உலகளவில் 6 நாட்களில் செய்துள்ள வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் உலகளவில் 6 நாட்களில் ரூ. 7 கோடி வசூல் செய்துள்ளது என படக்குழு அதிகாரபூர்வ தகவல் வெளியிட்டுள்ளது.

# காதல் குறித்து நடிகை அனுபமா



மலையாளம், தெலுங்கு சினிமாவில் பிரபல நடிகையாக இருப்பவர் அனுபமா பரமேஸ்வரன். நிவின்பாலி நடிப்பில் மலையாளத்தில் வெளியான ப்ரேமம் படத்தின் மூலம் இரசிகர்கள் மத்தியில் பிரபலமானவர். இப்படத்தைத் தொடர்ந்து இவர் தமிழில் தனுஷ் நடிப்பில் 2016ஆம் ஆண்டு வெளியான கொடி படத்தில் நாயகியாக நடித்திருந்தார். அதை தொடர்ந்து, 'சைரன்' படத்தில் ஜெயம் ரவியின் மனைவியாகவும் அனுபமா நடித்திருந்தார்.

இந்த படத்திற்கு இரசிகர்கள் கலவையான விமர்சனமே கொடுத்தனர். இந்நிலையில், காதல் குறித்த கேள்விக்கு அனுபமா கூறிய பதில் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. அதில், "எப்போதும் உன்னை காதலிக்கிறேன் என்ற வார்த்தை ஒரு மிகப்பெரிய பொய். என் உயிரே நீதான், நீ இல்லாமல் நான் இல்லை என்று சொல்லக்கூடிய ஒரு நச்சுக் காதலில் மாட்டிக்கொண்டு இருப்பவர்கள் எல்லோரும் உடனே அந்த காதலில் இருந்து விலகி விடுங்கள். இது எனது அறிவுரையாக எடுத்துக் கொள்ளுங்கள்" என்று தெரிவித்துள்ளார்.

## புதிய காணொளி வெளியிட்ட

# ஜெயிலர் 2




சன் பிக்சர்ஸ் மிகப் பிரமாண்டமான முறையில் தயாரிக்க, லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் 'கூலி' படத்தில் ரஜினிகாந்த் நடித்து வருகிறார். இதையடுத்து சன் பிக்சர்ஸ் சார்பில், சன் டி.வி நெட்வொர்க் தலைவர் கலாநிதி மாறன் மிகப் பிரமாண்டமான முறையில் தயாரிக்க, நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடிக்கும் 'ஜெயிலர் 2' படத்தின் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதையொட்டி இப்படத்துக்கான புரமோ வீடியோவை படத்தயாரிப்பு நிறுவனம் வெளியிட்டது. ஏற்கனவே சன் பிக்சர்ஸ் மிகப் பிரமாண்டமான முறையில் தயாரித்து, நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடித்து வெளியான 'ஜெயிலர்' படம் மாபெரும் வெற்றிபெற்று, வசூலிலும் மகத்தான சாதனை படைத்திருந்தது. இந்நிலையில், 'ஜெயிலர் 2' படத்தின் புரமோ வெளியாகியுள்ளது. இந்த காணொளியில் நெல்சன் திலீப்குமார், இசை அமைப்பாளர் அனிருத் ஆகியோர் பெஞ்சல் புயல் குறித்து பேசிக் கொண்டிருக்கும்போது, திடீரென்று அந்த அறைக்குள் நடக்கும் துப்பாக்கிச்சூடுக்கு பிறகு புயல் வேகத்தில் நுழைகிறார் ரஜினிகாந்த். பிறகு அவர்களை (அனிருத், நெல்சன்) பார்த்து சைகையில் வில்லன் கூட்டம் எங்கே என கேட்கிறார். அவர்களும் சைகை செய்கிறார்கள். அங்கு செல்கிறார். பிறகு ரஜினிகாந்த் வீசிவிட்டு செல்லும் கையெறி குண்டு வெடிப்பு காரணமாக அந்த இடமே புகைமண்டலமாக மாறுகிறது. 2ம் பாகத்திலும் அதிரடி காட்சிகள் அனல் பறக்கும் என்று தெரிகிறது. தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் புரமோ வீடியோ வெளியாகியுள்ளது. இதனால் இரசிகர்கள் அதிக உற்சாகமடைந்து, புரமோ வீடியோவை வெளியிட்டு வைரலாக்கி வருகின்றனர்.

# விதார்த் ஜோடியானார் 'ரக்ஷனா'




அருவர் நிறுவனம் சார்பில் சி. வெங்கடேசன் தயாரிப்பில், விதார்த் நடிப்பில், இயக்குநர் வி.கஜேந்திரன் இயக்கத்தில், விவசாயியின் வாழ்வியலை, விவசாய நிலத்தின் அவசியத்தை அழுத்தமாகப் பேசும் படைப்பாக உருவாகியுள்ள திரைப்படம் 'மருதம்'.

விரைவில் திரைக்குவரவுள்ள இப்படத்தின் முதற்காட்சி போஸ்டர், பொங்கலையொட்டி வெளியிடப்பட்டது. இன்றைய காலகட்டத்தில் ஒரு விவசாயி சந்திக்கும் பிரச்சினைகளை, கைவிட்டுப்போகும் அவனது நிலத்திற்கும் அவனுக்குமான உறவை, சமூக அக்கறை மிக்க அழுத்தமான படைப்பாக இப்படம் உருவாகியுள்ளது.

இப்படத்தில் முதன்மை கதாப்பத்திரத்தில் விதார்த் நடித்துள்ளார். ரக்ஷனா அவருக்கு ஜோடியாக நடித்துள்ளார். அருள் தாஸ், மாறன், சரவணன் சுப்பையா, தினந்தோறும் நாகராஜ், மாத்யூ வர்கீஸ் ஆகியோர் முக்கிய கதாப்பாத்திரங்களில் நடித்துள்ளனர். என்.ஆர்.ரகுநந்தன் இசையமைத்துள்ளார். அருள் சோமசுந்தம் ஒளிப்பதிவு செய்துள்ளார். சந்துரு பி. படத்தொகுப்பு செய்துள்ளார்.







இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.